மாலை 48 மணி 5 மே 2006 விலை ரூ10

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில்

திருவேற்காடு, சென்னை - 77

website : www.thiruverkadukarumari. com
e-mail : sridevikarumariamman@sancharnet.in

இத்திருக்கோயிலில், கருவறை விமானம், கொடிமரம் மற்றும் இராஜகோபுரக் கலசங்களுக்குத் தங்கம் போர்த்தும் திருப்பணி கடந்த 5.5.2005 அன்று துவங்கப் பெற்று கடந்த 3.4.2006 அன்று திருக்குடமுழுக்கும் மிகச்சிறப்பாக நடைபெற்றுள்ளது.

மண்டலாபிடேகம் நடைபெறுதல்

அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் சென்ற *3.4.2006* அன்று திருக்குடமுழுக்கு விழா நடைபெற்று மறுநாளிலிருந்து தினசரி தொடர்ந்து காலை *11* மணிக்குத் தேவி கருமாரியம்மனுக்கு மண்டலாபிடேகம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அனைவரும் வருக! அன்னையின் திருவருள் பெறுக!

அறக்கட்டளை பதிவு செய்தல்

ஆங்கிலப் புத்தாண்டு விழா, தைப்பூசவிழா, சித்ரா பௌர்ணமி திருவிழா, ஆடித்திருவிழா மற்றும் பிரம்மோற்சவத் திருவிழா போன்ற விழாக்களில் கலந்து கொள்ளும் உபயதாரர்கள் ஒவ்வொரு ஆண்டும் கட்டணத் தொகை செலுத்துவதற்குப் பதிலாக அறக்கட்டளை வைப்புத் தொகையாகத் திருக்கோயிலுக்குச் செலுத்தி விழா நன்முறையில் நடைபெற ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பௌர்ணமி தோறும் வலம்புரி சங்காபிடேகம்

இத்திருக்கோயிலில் பௌர்ணமி தோறும் உச்சிக் காலத்தில் (*11.00* மணிக்கு) அருள்மிகு தேவி கருமாரியம்மனுக்கு *108* வலம்புரி சங்கு அபிடேகம் செய்வது மிகவும் சிறப்பானது. *108* வலம்புரி சங்காபிடேகம் செய்யக் கட்டணம் ரூ.*2001/-* பக்தர்கள் *108* வலம்புரி சங்காபிடேகம் செய்து அம்மனின் அருள் பெற்றுய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கோடி தீபம் ஏற்றுதல்

இத்திருக்கோயிலில் ''கோடி தீபம் ஏற்றுதல்'' நடைபெற்று வருகிறது. ஒரு தீபம் ஏற்ற கட்டணம் ரூ.*2/-* கோடி தீபம் ஏற்றித் தேவி கருமாரியின் திருவருள் பெறுவோம்.

மா.கவிதா,பி.எல்.,
துணை அணையர்/நிர்வாக அதிகாரி

எம்.நந்தகோபால்
அறங்காவலர் குழுத்தலைவர்

பா.சீனிவாசன், மு.உதயகுமார், ஜி. திருநாவுக்கரசு, திருமதி சந்திராராஜா
அறங்காவலர்கள்

திருக்கோயில்

திருவள்ளுவர்	ஆண்டு 2037	விய- வைகாசி
மாலை 48	மணி 5	மே 2006

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

இந்த இருபதாம் நூற்றாண்டைச் சமத்துவக் காலம் என்று பரவுகின்றோம். இதனைக் கி.பி. 12 ஆம் நூற்றாண்டிலேயே உணர்ந்து, தெளிந்து உலகம் யாவும் சகோதரத்துவத்துடன்வாழ மாபெரும் சமத்துவக் காவியமாகவே பெரியபுராணத்தை ஆக்கிப் பெருமை கொண்டுள்ளார் நம் சேக்கிழார் பெருமான்.

சிவபெருமானின் திருவடிகளை வழிபட்டு உய்யும் நற்பேறுடைய அருளாளர் ஆகிய சிவனடியார்களிடையே குலம் பற்றிய உயர் தாழ்வுக்கு ஒரு சிறிதும் இடம் இல்லை.

''எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்

மன்னிய சீர் சங்கரன்தாள் மறவாமை பொருள்''

என வாழ்ந்த இறையடியார்கள் எல்லோரும் நாம் பிறந்த பண்டைக் குலத்தின் தொடர்பினை அறுத்து, இறைவனுக்கே தொண்டுபட்ட தொண்டர் குலத்தினர் ஆவார்கள்.

சிவனடியார்கள் அந்தணர் ஆயினும், புலையர் ஆயினும்,வேந்தர் ஆயினும், வேடுவர் ஆயினும், வணிகர் ஆயினும், வேளாளர் ஆயினும், ஏகாலியர் ஆயினும், இடையர் ஆயினும், பாணர் ஆயினும் பரதவர் ஆயினும், சான்றோர் ஆயினும், செக்கார் ஆயினும் அவர்களில் வேற்றுமை கிடையாது. அனைவரும் சமம். இத்தகைய சமத்துவத்தைச் சாற்றும் ஒப்பற்ற தமிழக வரலாற்றுப் பண்பாட்டுக் காவியம் பெரியபுராணம் ஆகும்.

''தொண்டர் சீர்பரவுவார்'' நம் தெய்வச் சேக்கிழார் ஈன்ற நம் தமிழ் மண்ணின் பெருமையே பெருமை. பொன்னம்பலக் கூத்தன் **''உலகெலாம்''** என அடி எடுத்துக் கொடுக்க உலகெலாம் உய்ய பெரிய புராணம் பாடியருளிய பெரும்புகழ் தெய்வச் சேக்கிழார் பொன்னம்பலவன் பொன்னடிகள் அடைந்த புண்ணியத்திருநாள் வைகாசி பூசத்திருநாள் ஆகும். இந்நன்னாளில் சேக்கிழாரின் திருப்புகழ் போற்றிப் பரவிப் புண்ணியம் நாமும் பெற்று உய்வோமாக!

அண்மையில் சென்னையில் நுங்கம்பாக்கம் அகத்தீஸ்வரர் ஆலயத்தில் **பேராசிரியர் அரங்க.இராமலிங்கம்** அவர்கள் பெரிய புராணத் தொடர்ச் சொற்பொழிவை 108 வாரங்கள் நிகழ்த்திய நிறைவு விழா மிகச் சிறப்பாக நடந்தேறிய போது அவ்விழாவில் பங்கேற்ற ஆன்றோர்கள், சான்றோர்கள் யாவரும் அறநிலையத் துறை ஞானப் பூசையாக - ஞானவேள்வியாக நிகழ்த்திவரும் இத்தகைய ஆன்மீகச் சொற்பொழிவுகளைப் பெரிதும் பாராட்டியுரைத்தது என்னைப் பெரிதும் மகிழவைத்தது.

இவ்வாண்டு வைகாசிப் பூசத் திருநாளில் சேக்கிழார் குருபூஜை விழாவை மகத்தான முறையில் அவர் அவதாரத் தலமான குன்றத்தூரிலும், அறுபத்து மூவர்விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் மயிலாப்பூரிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாட அறநிலையத்துறை ஆவனச் செய்துள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வழக்கமாய் இடம் பெறும் அத்தனைச் சிறப்பு அம்சங்களும் பொருந்தி வெளிவரும் **இந்த மே மாதத் 'திருக்கோயில்'** இதழும் வழக்கம்போல் உங்களைப் பெரிதும் மகிழ்விக்கும் என நம்புகின்றேன். படித்துப் பயன்பெற வேண்டுகின்றேன்.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

தெய்வச் சேக்கிழார் வாழ்வும் வாக்கும்

சேக்கிழார் புராணம் பாடியுள்ள கொற்றவன் குடி உமாபதி சிவம் அவர்கள், சேக்கிழார் பெருமான் வான்மீகி முனிவரை விடவும், வேதவியாசரை விடவும், ஆதிசேடனை விடவும், அகத்தியரை விடவும் மிகப்பெருமை உடையவர் எனப் போற்றியிருப்பது இங்கு நாம் நினைந்து மகிழத்தக்கது.

''மதுர இராமாயண கதை உரைசெய்த
வான்மீகி பகவனும் ஒப்பல்ல;
விதிவழி பாரதம் உரை செய்து கரை செய்த
வேத வியாதனும் ஒப்பல்ல;
சிதைவற ஆயிர நாவுடன் அறிவுள
சேட விசேடனும் ஒப்பல்ல

''தூக்குசீர்த் திருத்தொண்ட தொகைவிரி
வாக்கினாற் சொலவல்ல பிரான் எங்கள்
பாக்கியப் பயனாப் பதி குன்றைவாழ்
சேக்கிழானடி சென்னி இருத்துவாம்''

என்று மாதவ சிவஞானமாமுனிவர் சேக்கிழார் பெருமானைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

''பக்திச்சுவை நனிசொட்டச் சொட்ட பாடிய கவிவலவ'' என மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தாம் பாடியுள்ள சேக்கிழார் பிள்ளைத்தமிழ் நூலில் சேக்கிழாரைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்திருக்கவும் காணுகின்றோம்.

அழகாம்பிகை சேக்கிழார் பாலறாவாயர்

இதழின் உள்ளே ....

1. தெய்வச் சேக்கிழார் வாழ்வும் வாக்கும் 2
2. திருவேற்காடு அருள்மிகு வேதபுரீஸ்வரர் மற்றும் தேவிகருமாரியம்மன் திருக்கோயில் திருக்குடநீராட்டு விழா வைபவம் 5
3. நாதனுக்கு ஊர், நமக்கு ஊர், நாவலூர் - அழ. முத்துப்பழநியப்பன் 9
4. அறுபத்து மூவர் விழா ஆனந்தம் - ''எழுத்துச் சித்தர்'' பாலகுமாரன் 11
5. காலச்சுவடுகள் - கலெக்டர் பிளேசுதுரை கட்டித்தந்த தாயார் சந்நிதி 14
6. மகாபாரதம் - முனைவர் த. அமிர்தலிங்கம் 16
7. திருவிளையாடல் புராணம் - இரா. அரங்கசாமி 22
8. சித்ரா பௌர்ணமியும் சித்திரகுப்தப் பூசையும் - மீனாட்சி கோகுலவாசன் 24
9. கேள்வி - பதில் 25
10. மூதுரை காட்டும் முதுநெறிகள் - பு.ஏ. இராமையா, இ.ஆ.ப. 26
11. கங்கையினும் சிறந்தது காவேரி - தா. சந்திரசேகரன், இ.ஆ.ப. 28
12. தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - சட்டைமுனி - முனைவர் இரா. செல்வக் கணபதி 31
13. பிறவாமைக்கு வழி 32
14. இப்பிறவியில் இருமாதரைத் தொடேன் என்ற இராமபிரான் - மு. அருணகிரி 33
15. தேரழுந்தூர் ஆமருவியப்பர் - ஏ. கிருஷ்ணன் 34
16. கேசவன் என்ற திருநாம மகிமை 36
17. திருக்கல்யாணத் திருவிழா தத்துவம் 37
18. அழகர் ஆற்றில் இறங்கும் திருவிழா 39

பெரிய புராணம் 108 வாரத் தொடர்ச் சொற்பொழிவு நிறைவுவிழா

சென்னை நுங்கம்பாக்கம் அருள்மிகு அசுத்தீசுரர் திருக்கோயில் பெரிய புராணம் 108 வாரம் தொடர்ச் சொற்பெழிவு நிறைவுவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.

108 வாரங்கள் சிறப்புறச் சொற்பொழிவுக்ள நிகழ்த்திய சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் **அரங்க.இராமலிங்கம்** அவர்களுக்கு நம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை **ஆணையாளர் திருமிகு த.பிச்சாண்டி இ.ஆ.ப.** அவர்கள் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்கள்.

தமிழ்நாடு மாநில தகவல் ஆணையர் **திருமிகு ஜி.இராமகிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு).** சென்னைப் பல்கலைக்கழகத் **துணைவேந்தர் டாக்டர் ச.ப.தியாகராஜன்,** தமிழ்ப்பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் **பேராசிரியர் டாக்டர் இ.சுந்தரமூர்த்தி, முனைவர் இரா. செல்வக்கணபதி, முனைவர் தெ.ஞானசுந்தரம், முனைவர் த.அமிர்தலிங்கம்** ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்றுச்சிறப்பித்தார்கள்.

108 வாரமும் பெரிய புராணத் தொடச்சி சொற்பொழிவிற்குச் சிறப்புற ஏற்பாடுகளைச் செய்திருந்த, திருக்கோயில் செயல் அலுவலர் **திருமிகு தெ.ப.ஏகாம்பரம்** அவர்களை நம் ஆணையாளர் **திருமிகு த.பிச்சாண்டி, இ.ஆ.ப** அவர்கள் பொன்னாடை அணிவித்துச்சிறப்பித்தார்கள்.

பொதியமலை குறுமுனிவனும் ஒப்பல்ல
புகழ்புனை குன்றை முனிக்கு''

என்பது சேக்கிழார் புராணப் பாடல் ஆகும்.

ஒப்பேதும் இல்லாத குன்றைமுனிவர் எனப் போற்றப்படும் சேக்கிழார் பெருமான் பிறந்த ஊர் நம் சென்னையை அடுத்துள்ள குன்றத்தூர் ஆகும். சான்றோர் உடைத்தாய தொண்டை நன்னாடு 24 கோட்டங்களை அந்நாளில் கொண்டு விளங்கியது. அந்த 24 கோட்டங்களில் ஒரு கோட்டமாக சிறந்து விளங்கிய புலியூர் கோர்ட்டத்தைச் சேர்ந்த குன்றத்தூரில் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் வேளாளர் மரபில் சேக்கிழார் குடியில் வெள்ளியங்கிரி - அழகம்மை தம்பதிகளுக்கு மூத்த மகனாகப் பிறந்தவர்தாம் ''அருள் மொழித் தேவர்'' என்ற இயற்பெயரை உடைய நம் சேக்கிழார் பெருமான் ஆவார்.

சேக்கிழார் குடிக்கே அருள் மொழித் தேவரால் ஏற்பட்ட சிறப்புக் காரணமாக, **''சேக்கிழார்''** எனும் குடிப்பெயரே திருப்பெயராகவும் அமைந்து இன்றளவும் சிறப்புற்று விளங்கக் காண்கின்றோம். இளமையிலேயே கல்வி கேள்விகளில் வல்லவராக விளங்கிய சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன் ஆகிற அநபாயச் சக்கரவர்த்தி ஆண்ட சோழப் பெருமண்டலத்திற்கு அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று ''உத்தம சோழப் பல்லவர்'' எனச் சிறப்புப் பட்டமும் தந்து பாராட்டப் பெற்றதாக அவருடைய வரலாறு நமக்குத் தெரிவிக்கின்றது.

''உத்தம சோழப் பல்லவர்'' சோழப் பெருமண்டலத்தின் அமைச்சராக இருந்தபோது தம் திருக்கரங்களால் திருக்கோயில்கள் பலவற்றிற்கு அறப்பணிகள் செய்து புகழ்கொண்டார். குடந்தையிலுள்ள திருநாகேசுவரர் ஆலயத்தைப் புதுக்கித் திருப்பணிகள் நிறைவேற்றிய சிறப்பினால் இன்றும் அத்திருக்கோயிலில் சேக்கிழாரின் திருவுருவச் சிலையினோடு, அவரைத் தம் மணி வயிற்றில் சுமந்த தாயார் அழகம்மையார் திருவுருவமும், சேக்கிழாருடன் பிறந்த அவர் இளவல் பாலறாவாயர் திருவுருவமும் வழிபாட்டில் இருந்து வருவதைக் காணுகின்றோம்.

சேக்கிழார் தாம் பிறந்த குன்றத்தூரிலும் நாகேசுவரர் ஆலயம் போன்றே அமைத்ததொரு சிவாலயமும் இன்று **''வட நாகேசுவரம்''** என வழங்கப்பட்டு வருகின்றது. சேக்கிழார் பிறந்த இல்லமும் இன்று குன்றத்தூரில் சேக்கிழார்த் திருக்கோயிலாகச் சிறப்புடன் இலங்கி வருகின்றது.

சில அருளாளருடைய திருக்கரங்கள் கோயில் அமைத்துச் சிறப்பினைப் பெறும், சில அருளாளருடைய திருக்கரங்கள் காவியம் எழுதிச் சிறப்பினைக் காணும். தம் திருக்கரங்களால் எண்ணற்ற கோயில்களின் திருப்பணியைச் செய்து சிறப்புற்ற நம் சேக்கிழார் பெருமான் பாரெல்லாம் போற்றும் தெய்வமாக்காதையாம் **''பெரிய புராணம்''** எனும் ஒப்பற்ற அருள்நூலையாக்கவும் புண்ணியம் செய்தார் எனில் அவருடைய பெருமைக்கு ஈடேது?

மிகச்சிறந்த சிவனருட்செல்வராக விளங்கிய சேக்கிழார் பெருமானுக்குத் தில்லை அம்பலப் பெருமான் தாமே **''உலகெலாம்''** என அடி எடுத்துக் கொடுத்து திருத்தொண்டர் புராணமாம் பெரிய

பழநி அருள்மிகு தண்டாயுத பாணிசுவாமித் திருக்கோயில் திருக்குடநீராட்டு விழா

பழநி அருள்மிகு தண்டாயுத பாணிசுவாமித் திருக்கோயில் திருக்குடநீராட்டு விழா 3.4.06 அன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் நம் அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு த.பிச்சாண்டி இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயில் இணை ஆணையாளர் திருமிகு த.சுந்தரம் பி.ஏ.,பி.எல்; அவர்களும், அறங்காவலர் பெருமக்களும் விழா ஏற்பாடுகளை மிகச் சிறப்பாகச் செய்திருந்தார்கள்.

புராணத்தைப் பாடச் செய்தார் என்றால், சேக்கிழாரால் அருளிச் செய்யப்பட்ட பெரிய புராணத்திற்கு ஈடாக எந்நூலை நாம் கூற முடியும்?

''உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்''

என்று ஆரம்பித்து இரண்டு காண்டங்கள், 13 சருக்கங்கள், 4253 பாடல்களால் திருத்தொண்டர் புராணத்தைப் பாடித் தில்லையில் ஆயிரங்கால் மண்டபத்தில், திருஞானசம்பந்தர் திருஅவதாரம் செய்த சித்திரை திருவாதிரை நாளில் அரங்கேற்றத் தொடங்கி மறு ஆண்டு சித்திரை திருவாதிரையில் தம் புராணத்தை நிறைவு செய்து முடித்தார் நம் சேக்கிழார் பெருமான்.

திருத்தொண்டர் திருக்குலம்

முடிவேந்தர் அறுவர்

1. சேரமான் பெருமாள் நாயனார்
2. புகழ்ச்சோழர்
3. நெடுமாறர்
4. இடங்கழியார்
5. மங்கையர்க்கரசியார்
6. கோச்சேங்கட் சோழர்

திருவேற்காடு அருள்மிகு வேதபுரீசுவரர் மற்றும் தேவி கருமாரியம்மன் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா வைபவம்



தொண்டை நன்னாட்டின் பெருமையைத் தெய்வச்சேக்கிழார் பெருமான்

''தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தை
தூய மாந்தர் வாழ் தொண்டை நாட்டு இயல்பு
சொல்வரைத்தோ?''

என்று சாற்றியிருப்பது கொண்டு நாம் தெளிந்து மகிழலாம்.

இத்தகைய தொண்டை நன்னாட்டின் கண் பாடல் பெற்ற 32 சிவாலயங்கள் மிகச் சிறந்து விளங்குகின்றன. அவற்றுள் பராசக்தியான உமை அன்னையிடம் ஞானப்பால் உண்ட ஆளுடைய பிள்ளையாராம் திருஞானசம்பந்தர் தம் தேவாரப் பாடல் பெற்ற பழமையும் பெருமையும் மிகுந்த திருத்தலம்தான் திருவேற்காடு.

முருகப் பெருமான் சூரர்களை வெல்வதற்காக பராசக்தியிடம் வேல் பெற்ற இடம் இதுவாதலால் இத்தலத்திற்கு வேற்காடு என்பது பெயராயிற்று என்பர். திருஞானசம்பந்தரும் தாம் பாடியுள்ள தேவாரப் பாடலில்

''தோலினால் உடை மேவ வல்லான் சுடர்
வேலினால் உறை வேற்காடு''

எனப் பாடியிருத்தல் உணர்ந்து மகிழத்தக்கது.

நான்கு வேதங்களும் வேலமரங்களாய் நின்று வழிபட்டதால் இத்தலம்வேற்காடு எனவும், இறைவன் திருப்பெயர் வேதபுரீசுவரர் எனவும் அமைந்தது என்பர். அதற்கொப்ப திருஞான சம்பந்தப் பெருமானும்

''வேத வித்தகன் வேற்காடு''

எனப் பாடிப் பரவியிருப்பது குறிப்பிடத் தக்கது.

அகத்திய முனிவருக்கு இறைவன் தம் திருமணக் கோலக்காட்சி அருளிய தலமும் இதுவாதலால், அழகிய சிவலிங்கத் திருமேனி மூலவராக விளங்க, அதற்குப் பின்னால் சுவரில் திருமணக் கோலத்தில் சுவாமியும், அம்பாளும், அருகில் விநாயகருடன் காட்சி வழங்குவதைக் கண்டு இன்புறலாம். கல்யாண சுந்தரமூர்த்தி விசேடமாகத் தோற்றமளிக்கும் தலங்களில் இது ஒன்றாகும்.

மேருமலையில் மயன் நிர்மாணித்த செம்பொன் திருமண மண்டபத்தில் சிவபெருமான்- பார்வதி திருமணக் கோலத்தைத் தரிசிக்க, எல்லாப் புவனங்களிலும் உள்ளவர்கள் வந்து கூடியபோது பூமியின் வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்தது. அப்பொழுது பூமியைச் சமன் செய்யப் பொதிய மலைக்குச் செல்லுமாறு அகத்திய முனிவருக்கு ஆணை பிறப்பித்தருளினார் சிவபெருமான்.

''கருணையே வடிவான எம்பெருமானே ! தங்கள் திருமணக் காட்சியை யான் காண இயலாதே!'' என்று அகத்திய முனியவர் குறையிரக்க **''நாம் நமது திருமணக் கோலத்தை உமக்குக் காட்டுவோம். தென் திசைசெல்க''** என்று திருவாக்கருளிய சிவபெருமான் அகத்திய முனிவருக்குத் தமிழ்த் திருநாட்டின் கண் பற்பல திருத்தலங்களில் திருமணக் கோலத்தைக் காட்டியருளினார். அவ்வாறு அகத்தியருக்குத் திருமணக் கோலம் காட்டியருளிய முதன்மையான திருத்தலம் தான் திருவேற்காடு அருள்மிகு வேதபுரீசுவரர் திருத்தலம் ஆகும்.

சதாசிவமூர்த்தங்கள் அறுபத்தி நான்கினுள், 25 திருவுருவங்களைச் சிறப்பித்து மகேசுவர மூர்த்தங்கள் எனச்சிறப்பிக்கின்றனர். அவற்றுள் சில நிக்கிரக மூர்த்தங்கள்; சில அனுக்கிரக மூர்த்தங்கள். சிவபெருமான் பார்வதி திருமணக் கோலமே கலியாண சுந்தரர் எனும் அனுக்கிரக மூர்த்தமாகப் போற்றப்படுகின்றது. அத்தகைய அனுக்கிரக மூர்த்தமே திருவேற்காடு அருள்மிகு வேதபுரீசுவரர் திருக்கோயிலில் நாம் காணும் சிவபெருமான்- பார்வதி திருமணக்கோலம் ஆகும்.

திருவேற்காட்டில் அருள்மிகு வேதபுரீசுவரர் ஆலயம் வந்த வழிபடும் மெய்யடியார்களுக்கு **''கல்யாண சௌபாக்கியம்''** கைமேல் பலனாகக் கைகூடி வருவது குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் ஆகும்.

அபிராமி அந்தாதியில் ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு பலனை மெய்யடியார்களுக்கு நல்குவதாகக் கூறுவர்.

''குயிலாய் இருக்கும் கடம்பாடவியிடை, கோலவியன்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை, வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில், கமலத்தின் மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே''

என்று 99வது பாடலைப் பாராயணம் செய்வாருக்குத் திருமணம் கைகூடி வரும் என்பர் சான்றோர். அன்னை பாலாம்பிகையுடன் அருள்மிகு வேதபுரீசுவரர் திருமணக் கோலத்தில் அகத்தியருக்குக் காட்சியளித்த அற்புதத் தலமாம் திருவேற்காட்டில் அபிராமி அந்தாதியின் மேற்காணும் பாடலைப் பாடி வழிபடத், திருமணம் கைகூடுதல் திண்ணமாகும்.

திருமண வரம் நல்கும் இத்தகு மகிமை மிகு திருவேற்காடு திருத்தலம், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான மூர்க்கநாயனார் அவதரித்த பெருமையும் கொண்டு விளங்கும் திருத்தலம் ஆகும்.

''வேற்காட்டு ஊர்
உள்நிலாவும் புகழ்த்தொண்டர் மூர்க்கர்''

என்று மூர்க்க நாயனாரைக் குறிப்பிடும் சேக்கிழார் பெருமான், வேளாளர் குலத்தில் தோன்றிய மூர்க்க நாயனார் இத்திருவேற்காடு திருத்தலத்தில் நித்தமும் மகேசுவரபூஜை செய்து, அடியார்களை அமுது செய்வித்த சிறப்பினைப் போற்றுகின்றனர்.

''கோதுஇல் மரபின் பிறந்து வளர்ந்து
அறிவுகொண்ட நாள் தொடங்கி
ஆதிமுதல்வர் திருநீற்றின்
அடைவே பொருள் என்று அறிந்து, அரனார்
காதல் அடியார்க்கு அமுது ஆக்கி
அமுது செய்யக் கண்டு உண்ணும்
நீதி முறைமை வழுவாத
நியதி பூண்ட நிலைமையார்''

''தூய அடிசில் நெய்கன்னல்
சுவைஇன் கறிகள் அவை அமைத்து
மேய அடியார் தமைப் போற்றி
விருப்பால் அமுது செய்வித்தே
ஆய பொருளும் அவர் வேண்டும்
படியால் உதவி அன்புமிக
ஏயுமாறு நாள்தோறும்
இனைய பணி செய்து இன்புற்றார்''

இத்தகைய மகேசுவரப் பூஜையால் இறையடி நீழல் பெற்று இன்புற்றுத் திளைக்கும் மூர்க்க நாயனாருக்குத் தனிச் சன்னதி அருள்மிகு வேதபுரீசுவரர் ஆலயத்தில் இருப்பது நாம் வழிபட்டுப் பயன்கொள்ளத்தக்கது ஆகும்.

முருகப் பெருமான் தம் வேலால் உண்டாக்கிய தீர்த்தம், வேலாயுதத்தீர்த்தம் என வழங்கப்பட்டு வருகின்றது. இத்திருக்கோயிலில் எழுந்தருளிய முருகப் பெருமானை அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிப் போற்றியுள்ளார்.

''வேற்காடுறை வேதபுரீசுரர் தருசேயே!...
பெருவாழ்வெனவே வரு பெருமாளே''

என்பது அருணகிரிநாதர்திருப்புகழாகும்.

இத்தகைய மகிமைமிக்க திருவேற்காடு அருள்மிகு வேதபுரீசுவரர் திருக்கோயில் திருக்குடநீராட்டு விழா 17.3.06 அன்று மிகச் சிறப்பாக நடந்தேறியுள்ளது. திருவேற்காடு திருத்தலத்தில் ஆதிநாளிலேயே தோன்றி இந்நூற்றாண்டில் மகிமை பெற்று மிகக் குறுகிய காலத்தில் சிறப்புற்ற வளர்ந்த அன்னையின் திருத்தலமே அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருத்தலம்ஆகும்.

தேவி கருமாரி அன்னையின் பெருமையை எடுத்து மொழிதல் எளியசெயல் அன்று என்பதைத் தேவி கருமாரியம்மன் புராணம் கீழ்க்காணும் பாடல்எடுத்துக்கூறுகின்றது.

''கண்டாலும் பிணி நீங்கும் நிதி பெருகும் கலைஓங்கும்
ஞானமுறும் கருத்துணர்ந்து
விண்டாலும் வாணாட்கள் மிகப்பெருகும் செவியுற்றால்
வீரமுறும் வேதை தீரும்
பண்டாலின் கீழமரும் பரமனருள் சிறப்புற்றுப்
பரஞானப் பதமளிக்கும்
மண்டலத்தில் தேவி கருமாரியளின் புராணச்சீர்
எவராலும் மொழியொணாதே''

சக்திவழிபாடு நம் பாரத நாட்டில், மிகப் பழங்காலத்திலிருந்தே சிறப்புற்று விளங்கி வருகின்றது. ஆராய்ச்சியாளர்கள் சிந்து வெளி நாகரிகக் காலம் கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கணக்கிட்டுக் கூறுகிறார்கள். ஹரப்பா, மொகஞ்சோதரா ஆகிய இடங்களில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் அம்பிகையின் மண்ணால் ஆன திருவுருவங்கள் பலவும் கிடைத்திருப்பதைக் கொண்டு சக்தி வழிபாட்டின் தொன்மையை நமக்கு ஆராய்ச்சியாளர்கள் தெளிவுபடுத்துகிறார்கள்.

''அருளது சக்தியாகும் அரன் தனக்கு''

என்று சிவஞானசித்தியாரில் வரும் தொடரால் இறைவனது அருள்கின்ற தன்மையே சக்தி வழிபாடாக மலர்ந்தது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

தாய் தன் குழந்தைகள் செய்யும் தவறுகளை மன்னித்து, அன்பு செலுத்திப் பரிவுகாட்டி நலம் செய்கின்றாள். அவ்வாறே இறையருள் சக்தியாகிய தேவியும், உலகுயிர்கள் செய்யும் பிழைகள் யாவும் பொறுத்து திருவருள் புரிகின்றாள்.

கார்மழை போல் உலகிற்கு அருள் செய்யும் சக்தியே கருமாரி ஆவாள்.

''ஏணார் சோலை கருமாரி'' என்ற அப்பரடிகள் தாம் பாடியுள்ள திருத்தாண்டகத்தில் பாடியிருப்பது கொண்டு, கருமாரியன்னையின் பழமையை நாம் அறியலாம்.

திருவேற்காட்டில் அருள்மிகு வேதபுரீசுவரருடன் வீற்றிருந்து அருள்பாலித்தவள்

திருமால் திருநாமங்களும் திருமண்காப்பும்



வைணவர்கள் தம் உடம்பில் பன்னிரு இடங்களில் பகவானின் பன்னிரு நாமங்களைக் கூறித் திருமண் காப்பு அணிவார்கள். அவை பின்வருமாறு

1. கேசவாய நம : நெற்றி
2. நாராயணாய நம : வயிறு
3. மாதவாய நம : மார்பு
4. கோவிந்தாய நம : கழுத்து
5. விஷ்ணுவாய நம : வயிற்றின் வலப்பக்கம்
6. மதுசூதனாய நம : வலது புஜம்
7. திரிவிக்ரமாய நம: வலத்தோள்
8. வாமனாய நம : வயிற்றின் இடப்பக்கம்
9. ஸ்ரீதராய நம : இடது புஜம்
10. ரிஷிகேசாய நம : இடத்தோள்
11. பத்மநாபாய நம : முதுகு
12. தாமோதராயநம : பிடரி

வேற்கண்ணி அம்மை. சூரர்களை மாய்ப்பதற்கு முருகப் பெருமானுக்கு வேல் கொடுத்த சக்தி இவளே ஆதலால் இவளுக்கு வேற்கண்ணி என்ற நாமம் உண்டானது.

வேற்கண்ணி முருகப் பெருமானுக்கு வேல் அளித்த சிறப்பினை

''கண்ணுதலோன் கண்நோக்க
வேற்கண்ணி களிப்புற்றுக்
குதூகலித்து அன்பு கூர்ந்து
மண்ணவரும் விண்ணவரும்
வாழ்வுறவும் அவுணர் குலம்
அறக்களைவாய் என்றுரைத்து
எண்ணற்ற எழுபரிதிச் செழுஞ்சுடரின்
ஒளிவிஞ்சச்
சுடர்வேலைக் கரத்தெடுத்து
கண்மணியாம் சேயவனின் கரமீந்து
அருள் புரிந்தாள்
கண்ணுதலோன் உவகையுற்றான்''

என்று தேவி கருமாரியம்மன் புராணம் கூறுகின்றது.

இவ்வாறு சூரபதுமனாதி அரக்கர்களின் அல்லல் ஒழிய சக்திவேல் தந்து அருள்புரிந்த வேற்கண்ணி அம்மையிடம் சிவபெருமான் சாம்பலை எடுத்துத் தந்து ''இத்திருநீற்றினால் ஐந்தொழிலைப் பூவுலகில் கருமாரியாய் வீற்றிருந்து அருள்புரிக'' என்று அறிவுறுத்தவே பண்டு தொட்டு கருமாரியாய் இத்தலத்தில் தேவி பராசக்தி வீற்றிருந்து அருள்புரிந்து வருகின்றார்.

க என்பது பிரமனையும்
ரு என்பது ருத்திரனையும்
மா என்பது திருமாலையும் குறிப்பனவாகும். பிரமன், ருத்திரன், திருமால் ஆகிய மும்மூர்த்திகளும் போற்றும்பராசக்தி, தேவி கருமாரி ஆவாள்.

சிவபெருமான் தமக்கு அளித்த திருச் சாம்பலையே தம் அடியவர்க்கும் வழங்கி அருளாட்சி புரிந்து வருகின்றாள் அன்னை கருமாரி.

''கருமாரி திருநாமம் கருத்திருத்தித்
திருநீற்றை நுதற் தரித்தால் கன்மம் தீரும்
கருமாரி என்றுரைத்துக் குளிர்நீரில்
திருநீற்றை உட்கொண்டால் வினைகள்
நீங்கும்
கருமாரி தேவியளைக் கண்ணுற்றுக்
கழல் வணங்கச் செயல்களெல்லாம்
வெற்றிச் சேரும்
கருமாரி திருநீற்றால் காசினியில் எண்
சித்தும் செயலாற்றிக் களிக்கலாமே''

என்று தேவி கருமாரியன்னையின் திருச்சாம்பல் பிரசாத மகிமையைப் போற்றுகின்றது தலபுராணம்.

தேவி கருமாரி அளித்த சாம்பலால் முருகன் அமைத்த திருக்குளம் **சாம்பர் பொய்கை** எனச் சிறப்பிக்கப் பெற்று வருகின்றது. பஞ்சமா பாதகங்களும் சாம்பல் பொய்கையில் நீராட பறந்தோடும் என்றும் தலபுராணம் கூறுகின்றது.

சூரியன் தனக்குரிய ஞாயிற்றுக் கிழமையை அன்னையின் திருநாளாகக் கொண்டு அடியவர் களுக்கு அருள்பாலிக்க வேண்டும் என்று வேண்டி கொண்டான். அதனை ஏற்று, அன்னை திருவருள் புரிந்தமையால் திருவேற்காடு தேவி கருமாரியம்மன் ஆலயத்தில ஞாயிற்றுக்கிழமை வழிபாடு சிறப்பினைப் பெற்று விளங்குகின்றது.

அகத்திய முனிவர் ஆடிமாதம் ஞாயிற்றுக் கிழமைகளில் அன்னை கருமாரியைப் போற்றி வழிபட்டமையால் ''ஆடியில் ஞாயிற்றுக் கிழமைகளில் என்னைத் துதிப்பவர்கட்கு அனைத்து வரங்கள் தருவேன்'' என்று அன்னை வரம் அளித்தபடியே ஆடிமாத ஞாயிற்றுக்கிழமை வழிபாடு இத்திருத்தலத்தில் சிறப்பினைப் பெற்று விளங்குகிறது.

பஞ்சபூதங்களும் அன்னையை வழிபட்டு வேண்டிக் கொண்டதற்கு இணங்க அப்பஞ்சபூதங்களையும் ஐந்து நாகங்களாகத் தன் முடிமேல் கொண்டு திருவருள் பாலித்தாள் தேவி கருமாரி அன்னை.

உலக மக்கள் உய்யும் பொருட்டு கிருத, திரேத, துவாபர யுகங்களில் பாம்புருவம் கொண்டு புற்றில் அமர்ந்து அருள் புரிந்தாள் தேவி கருமாரி. அன்னை பாம்புருவாகித் திருவருள் பாலித்தமையால், அவள் குடிகொண்ட இத்திருத்தலம் **''விஷம் தீண்டாப்பதி''** எனவும் சிறப்பிக்கப்பட்டு வருகின்றது. சண்டி துர்க்கையின் காமதேனு மூர்த்தியென மாரியம்மனை **''சண்டி சப்தஸதீ''**

என்னும் நூல் கூறுகிறது.

இக்கலியுகத்தில், மேலே நாற்கரத்தளாய் அமர்ந்த சிவசக்திக் கோலத்துடனும், கீழே உடல் மறைத்துத் தலைகாட்டும் நாரணிக் கோலத்துடனும் ஈருருவாய் அமைந்து அருள் பாலித்து வருகின்றாள் அன்னை தேவி கருமாரி.

பராசக்தியின் ஏழுஉருவாக அந்தரக்கண்ணி, ஆகாய கண்ணி, பிராமணக் கண்ணி, காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி, கருமாரி ஆகியோரைக் கூறுவர். முதல் மூவரும் காடு, மலை, வனம், ஆறு, ஏரி, குளம் இவற்றின் அருகருகே ஆங்காங்கே எழுந்தருளினார்கள்.

காமாட்சி காஞ்சியிலும், மீனாட்சி மதுரையிலும், விசாலாட்சி காசியிலும் எழுந்தருள, ஏழாவதாய் நின்ற கருமாரி சிவை, நாராயணி என ஈருருக் கொண்டு திருவேற்காட்டில் திருக்கோயில் கொண்டனள்.

அன்னை தேவி கருமாரி ஈருரு கொண்ட போது கருநீல பெரிய உருவாகி நின்றபோது திருமால் **''உலகத்தார் உய்ய நின் கடைக்கண் நோக்கு ஒன்று போதுமே''** என்று கூற, அன்னையும் தன் நிலை மறைத்து அருள் புரிந்ததாகக் கூறுவர்.

திருச்சியில் இறைவர் எவ்வாறு மாத்ரு பூதேகவரராக -தாயுமானவராக நின்றாரோ அது போல் அம்மை சிவக்கோலம் பூண்டு பிறைச் சந்திரன் உடையவளாய், மூவிலை, சூலம், உடுக்கை, வாள், பொற்கிண்ணம் ஏந்தி சிவக்கோலம் பூண்டு காட்சி தருவது இத்திருவேற்காட்டுத் திருத்தலத்தில்தான் என்று அறுதியிட்டுக்கூறலாம்.

இவ்வாறு சிவை, நாராயணி எனும் ஈருருவாக அமைந்து இக்கலியுகத்தில் அருள்புரியும் கண்கண்ட தெய்வமாம் திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா 3.4.06 அன்று நடைபெற்றது மெய்யன்பர்கள் அனைவரும் உய்யக்கிடைத்த வரப்பிரசாதம் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை.

''என்னை நம்பி வரக்கூடிய பக்தர்களுக்குச் சாம்பல் கொடுத்து, அவர்கள் வினை தீர்த்து, அவர்கள் கொடுக்கும் அன்புக் காணிக்கையைக் கொண்டு, திருப்பணிகள் செய்து கொள்வேன்'' என்பதாக அன்னை திருவாக்கருளி, அவள் திருப்பணியை அவளே சிறப்புற நடத்திக் கொண்டு வருவது இக்கலியுகத்தில் நாம் கண்டு வரும் அற்புதமாகும்.

அருள்மிகு திருவேற்காடு தேவி கருமாரி அம்மன் கோவில் கருவறை கோபுரம் 49 கிலோ தங்கத்தால் வேயப்பட்டு உள்ளது.

இதேபோல் கோவிலின் கோபுரத்தின் 7 கலசங்கள் 2 1/2 கிலோ தங்கத் தகடுகளால் வேயப்பட்டு உள்ளன. கோவிலின் உள்புறத்தில் முன்வாசலில் உள்ள கொடிமரம் 6 கிலோ தங்கத்தால் வேயப்பட்டு உள்ளது.

கோவிலின் உள்புறம், வெளிப்புறம் சுவர்கள் வண்ண பெயிண்ட்டிங்கால் வர்ணம் பூசப்பட்டு உள்ளது. கோபுரமும் வண்ண வண்ணக் கலர்வர்ணம் பூசப்பட்டு உள்ளது. கோவிலில் கருவறை உள்ளே ஏர்கண்டிஷன் வசதி செய்யப்பட்டு உள்ளது. திருக்கோவில் தற்பொழுது புதுப்பொலிவுடன் காணப்படுகிறது.

''அருள்திரு நீற்றினாலே
ஐந்தொழில் புரியும் அன்னை
அருள்மிகு ஞானசக்தி
ஆதியாய் கருமாரித்தாய்
அருள்மிகு வேற்காடுற்று
ஆட்சி புரியும் சீலி
அருள்திரு நீறளிக்கும்
அன்னையைப் பணிவோர் வாழி''

சங்கு சக்கரத்துடன் முருகர்



குடந்தையிலிந்து 6 கி.மீ. தூரத்தில் உள்ள அழகாபுத்தூர் திருத்தலம் புகழ்த்துணை நாயனார் இறைவரிடம் படிக்காசு பெற்ற திருத்தலம் ஆகும்.

இங்கு உள்ள கல்யாண சுந்தர சுப்பிரமணியர் வள்ளி தெய்வானையருடன் 6 தலைகள், 12 திருக்கரங்களுடன் மயில் மீது அமர்ந்து அழகாகக் காட்சி தருகிறார். இவருடைய வலது கை ஒன்றில் சக்கரமும், இடது கை ஒன்றில் சங்கும் காணப்படுவது புதுமையாகும்.

நாதனுக்கு ஊர் : நமக்கு ஊர் : நாவலூர்

அழ. முத்துப்பழனியப்பன் எம்.ஏ.,பிஎல்.

தமிழ்ச் சைவத்தின் மணிமுடியாக இலங்குவது பெரியபுராணம். சேக்கிழார் பெருமானால் பாடப் பெற்ற இத்தனித் தமிழ்க்காப்பியம் நாயன்மார்கள் வரலாற்றைச் சுவைபடக் கூறுகிறது. வரலாற்றுச் செய்திகளைக் கூறுவதுடன், பண்பாட்டுப் பேழை யாகவும், இடைக்காலத் தமிழர்தம் வாழ்வியலை அழகு பெற உயிரோட்டத்துடன் விவரிக்கும் உயர்ந்த நூல் இது. சைவத் திருமுறைகளில் நிறைவான பன்னிரண்டாக விளங்குவது. இவை நாம் அறிந்த செய்திகள்.



இவற்றோடு நாம் அறிவது, இக்காப்பியத்தில் பாட்டுடைத் தலைவர் - கதாநாயகர்- சுந்தரமூர்த்தி சுவாமிகள். மூவர் முதலிகளில் இளையவர். இறைவனின் தோழர் இவரே. இவரது வாழ்வு சுவைமிக்கது. இவருடைய ஒரு திருமணத்தை வழக்காடி நிறுத்திய இறைவன், மீண்டும் இவருக்கு இரண்டு திருமணங்களை நிகழ்விக்கிறான். ஆரூர் வீதியில் தூது போகிறான். ஒற்றியூரில் கருவறையில் இல்லாமல் மகிழ மரத்தில் வந்து ஒளிந்து கொள்கிறான். இவருக்காக இரந்து பொதிசோறு கொடுக்கிறான். ஆற்றில் பொன்னைப் போடச் செய்து குளத்தில் எடுத்துத் தருகிறான். அவிநாசியில் முதலையுண்ட பாலகனை மீட்டுத் தருகிறான். இறுதியில் வெள்ளையானையை அனுப்பி, சுந்தரரைக் கயிலைக்கு அழைத்துக் கொள்கிறான். இவ்வாறு சுந்தரருக்காக இறைவன் நிகழ்த்திய அற்புதங்கள் பல.

இதற்கு சிறப்புப் பெற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் தோன்றியருளிய தலமே திருநாவலூர் ஆகும். இன்றைக்குப் பெயர் மாறாமல் பழம்பதியாகத் திகழும் இந்த அற்புதத் திருத்தலம், விழுப்புரத்தில் இருந்து உளுந்தூர்பேட்டை செல்லும் நெடுஞ் சாலையில், கெடிலம் என்ற ஊரின் அருகாமையில், நெடுஞ்சாலையில் இருந்து ஒருகிலோமீட்டர்தொலைவில் உள்ளது.

சுந்தரர், முப்போதும் திருமேனி தீண்டப் பெறும் உரிமை படைத்த, சிவாச்சாரியப் பரம்பரையில் தோன்றியவர். இவரது தந்தையாரான சடையனார் இங்கேதான் பூசைசெய்திருப்பார். சுந்தரரும் இத்தலத்து இறைவனை முப்போதும் தீண்டி வழிபட்டிருப்பார் எனநம்பலாம்.

கோயில் கிழக்குப் பார்த்தது. உயர்ந்த ஐந்து நிலைக் கோபுரம் நம்மை வரவேற்கிறது. பெரிய மதில் உள் சுற்றின் தென்புறம் அறுபத்து மூவரும் வீற்றிருக்கின்றனர். தென்கிழக்கில் பைரவருக்கு அருகாமையில், நவகிரக சந்நிதிக்கு அருகில் சுக்கிரன் வழிபட்ட இலிங்கம் அமைந்துள்ளது. இந்த இலிங்கம் இங்கே சிறப்பு மிக்கது. சுக்கிரன் அருள் பெற வேண்டுவோர், இந்த இலிங்கத்திற்கு வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு அபிஷேகமும், வழிபாடும் நிகழ்த்துகின்றனர்.

நின்ற கோல தட்சிணாமூர்த்தி :

கருவறைத் தென்புறச் சுவற்றில் திகழும் தட்சிணாமூர்த்தி திருவுருவம், இத்தலத்திற்கே உரிய சிறப்பு மிக்கது. ஆம். அங்கே தென்முகக் கடவுளான, தட்சிணாமூர்த்தி, நின்ற கோலத்தில் அருள் பாலிக்கிறார். இத்தகையதோர் திருவுருவம் வேறு எங்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் அழகிய, சோழர் காலத் திருவுருவம் இந்தத் தட்சிணாமூர்த்தி ஆகும். பூராட நட்சத்திர தோஷம் உடையவர்களும், பூராட நட்சத்திரத்தில் பிறந்தவர்களும், இந்தத் தட்சிணா மூர்த்தியை வழிபட்டால் உடன் நல்ல பலன் கிடைக்கும்.

அம்பிகை சந்நிதி தனிச் சந்நிதியாக விளங்குகிறது. இவற்றிற்கு இடையில், வரதராஜப் பெருமாள் சந்நிதி என்கிற பெருமாள் சந்நிதி தனியாக உள்ளது. திருமால், இத்தலத்து இறைவனை வழிபட்டு தோஷம் நீங்கியதாக வரலாறு.

மிகப்பெரிய, வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கோயிலுக்குச் சொத்துக்கள் அதிகம் இல்லை. வருவாயும் அதிகம் இல்லை.

அரசு நிதியுதவியுடன், அன்பர்கள் உதவியால் 03.04.2006 அன்று திருக்குட நன்னீராட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

சுந்தரர் வரலாற்றோடு தொடர்புடைய ஊர்கள் இத்தலத்திற்கு அருகாமையில் உள்ளன. சுந்தரரை, வளர்த்த நரசிங்க முனையரையர் என்ற அரசர் வாழ்ந்த சேந்தமங்கலம் இவ்வூருக்கு அருகாமையில் உள்ளது. அங்குள்ள கோட்டைக்கோயில் காணத்தக்கது. சிற்பச் சிறப்புக்கள் கொண்டது.

சுந்தரர் திருமணத்தை வழக்காடி நிறுத்திய

மணம் தவிர்ந்த புத்தூரும் இவ்வூருக்கு அருகில் உள்ளது. இறைவன் பழைய மன்றாடியாக, கிழ வேதியராக வந்து வழக்காடிய திருவெண்ணெய் நல்லூரும் இவ்வூருக்கு அருகில் தான் உள்ளது. வெண்ணெய்நல்லூரில், இறைவன் வழக்காடி வென்ற மண்டபம் அப்படியே இருக்கிறது. அதைவிட அருமை, அவர் கிழவராக வந்தபோது,

அணிந்திருந்த பழைய பாதுகைகள் (மரத்தால் ஆனவை) - இக்கோயில் கருவறையில் உள்ளன. அவசியம் பார்க்கவேண்டிய இடங்கள் இவை.

சுந்தரர், நாவலூரைப் பற்றிக் குறிக்கும்போது, இது இறைவனாகிய 'நாதனுக்கு ஊர்', அதே சமயம் என்னுடைய ஊர் என்று குறிப்பிட்டு, 'நமக்குஊர்' என்றும், தம்மை வளர்த்த நரசிங்க முனையரையன் ஆதரித்து அணிசெய்யும் ஊர் என்றும் குறிப்பிடுகிறார்.

''.... நாதனுக்கூர், நமக்கூர், நரசிங்க முனையரையன்

ஆதரித்து ஈசனுக்கு ஆட்செயும் ஊர் அணி நாவலூர்...''

என்று பாடியுள்ளார்.

இவ்வூர் இறைவன் தற்போது பக்தஜனேஸ்வரன் என் று அழைக்கப்படுகிறான். இவ்வூர் கல்வெட்டுக்கள் இவரை ''திருத்தொண்டீசன்'' என்று அழைக்கின்றன. சுந்தரரும், அவர் முன்னோரும் வழிவழியாகத் தொண்டு செய்ததால், ''தொண்டீசன்'' என்று அழைக்கப்பட்டான்.

தற்போது. ''பக்த ஜனங்கள்'' விரும்பி வழிபடுவதால் பக்தஜனேஸ்வரனாக உள்ளான்.

இவ்வூர் மண்ணை மிதிக்கும் போது நம் கால்கள் சிலிர்க்கின்றன. இங்கேதான் சுந்தரர் குழந்தையாக விளையாடியிருப்பார். இந்த இறைவனை வழிபட்டிருப்பார் என்று எண்ணத் தோன்றுகிறது. இதுவே வெளிநாடாக இருந்தால் எத்தகைய நினைவாலயமாக இருக்கும் என்ற ஏக்கமும் தோன்றுகிறது. நம் சொத்தை நாம் தான் பாதுகாக்கத் தோன்றுகிறது.

அறுபத்துமூவர் விழா ஆனந்தம்

''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன்

சென்னையிலுள்ள மயிலைத் திருநகரில் அறுபத்துமூன்று நாயன்மார்கள் கபாலீஸ்வரருக்கு முன்னால் அணிவகுத்து பல்லக்குகளில் ஊர்வலம் வரும்போது நாயன்மார்களின் வாழ்க்கைச் சரித்திரம் விதம் விதமாய் மனதுக்குள் ஓடிற்று.

மகளின் திருமண நாள் அன்று ஒரு சிவனடியார் கேட்டார் என்பதற்காக மகளினுடைய பூத்தொடுத்த சிகையை மழித்து அவருக்குப் பூணூலாக அணிவிக்கக் கொடுத்தார் ஒரு சிவனடியார்.

இன்னொரு சிவனடியார் எது கேட்டாலும் கொடுப்பீரா என்று கேட்டு வந்த அந்தணருக்கு, அவர் கேட்க தன் மனைவியையே கொடுத்தார். தடுக்க வந்தவர்களை வெட்டி வீழ்த்தினார்.

திருவாரூர் திருக்கோயில் தூர்ந்து போய்க் கிடக்கிறது, வாரி எடுக்க வேண்டும் என்று தன் கண்கள் இரண்டும் சுத்தமாகத் தெரியாது போயினும் கயிறு போட்டு இறங்கி தன்னால் முடிந்த அளவுக்கு தூர் வாரி தன் உழைப்பைக் கொடுத்தார் ஒரு சிவனடியார்.

தன்னிடமிருந்த எல்லாப் பொருட் களையும் விற்று இறைவனுக்குத் தூபம் போடுதலையே முழுமுதற் வேலையாகக் கருதித் தன் சுகம் சொத்துக்கள் அத்தனையும் கொடுத்தார் இன்னொரு சிவனடியார்.

''தீண்டுவீராயின் திருநீலகண்டம்'' என்று மனைவி சொல்ல தன்னுடைய மனைவிமீதான உரிமையையே முற்றிலும் விட்டுக் கொடுத்தார் இன்னொரு சிவனடியார்.

இப்படித் திரும்பத் திரும்ப கொடுத்தலையே- தனக்கென்று எதுவும் வைத்துக் கொள்ளாது, வழங்குதலையே முக்கியமாகக் கொண்ட இந்தச் சிவனடியார்களுடைய ஊர்வல விழாவில் சென்னையிலுள்ள அத்தனை மக்களும் கலந்து கொண்டு தங்களால் இயன்றதைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த முறை மயிலையில் அறுபத்துமூவர் திருவிழாவின் போது பல்வேறு இடங்களில், நான் நின்று நின்று கவனித்து மக்கள் வாரி வழங்குவதையும், வாங்கிக் கொள்வதையும் கண் குளிரப் பார்த்துவிட்டு வந்தேன்.

பிறருக்குக் கொடுப்பதற்காகத்தானே மோர் கொடுக்கிறோம். கொஞ்சம் கூடவே நீர் வார்த்துவிடு என்று ஒரு பொழுதும் அவர்கள் எண்ணுவதில்லை.

அடர்த்தியான மோர். நல்ல மணம். கடுகு உளுத்தம்பருப்பு தாளித்துக் கருவேப்பிலை, பச்சைமிளகாய் நறுக்கிப் போட்டு, வெள்ளரிக்காய்கள் மிதக்க குளிர்ந்த மோர் இரண்டு குவளைகள் குடித்தால் இரண்டு மணிநேரத்திற்குப் பசிக்காது. ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், கிழவிகளும் போட்டிப் போட்டுக் கொண்டு வாங்கிக் குடித்தார்கள். குடம் குடமாக அங்கு நீர்மோர் கொடுக்கப்பட்டது.

அந்தப் பகுதியிலுள்ள வியாபாரிகள் ஆளுக்குக் கொஞ்சம் காசு போட்டு சிறுபந்தல் எழுப்பி ஒருவரை நியமித்துக் கொடுப்பதை நன்றாகக் கொடுக்க வேண்டுமென்று திறம்படச் செய்கிறார்கள். மயிலைக்குப் போகின்ற அத்தனை வழியிலும் நீர்ப்பந்தல்.

சத்ய சாயிபாபாவின் படத்தை முன்னே வைத்து பாதாம்கீரும், ரோஸ்மில்க்கும், நீர்மோரும், குழந்தைகளுக்கென்று தனியே சூடான பாலும் ஒரு குவளையில் கொடுத்தார்கள். கொடுத்தவர்கள் அத்தனைப் பேரும் பெண்கள். அந்தப் பகுதியிலுள்ள அடுக்குமாடிக் கட்டிடத்தில் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து இதை ஒவ்வொரு வருடமும் தங்கள் முக்கியமான கடமையாகச் செய்கிறார்கள்.

திருத்தேரின் போது ஆரம்பித்து திருக்கல்யாணம்வரையில் இதைச் செவ்வனே செய்து முடிக்கிறார்கள். அந்த அடுக்குமாடிக் கட்டிடத்தில் உள்ளவர்கள் முறைபோட்டுக் கொண்டு காலையில் இருந்து இரவு வரை ஓயாமல் ஓயாமல் ஏதேனும் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

சாலையை மறித்தவண்ணம் மோட்டார் சைக்கிளையும், ஸ்கூட்டரையும், ரிக்ஷாவையும் நிறுத்தி அங்குக் கொடுப்பன ஒவ்வொன்றையும் ஒவ்வொரு குவளை வாங்கிக் குடித்துவிட்டு மிகப் பெரிய ஏப்பத்தோடு ஜனங்கள் நகர்ந்து கொண்டு

இருந்தார்கள்.

''வருஷா வருஷம் இந்த இடத்துல ரொம்ப நல்லா பண்றாங்கப்பா'' என்று உரத்த குரலில் பாராட்டு வேறு தெரிவித்தார்கள்.

ஒரு ஜைன சமய கோவிலுக்குப் பின்பிறமுள்ள பெரிய கல்யாணமண்டபத்தில் நூற்றுக்கணக்கில் சப்பாத்திகள் இடப்பட்டு, உருளைக்கிழங்கு கிலோ கணக்கில் வேகவைக்கப்பட்டு சப்பாத்திக்குத் தொட்டுக் கொள்ள சப்ஜியாக ஒரு கூட்டு தயாராகிக் கொண்டிருக்கிறது. வாளிவாளியாய் அரியப்பட்ட தக்காளியை உள்ளுக்குள் எடுத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள்.



''திருவிழாவுக்குப் போகும் போது நீர்மோர் கொடுத்தால் போதும். ஆனால் அந்தக் கூட்டம் கலைந்து வருகிறபோது அவர்களுக்குப் பசிக்கும். எனவே அவர்கள் வருகின்ற வழியாக இந்த சப்பாத்தி சப்ஜியை வைத்து, வருகிறவர்களுக்குக் கொடுக்கிறோம். இதை உண்டு விட்டு நேரே வீட்டிற்குப் போய் நிம்மதியாய்ப் படுத்துவிடலாம். இரண்டு சப்பாத்தி மீது முழுவதும் கொள்ளும்படியாக சப்ஜி தருகிறோம்'' என்று அந்த ஜைனர் தெரிவித்தார். கேட்கவே சந்தோஷமாக இருந்தது.

நெய்மணம் மூக்கைத் துளைத்தது. மசூதித் தெருவில் சில இளைஞர்கள் ஒன்று கூடி அட்டைப் பெட்டி அட்டைப்பெட்டியாக ஐஸ்கிரீம் தருவித்து அதை உள்ளுக்குள்ளுள் அடுக்கி, அட்டைப் பெட்டியைப் பிரித்து போவோர் வருவோர் அத்தனை பேருக்கும் கப் ஐஸ்கிரீம் வினியோகித்துக் கொண்டிருந்தார்கள். அங்குப் பெருங்கூட்டம் இடது கை, வலது கையாக ஜனங்கள் வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

இந்த வெய்யிலுக்கு ஐஸ்கிரீம் என்பது அமிர்தம்போல தொண்டையில் இறங்குகின்ற விஷயம். குழந்தைகள் குதூகலிக்கின்ற விஷயம். வாங்குகின்ற எவருக்கும் துளிகூட வாங்குகிறோம் என்ற வெட்கமில்லை. இது பிரசாதம் என்பது போல வாங்கிக் கொள்கிறார்கள்.

பல இளைஞர்கள் ஒரு தர்ப்பூசணிப் பழக்கடையைச் சுற்றி அமர்ந்து கொண்டு பழத்தை துண்டுப் போட்டுக் கொண்டிருந்தார்கள். பெரிய பெரிய கூடையில் தர்ப்பூசணித் துண்டங்கள் ஒரு கட்டை விரற்கடை பருமனுக்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

என்ன விஷயம்? அருகே போய் விசாரித்தேன்.

அவர்கள் எல்லோரும் கம்ப்யூட்டர் தொழிலில் ஈடுபடுபவர்களாம். ஒட்டு மொத்தமாய் லீவு போட்டிருக்கிறார்களாம். அவர்கள் காசுபோட்டு தர்ப்பூசணிப் பழத்தை வாங்கித் துண்டுப் போட்டுக் கொடுக்கிறார்களாம். சமைத்துக் கொடுத்தால் கூட அதில் தவறு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தர்ப்பூசணியில் எந்தத் தப்பும் வராது. இது போல ஒரு ஆரோக்கியமான பழம் இந்தக் கோடைக் காலத்தில் எதுவுமில்லை. அதனால் அத்தனை பேருக்கும் வருடா வருடம் தர்ப்பூசணிப் பழத்துண்டுகளைத் தான் வினியோகிக்கிறோம் என்று சொல்லி ஒரு தர்ப்பூசணிப் பழத்தை ஒரு கூடையில் நறுக்கிப் போட்டுக் கொண்டு கடையிலிருந்து சற்றுத் தள்ளிப் போய் இரண்டு பேர் கூட்டத்தை வரிசைப்படுத்தி விட மற்றவர்கள் எடுத்துக் கொடுத்துக் கொண்டு இருந்தார்கள்.

இளைஞர்கள் முகமெல்லாம், சட்டையெல்லாம், வேட்டியெல்லாம், தர்ப்பூசணிப் பழச்சாறு. ஆனால், அவர்கள் மனம் பெரிய தாமரையாய் மலர்ந்திருந்திருந்தது.

'இன்னும் நாலு வெட்டச் சொல்லு' என்று உரத்தக் குரலில் சொல்ல, அங்கு நறுக்கும் வேலை துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அந்த இளைஞர் சொன்னது போல இதைவிட ஒரு அற்புதமான தானம் எதுவும் இருக்கமுடியாது என்றுதான் தோன்றியது.

ஒரு அம்மாள் ஃப்ளாஸ்க்குகளில் காபி எடுத்துக் கொண்டு வந்திருந்தார். ஒரு பந்தலுக்குள் நுழைந்தார். அவருடைய கணவர் டம்ளர்கள் எடுத்துக் கொடுக்க.. ஃப்ளாஸ்க்கிலிருந்து மணக்கின்ற காபியை கொடுத்துக் கொண்டு இருந்தார். அதன் வாசனையே மிகச் சுவையாக, மிகப் பக்குவமாக தயாரிக்கப்பட்ட காபி என்று சொல்லியது.

அதை முதிய அந்தணர் ஒருவர் வாங்கிக் குடித்துவிட்டு ''ஆஹா... அற்புதம்'' என்று சப்புக் கொட்டினார்.

''இப்படி டிகிரி காபி கொடுக்க வேண்டுமென்று எப்படி தோன்றியது? சுக்கு காபி தானே கொடுப்பார்கள்''.

''அப்படியா! எங்களுக்குத் தெரியாது. இன்று என் தந்தை இறந்த நாள். இந்த அறுபத்து மூவர் விழாவின் போது தான் அவர் இறந்தார். என் தந்தைக்குப் பிடித்த விஷயம் மணக்கின்ற காபி. அதனால் ஒவ்வொரு அறுபத்துமூவரின் போதும் இப்படிக் காபி கொடுப்பதை என்னுடைய கடமையாக, அவருடைய ஆத்மா சாந்தியடையக் கூடிய விஷயமாக நான் செய்கிறேன். முதன் முதலில் ஒரு சரியான நபருக்குக் கொடுக்க வேண்டுமே! என் தந்தைக்குக் கொடுப்பதுபோல் கொடுக்க

வேண்டுமே என்று நினைத்தேன். இதோ பாருங்கள் எண்பது வயது அந்தணர் வாசனையை உணர்ந்து பார்த்துவிட்டு வந்து காபியா... காபியா... என்று ஆவலோடு வாங்கிக் குடித்தார். எனக்கு மனம் நிறைந்து போயிற்று. வயிறு குளிர்ந்து போயிற்று. இது கபாலியின் அருள்'' என்று கண்கள் பனிக்கச் சொன்னார்.

இன்னொரு பெண்மணி நண்பர்களோடு சேர்ந்து முந்நூற்றைம்பது லட்டுகள் செய்து அட்டைப் பெட்டியில் அடுக்கி இரண்டு பையில் எடுத்துக் கொண்டு, தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்து ஒரு பந்தலுக்கள் தஞ்சம் புகுந்து தன் தம்பியோடும், தங்கையோடும் எல்லோருக்கும் லட்டு வழங்கிக் கொண்டிருந்தார்.

''எங்க அம்மா அங்கத் தள்ளி நிக்கறாங்க ஸார். ப்ளீஸ் அவங்களுக்கும் ஒரு லட்டு கொடுங்க ஸார்''.

ஒரு இளைஞன் கேட்க அந்த இளைஞனுக்கு இரண்டு லட்டுகள் கொடுக்கப்பட்டன. அந்த இளைஞன் சற்றுத் தள்ளிச் சென்று இரண்டு லட்டுக்களையும் தானே வாயில் போட்டுக் கொண்டான். கொடுத்த பெண்மணிக்கு அவன் பொய் சொனனது ஒரே சிரிப்பு. சந்தோஷம்.

''அவன் அப்பாவையும் சொல்லியிருந்தால் இன்னொரு லட்டும் கொடுத்திருப்பேனே'' என்று அவர் குதூகலத்துடன் சொன்னார்.

ஐந்து நிமிடத்தில முன்னூற்றைம்பது லட்டுகளும் காணாமற் போய்விட்டன.

நெய் மணக்கின்ற கேசரி, சாம்பார் சாதம் என்று குடும்பம் குடும்பமாய் சைக்கிள் ரிக்ஷாவிலும், ஆட்டோவிலும் அண்டாவில் வைத்து இறக்கி மூலைக்கு மூலை கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு பதினைந்து வயதுப் பையன் பை நிறைய சாக்லேட்டுக்கள் போட்டுக் கொண்டு எதிர்ப் படுகின்ற சிறுவர்களிடம், சிறுமிகளிடம் மட்டும் அந்த சாக்லேட்டுகளை கொடுத்துக் கொண்டு இருந்தான். அவன் அம்மா அப்படி கொடுக்கச் சொல்லியிருக்கிறாராம். மூன்று வருடமாக இப்படிச் சாக்லேட் கொடுக்கிறானாம்.

வயது வித்தியாசமில்லாமல், மதமாச்சரியம் இல்லாமல் சகலரும் இந்த அறுபத்துமூவர் திருவிழாவில் கொடுத்துக் கொண்டிருப்பதும், வாங்கிக் கொண்டிருப்பதும் பார்த்துச் சந்தோஷம் அடைந்தேன்.

ஒரு பை நிறைய தயிர் சாதம், சாம்பார் சாதம், கேசரி தொன்னை, சாக்லேட், தண்ணீர் பாக்கெட், பாதுஷா, லட்டு என்று ஒரு அம்மாள் பையை தூக்கிக் கொண்டு போகும் போது மடக்கி விசாரித்தேன்.

''என்ன வாங்கிக் கொண்டுதான் இருப்பீர்களா. கொடுக்கமாட்டீர்களா'' என்று குறும்புத்தனமாகக் கேட்டேன்.

அந்த அம்மாள் திரும்பி முறைத்துப் பார்த்தாள்.

''நாங்களெல்லாம் வாங்கலைன்னா யார் கொடுப்பாங்க? யாருக்குக் கொடுப்பாங்க? கொடுத்தவங்க சந்தோஷமா இருக்கட்டும் என்று தான் நாங்க நின்னு நின்னு வாங்கிக்கிட்டு போறது. என்ன பெரிய தப்பு கண்டுபிடிக்கிறே''

''இல்லை தாயே''.

வாழையை வணங்கினால் திருமணம் கைகூடும்

திருச்சியிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ள மண்ணச்சநல்லூருக்கு அருகில் உள்ளது. திருப்பைஞ்ஞலி நீலிவனேஸ்வரர் ஆலயம்.

இத்திருக்கோயிலின் தலமரம் வாழைமரம். இத்தலத்திலுள்ள வாழைமரங்களை வணங்கினால் திருமணம் தடைப்பட்டவர்களுக்கும் திருமணம் கைகூடிவிடும்.

நான் கன்னத்தில் போட்டுக் கொண்டேன்.

அவர் பேச்சிலும் ஒரு சத்தியம் இருந்தது.

வாங்குபவர் இல்லையெனில் யார் யாருக்கு கொடுப்பார்? எப்படிக் கொடுப்பார்? வாங்கிக் கொண்டு உண்டு வாழ்த்துவது ஒரு பெரிய கொடை அல்லவா. அதுவும் ஒருவகை தானமல்லவா என்றும் தோன்றியது.

எங்கள் வீட்டிலிருந்து இருநூறு பொட்டலங்கள் தயிர்சாதம் ஊறுகாய் வைத்து காரில் போட்டுக் கொண்டுபோய் மயிலை ஸ்டேஷனுக்கு அருகே நிற்கவைத்து கொடுத்தபோது பலபேரும் மிக வேகமாக வாங்கிக் கொண்டார்கள். படித்த பெண்கள், குடும்பத் தலைவிகள், குழந்தைகள், பெற்றோருடன் வருகின்ற யுவதிகள், வயதானவர்கள் என்று எல்லோரும் ஆவலாக வாங்கினார்கள்.

பொட்டலம் பிரித்து ''அட... வெண்ணெய் மணக்குதே'' என்று சொல்லி விருப்பத்தோடு சாப்பிட்டார்கள்.

''எப்படிப்பா இருக்கு தயிர்சாதம்''

''சூப்பர் ஸார். இப்படி தினம் தினம் அறுபத்துமூவர் வந்தா எவ்ளோ நல்லாயிருக்கும்''

அவன் வாயில் சோறு வைத்துக் கொண்டே பேசினான். அவனிடம் சந்தோஷம் தெரித்தது.

தினம்தினம் அறுபத்துமூவர் விழா நடத்துவது எளிதல்ல. அது வருடத்திற்குகொருமுறை தான் வரும். ஆனால், அந்த விழாவின் போது வாரி வழங்கவும் வாங்கிக் கொள்ளவும் சென்னை நகரத்து மக்கள் அத்தனை பேரும் பரபரத்துக் கும்பலாய்ச் சூழ்ந்து வீதியில் வரும் அறுபத்துமூவர் நாயன்மார்களை கைகூப்பி வணங்கி, கபாலியை கண்குளிரப் பார்த்து, காகிதக் க்ரீடமும், கையில் பலூனும், கீரைக்கட்டும், புதுப்பானையும், அடுப்பும், மண்பாண்டங்களுமாய் அந்தி சாய ஊர் திரும்புவது பார்க்க சந்தோஷமாக இருந்தது.

வாரிவாரிக் கொடுத்த சிவனடியார்களுக்கு விழா எடுக்கும்போது வாரி வாரிக் கொடுப்பது தான் தர்மமிகு சென்னையின் சந்தோஷம். அது தான் சென்னையின் நியதி. அதுதான் மயிலையின் மகத்துவம்.

நீங்கள் எந்த ஊரில் இருந்தாலும் அடுத்தமுறை அறுபத்து மூவருக்கு மயிலை வாருங்கள். வந்து நீங்களும் வாரிக் கொடுங்கள். அல்லது வாங்கி உண்டு மகிழுங்கள். இரண்டும் இங்கு ஒன்றே. இரண்டும் புண்ணியமே.

கலெக்டர் பிளேசுதுரை கட்டித்தந்த தாயார் சந்நிதி

காலம் கி.பி. 1795. அன்று மதுராந்தகம் ஏரியில் மழை, வெள்ளம் நிரம்பி வழிவதாகவும், எந்த நேரத்திலும் ஏரி உடைந்து போகக் கூடும். அதனால் ஊருக்குள் வெள்ளம் புகுந்து அதிக உயிர்ச் சேதம் ஏற்படக்கூடும் எனப் பயந்து, ஏரியைப் பார்வையிட வந்தார் கலெக்டர் பிளேசுதுரை.

கலெக்டரைப் பார்த்து முறையிட மதுராந்தகத்தைச் சேர்ந்த மக்களும் ஏராளமானோர் அங்கே கூடி விட்டார்கள்.

மக்களில் சிலர், கலெக்டர் பிளேசுதுரை அவர்களின் அருகே துணிவாக நெருங்கிச் சென்றார்கள்.

''கலெக்டர் துரை அவர்களே ! மழை வெள்ளத்தால் ஏரி நிரம்பி, உடைந்து போவதால் அடிக்கடி அளவிலா உயிர்ச்சேதமும், பொருட் சேதமும் நேரிடுகின்றது''.

''ஏரி உடையாமல் இருக்க ஒரு வழி இருக்கிறது. அதை நீங்கள் செய்ய வேண்டும்'' என்று முறையிட்டுக் கொண்டார்கள் மக்கள்.

''மணல் மூட்டைகளை நிறைய அடுக்கிக் கரையை உறுதிப்படுத்தக் கூறியுள்ளேன். பணி நடந்து கொண்டு இருக்கிறது. இதற்கு மேல் நான் என்ன செய்ய முடியும்?'' என்று சலித்துக் கொண்டார் கலெக்டர் பிளேசுதுரை.

''எங்கள் ஊரிலுள்ள கோதண்டராமர் ஆலயம் புகழ்மிக்கது. இராமபிரான் திருக்கல்யாணக் கோலத்தில் காட்சி கொடுக்கும் புண்ணிய ஸ்தலம். வைணவ சமயம் கொண்டாடும் ஸ்ரீஇராமாநுஜர் தீட்சைபெற்ற புண்ணியதலம்''.

''இத்தனை மகிமைகள் பொருந்தியுள்ள எங்கள் கோதண்டராமர் ஆலயத்தில் ஜனகவல்லித் தாயாருக்குத் தனிச் சந்நிதி உண்டு. ஆனால் அச்சந்நிதி இடிந்து சிதிலமாகி இருப்பதைச் சீர்படுத்தித் தர யாரும் முன்வரவில்லை. அம்மன் சந்நிதி சிதிலமாகி இருப்பதால்தான் ஏரிவெள்ளம் ஊருக்குள் புகும் அபாயம் அடிக்கடி நேரிடுவதாக நாங்கள் நம்புகிறோம். இந்தச் சந்நிதியை மட்டும் நீங்கள் சீர்படுத்தித் தந்துவிட்டால் ஏரி ஒருபோதும் உடையாது. அதற்கு ஆவன செய்வதாக உறுதி கூறுங்கள்'' என்று மக்கள் கலெக்டர் பிளேசு துரையை வற்புறுத்தினார்கள்.

''சன்னதியைப் பற்றிக் கவலைப்பட இதுவா நேரம் ! மழையின் வேகத்தால், எந்நேரம் ஏரி உடைந்து மக்களுக்கு என்னாகுமோ என்று நான் நடுங்கிக் கொண்டிருக்கின்றேன். போங்கள் எல்லோரும்'' என்று கலெக்டர் கூற, மக்களும் கவலையோடு அவரவர் வீடு திரும்பினார்கள்.

கலெக்டர் தம் இருப்பிடம் திரும்பும் வழியில் தம் வாகனத்தைக் கோயில் நோக்கித் திருப்பக் கூறினார். கோயிலைத் திறக்கச் சொல்லி, மக்கள் முறையிட்ட ஜனகவல்லித் தாயார் சந்நிதியைப் பார்த்தார். வேற்று மதத்தவரே ஆயினும் பார்த்தவுடனே அவருக்குக் கோயில் பிடித்துவிட்டது.

வில்லேந்திய இராமர் சந்நிதிக்குச் சென்று சற்று நேரம் அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த கலெக்டர், மக்களும் கேட்க ''இதோ இந்த ராமர் ஏரியை உடைபடாமல் காத்துத் தந்தால் நான் தாயார் சந்நிதியைச் செப்பனிட்டுச் சீர்படுத்துகிறேன். இது சத்தியம்'' என்று கூறி தம் பங்களாவிற்குத் திரும்பினார்.

மழை மேலும் வலுத்துக் கொண்டிருந்தது. காற்றும் பலமாக வீசியது. கலெக்டரால் நிம்மதியாக வீட்டில் இருக்க முடியவில்லை. மறுபடியும் ஏரிக்கரைக்கே வந்து சேர்ந்தார்.

அங்கே அவர் கண்ட காட்சி அவரை வியக்க வைத்தது.

''இந்த இருளிலும் கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் கைகளில் வில்லும்அம்பும் ஏந்திக் கம்பீரமாய் இருவர் நடந்து போகிறார்களே ! ஏரியைச் சுற்றிச் சுற்றி மின்னல் மாதிரி வருகிறார்களே! யார் இவர்கள்''.

''ஆம் ! இவர்கள் வேறு யாருமல்ல. நாம் கோயிலில் பார்த்த இராம, இலக்குவனர்களே இந்த

இருவரும்''.

''இறைவா ! என்னே உன் கருணை'' என்று மெய்சிலிர்த்தார் கலெக்டர் பிளேசுதுரை. முழந்தாளிட்டு இராம, இலக்குவனரை வணங்கிப் பரவசம் அடைந்தார் கலெக்டர் பிளேசுதுரை.

அன்றிரவு இராம, இலக்குவனர் காவல் காத்தபடியால் ஏரி உடையவில்லை. மழையும் தணிந்து, மக்களும் காப்பாற்றப்பட்டார்கள்.

காலையில் மீண்டும் கோயில் சென்று வழிபட்ட கலெக்டர் பிளேசுதுரை, தாம் உறுதி கூறிய படியே தம் சொந்த செலவிலேயே தாயார் சன்னிதியினைக் கட்டி முடித்தார்.

மதுராந்தகம் தாயார் சந்நிதியில் உள்ள கல்வெட்டு இதை நமக்கு உணர்த்துகின்றது.

''இந்த தர்மம் கும்பினி சாகிர கலெக்டர் லயோனல் பிளேசுதுரை அவர்களது'' என்று கல்வெட்டு சாசனம் கூறுகின்றது.

கலெக்டர் லயோனல் பிளேசுதுரை தாயார் சந்நிதியைப் புதுப்பித்துக் கட்டிய ஆண்டிலிருந்து எவ்வளவு மழை வெள்ளம் வந்தாலும் மதுராந்தகம் ஏரி உடைவதில்லை என்பது நிதர்சன உண்மையாகும்.

மதுராந்தகம் அருள்மிகு கோதண்ட ராமருக்கு அன்று முதல் ''ஏரி காத்த ராமர்'' என்று பட்டப் பெயரும் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது.

திருமால் திருநாம விளக்கம்

கேசவன்	-	கேசி என்றஅசுரனை அழித்தவர் கேசவன்
நாராயணன்	-	நாரம் என்றால் தண்ணீர். தண்ணீரில் பள்ளி கொண்டவர் நாராயணர்.
மாதவன்	-	மா என்றால் லட்சுமி ; தவன் என்றால் கணவன். லட்சுமிதேவியின் கணவர்.
கோவிந்தன்	-	தேவர்களால் துதிக்கப்படுபவன் என்பது பொருள்.
விஷ்ணு	-	எங்கும் வியாபித்து இருப்பவர் என்பது பொருள்.
மதுசூதனன்	-	மதுகைடபரை அழித்தவர் என்பது பொருள்
ேரிவிக்ரமர்	-	மூவுலகங்களை அளந்தவர்.
வாமனர்	-	குள்ளமான பிரம்மசாரியாக வந்தவர்.
ஸ்ரீதரன்	-	திருமகளைத் தரித்துக் கொண்டு இருப்பவர்.
ரிசிகேஷன்	-	ஒவ்வொருவர் உள்ளும் அந்தராத்மா வாக விளங்கும் பரமாத்மா என்பது பொருள்.
பத்மநாபன்	-	நாபியிலிருந்து பூத்த பத்மத்தோடு தோன்றுபவர் பத்மநாபர்.
தாமோதரன்	-	உலகங்களைத் தம் உதரத்தில் வைத்துக் காப்பவர் தாமோதரன்

மகாபாரதம்

முனைவர் த. அமிர்தலிங்கம்

25 வீரஅபிமன்யு

பதின்மூன்றாம் நள் திட்டதுய்மன் பாண்டவர் சேனையை மகரவியூமாக அணிவகுக்கிறான். நீண்ட பருத்த முகத்துடனும், அதில் இரண்டு வாய்களுடன், நான்கு கால்களுடன் மீனின் வடிவம் அமையுமாறு வகுக்கப்படுவது மகரவியூமாகும்.

துரோணர் கௌரவ சேனையைச் சக்கரவியூமாக வகுக்கிறார். தேரின் சக்கரவடிவமாகச் சேனையை ஒழுங்கு பட நிறுத்துதல் சக்கரவியூமாகும், சக்கரவியூகம் வகுக்கப்படுமானால், எதிரிகள் இந்த வியூகத்தைப் பிளந்துஅதன் உள்ளே நுழைவது மிகக்கடினமாகும். காரணம் சக்கரவியூகம் என்பது எட்டுச் சுற்றுக்களுடன் அமைக்கப்படும் வியூகமாகும், இதன் உள்ளே நுழைவதற்கு ஒரே ஒரு வழிமட்டும் இருக்கும்.

அந்த ஒரு வழியும் கூட மகாரதர்களால் முழுவதும் காவல் செய்யப்படும். ஆதலால் வியூகத்தைச் சிதைப்பது என்பது மிக மிகக் கடினமாகும்.

தருமர் அர்ச்சுனன் பெற்ற வீரமைந்தன் அபிமன்யுவைத் தம் அருகே அழைத்து ஆசைதீர அணைத்துக் கொள்கிறார். ''மகனே! வீர அபிமன்யூ! துரோணர் என்னை உயிரோடு சிறைப்பிடித்திட வேண்டும் என்பதற்காகவே சக்கர வியூகத்தை இன்று வகுத்திருக்கிறார். அந்தச் சக்கர வியூகத்தைப் பிளந்திட உன்னால் தானே ஆகும்! உன் தந்தையைப் போலவே சக்கர வியூகத்தைப் பிளப்பதற்கு வல்லவனாகிய நீதான், இப்பொழுது போய் வியூகத்தைச் சிதைத்து, வெற்றியை நமக்காக்க வேண்டும். போய் வா! உனக்குக் கொற்றவை அருள்புரிவாள்'' என்று ஆசி கூறிச் சக்கர வியூகத்தைச் சிதைப்பதற்கு அபிமன்யுவை அனுப்பி வைக்கிறார்.

அபிமன்யு வீரத்தில் தன் தந்தை அர்ச்சுனனுக்கு நிகரானவனே, அவன் தன் மாமனாகிய கண்ணனிடமே அத்திரப் பயிற்சிகள் அனைத்தையும் பயின்றிருக்கிறான். சக்கர வியூகத்தைப் பிளப்பதற்கான அத்திர வித்தைகளையும் கூட கண்ணன் அபிமன்யுவிற்குக் கற்றுத் தந்திருக்கிறார்.

சப்தரிஷிகள்

அத்திரி, பிருகு, புலத்தியர், வசிஷ்டர், கௌதமர், ஆங்கிரசர், மாரிசி ஆகிய 7 பேரும் சப்தரிஷிகள் ஆவர்.

இவர்கள் ஏழுபேரும் கடுமையாகத் தவம் புரிந்து தம்மை ஆட்கொள்ளுமாறு திருத்தவத்துறை இறைவரை (லால்குடி) வேண்டினர்.

சிவபெருமானும் தம் லிங்கத்திற்குள் 7 முனிவர்களையும் உள்வாங்கிக் கொண்டார்.

இன்றும் தவத்துறை சிவலிங்கத்தின் மேல் பகுதியில் வரிவரியாகப் பள்ளம் இருப்பதைக் காணலாம்.

ஏழு முனிவர்களும் சிவலிங்கத்துள் ஐக்கியமானபடியால் லால்குடி இறைவருக்குச் ''சப்தரிஷீஸ்வரர்'' என்பது பெயராகும்.

ஆகவேதான் தன் பெரிய தந்தை தருமர் தனக்கிட்ட கட்டளையைத் தலைமேற்கொண்ட அபிமன்யு சிங்கமெனச் சீறி உடனே புறப்பட்டுப் பாய்கிறான் சக்கர வியூகத்தைப் பிளப்பதற்கு.

அபிமன்யுவின் பாதங்களில் பராக்கிரமத்தின் அறிகுறியான வீரக்கழல்கள், மார்பினில் சந்திரகாந்தி போல் ஒளி வீசும் முத்துமாலை, இரு தோள்களிலும் பாம்பின் வடிவில் திகழும் தோள்வளைகள், இரு காதுகளிலும் சூரியனைப் போல் ஒளிவிடும் இரத்தின குண்டலங்கள் - அபிமன்யுவின் வீரமேனியை இத்தகைய அணிமணிகள் அலங்கரிக்க, அழகில் மன்மதனையும், வீரத்தில் இராமனையும் நிகர்கின்ற அபிமன்யு, துரோணரின் சக்கர வீயூகத்தைப் பிளப்பதற்குத் தேரின் மேல் ஏறி விரைந்து பாய்கின்றான்.

கண்ணன் கற்றுத் தந்த மந்திரத்தை உச்சரித்தவனாய் ஒரு கோடி அம்புகளை ஏவுகிறான் அபிமன்யு. சக்கர வியூகத்தின் முதல் சுற்றைக் காத்து நிற்கும் எண்ணற்ற மாவீரர்களின் தலைகளையும், தோள்களையும், தொடைகளையும் அபிமன்யு ஏவிடும் அம்புகள் துளைத்து வீழ்த்த சக்கர வியூகம் சிதைவுபடுகின்றது ஒரு நொடியில்.

''அச்சுதப் பெயர் மாதுலன் புகலரிய
மந்திரம் அன்பினோடு
உச்சரித்துப் ஒரு நொடியினிற் பலகோடி
பாணம் உடற்றினான்
எச்சிரத்தையும் எப்புயத்தையும்
இடைதுனித்தலின் அடையமுன்
வச்சிரத்தவன் உரைசெய் சக்கரம் மாறிலா
அணிபாறவே''

(பதின்மூன்றாம் போர்ச் சருக்கம், 24)

அபிமன்யு தான் ஒருவனாகவே இலட்சக்கணக்கான வீரர்களை இன்றொரு நாளில் மட்டுமே கொன்று குவித்து விடுகிறான். துரோணர், கர்ணன், அசுவத்தாமன், கிருபன், கிருதவர்மன் முதலான மாபெரும் வீரர்கள் எல்லாம் கூட அபிமன்யுவிற்குப் புறங்கொடுத்துத் தோற்று ஓடுகின்றனர்.

துரோணர், பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் ஒரு சேர அத்திர வித்தைகளைப் பயிற்றுத் தந்த ஆசான். அத்தகைய துரோணருக்கே புதிது புதிதாக அத்திர வித்தைகளைக் கற்றுத் தருகிறான் அபிமன்யு என்றால் அடடா அவனுடைய வீரத்தை என்னவென்பது?

''வெல்லவந்த துரோணமாமுனி விறல்
அழிந்தது குருவெனும்
சொல்லழிந்தது வில்லழிந்தது தேரழிந்தது
தொடைகளால்''

(பதின்மூன்றாம் போர்ச் சருக்கம், 25)

''கர்ணா! ஆபத்து ஆபத்து! அதோ துரோணரையே விரட்டியடிக்கிறான் பார் அபிமன்யு! நீபோய், அவனை எதிர்த்துப் போரிடு'' என்று துரியோதனன் வற்புறுத்த, வீர அபிமன்யுவை வீழ்த்தி விடுவதாக வீரம் பேசி இப்பொழுது அபிமன்யுவுடன் போர் புரிய வருகிறான் தான சூர கர்ணன். ஆனால் அபிமன்யு ஏவும் கணைகளால் அங்கதேசமன்னனாகிய கர்ணன், தன்னுடைய அங்கமெல்லாம் புண்ணாகித் தனக்கு இனிப் போரே வேண்டாம் என்பதாக எண்ணி, உடைபட்டுப் போன தன் தேரிலிருந்து உருண்டு, வேறு ஒரு தேரில் ஏறித் தப்பித்து ஓடுகிறான்.

அசுவத்தமானும் தன் தந்தை துரோணரை விரட்டி அடித்த அபிமன்யுவிடம் தன் வீரத்தைக் காட்ட முயன்று முடியாமல் அபிமன்யு விடும் அம்புகளால் துளைக்கப்பெற்று மயங்கித் தரையில் சாய்கிறான். கிருதன், கிருதவன்மா இருவரும் ஒருசேர வந்து, தங்கள் தங்கள் வில் அறுபட்டு

திருக்கோயில்
திங்கள் இதழ்

தனி இதழின் விலை	ரூ 10/
ஓராண்டுச்சந்தா	ரூ 120/
பத்து ஆண்டுச்சந்தா	ரூ 1000/
ஆயுட்காலச்சந்தா	ரூ 1500/

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!

திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :

1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்)	ரூ 15,000/
2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ 10.000/
3. பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ 7,500/
4. உள்புறம் முழுப்பக்கம்	ரூ 5,000/
5. உள்புறம் அரைப்பக்கம்	ரூ 3,000/

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

திருத்தொண்டர் திருக்குலம்

ஆதிசைவ அந்தணர் நால்வர்.

1. புகழ்த்துணை நாயனார்
2. சடையனார்
3. இசைஞானியார்
4. நம்பியாரூரர்

ஆயுதமற்றவர்களாய் அஞ்சி ஓடுகிறார்கள். சகுனி, தன்னுடைய மகனைத் துணைக்கழைத்துக் கொண்டு அபிமன்யுவை எதிர்க்க வருகிறான். அபிமன்யு ஏவிடும் அம்புகள் சகுனி மகன் உலூகனை உலகத்தைவிட்டே அனுப்பிவிட, மாண்ட மகனை அணைக்கவும் கூட வீரம் இல்லாமல் அபிமன்யுவின் அம்புகளுக்கு அஞ்சி ஓடுகிறான் சகுனி.

விகர்ணன் முதலான துரியோதனனின் தம்பிமார்களும் அபிமன்யுவிடம் தோற்று ''அர்ச்சுனனை எதிர்த்துப் போர் புரிவதும் கூட ஆகும். ஆனால் அபிமன்யுவிடம் நம்முடைய வீரம் செல்லாது'' என்று கூறி அபிமன்யுவின் வீரத்தைப் பாராட்டி யுரைத்துப் புறங்கொடுத்து ஓடுகிறார்கள். இப்படி கௌரவ சேனை முழுவதும் திரண்டு ஒருசேர எதிர்த்து வந்தும் கூட, அபிமன்யு, தான் தனி ஒருவனாக எதிர்த்து வெற்றிவாகை சூடிக் கொண்டிருக்கிறான்.

ஆனால் அதே நேரத்தில் தருமரும் வீமனும் அபிமன்யுவின் வெற்றிச் சேதி ஒன்றும் அறிந்திடாமல் ''வியூகத்திற்குள் சென்ற அபிமன்யு என்ன செய்கின்றானோ தெரியவில்லையே!'' என்பதாகக் கலங்கித் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். தனியாக அபிமன்யுவை வியூகத்தற்குள் அனுப்பி வைத்ததற்காக தருமர் மேல் வருத்தம் கொள்ளும் வீமன் ''அண்ணா! எப்படி அபிமன்யுவை நீதனியாக அனுப்பலாம்? அப்படி அனுப்பிய போதே துணைப் படைகளையும் அனுப்பாமல் போனதேன்? சிதைவுற்ற சக்கர வியூகமும் பின் சேர்ந்து கொண்டு விட்டதே! பாலகன் ஆகிய அபிமன்யுவை அந்தப்பாவி துரியோதனன் சூழ்ச்சிகள் பல செய்து வதைத்திட துடிப்பானே!'' என்று கலங்கிக் கூற தருமரும் கூடதம் செயலுக்காக வருந்துகிறார்.

''ஆமாம் வீமா! உடனே நீபோய் அபிமன்யுவைக் காப்பாற்று. துணைப் படைகளையும் அழைத்துச் செல்'' என்று தருமர் வீமனை வேகப்படுத்துகிறார். வீமனும் கலிங்கர், சோனகர், மகதர், கன்னடர், தெலுங்கர், ஆரியர், துளுவர், பப்பரர், சீனர், சாவகர், சிங்களர், சூலிங்கர், மாளவர், களமர், ஒட்டியர், குகுரர், கொப்பளர், கூபகர் ஆகிய மன்னர்களையும் அவர்தம் சேனைகளையும் அழைத்துக் கொண்டு அபிமன்யுவுக்கு உதவ விரைகின்றான்.

வீமன் தன்னுடைய சத்துருகாதினி கதையைக் கொண்டு சக்கரவியூகத்து முன்னணிப் படையினரை மோதுகின்றான். அப்படைகளும் வீமனுக்கு ஆற்றிடாமல் ஈக்களைப் போல் சிதறி ஓடுகின்றன. வீமனும் அவனுடன் வந்து துணை மன்னர்களும் சக்கர வியூகத்தைப் பிளந்து கொண்டு வேகமாகச் செல்கிறார்கள். இதைக் கண்ணுறும் துரியோதனன் சயத்திரனை அழைத்து ''சயத்திரதா! வந்தது நமக்கினி ஆபத்து. ஏற்கெனவே அபிமன்யு நம்முடைய சேனையின் பெரும்பகுதியைக் கொன்று அழித்து விட்டான். இப்பொழுது வீமனும் சக்கரவியூகத்தைப் பிளந்து கொண்டு வந்து கொண்டிருக்கிறான். வீமன் அபிமன்யு இருவரும் இணைந்துவிட்டால் நாம் அத்தனைப் பேரும் தொலைந்து விடுவோம். நீதான் அவர்கள் இருவரும் சேர்ந்திடாவண்ணம் உன்னிடமுள்ள சிவபெருமான் கொடுத்த கொன்றை மாலையால் இருவரையும் பிரிக்க வேண்டும்'' என்று அலறுகின்றான் துரியோதனன்.

இந்தச் சயத்திரதன் சிந்து தேசத்திற்கு அரசன். துரியோதனனின் ஒரே தங்கையான துச்சளையின் கணவன். இவனும் துரியோதனனைப் போல குணத்தால் கொடியவன்.

சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்து கொன்றைமாலையும், கதாயுதமும் பெற்றவன். அவ்வாறு சிவபெருமானால் அளிக்கப் பெற்ற கொன்றை மாலையை அபிமன்யுவும் வீமனும் சேர்ந்திடாவண்ணம் அவர்களுக்கு இடையில் இட்டுப் பிரித்திடுமாறு சயத்திரதனைத் துரியோதனன் கேட்டுக்கொள்கிறான். துரியோதனன் கேட்டுக் கொண்ட படியே சயத்திரதனும் பஞ்சாட்சர மந்திரத்தைக் கூறிக் கொன்றைமாலையை வீமனுக்கும் அபிமன்யுவிற்கும் இடையில் வீசி எறிகிறான்.

சிவபெருமானின் கொன்றைமாலை சக்கர வாளமலைபோல் நிமிர்ந்து வீமனும் அபிமன்யுவும் சேர்ந்திடாதவாறு அவர்களைப் பிரித்து விடுகிறது. கௌரவ சேனையை வென்று முடித்த அபிமன்யு 'இனி திரும்புவோம்' என மீள நினைக்கையில் அவனைச் சிவபெருமானின் கொன்றை மாலை வழிமறித்துத் தடுக்கிறது. தன்னைக் கொல்வதற்கு துரியோதனன் செய்துவிட்டிருக்கும் சூழ்ச்சியே இது என்பதாகத் தெளிகின்ற அபிமன்யுவும் 'மரணமே வருவதாயினும் வரட்டும்' என்பதாகத் துணிந்து மீண்டும் கௌரவப் படையினரோடு போரிடத் துணிந்து முன் செல்கிறான்.

அதே நேரம் வீமன், சிவபெருமானின் கொன்றை மாலை அபிமன்யுவிற்கு உதவிட இயலாமல் தன்னைத் தடுத்து நிற்பதைக் கண்டு

கண்களும் கலங்கி ''அபிமன்யு! மகனே! நான் என்ன செய்வேனடா! உன்னைக் காக்க இயலாமல் என்னைத் தடுத்துநிற்கின்றதே ஈசன் கொன்றை மாலை! துரியோதனனின் சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று! உன்னைத் தனியாக்கிக் கொன்றுவிடத் துடிக்கும் வஞ்சகன் துரியோதனனின் மகனை நீயும் கொன்றுவிட வேண்டும். அது உன்னால் ஆகும்'' என்பதாகத் தனக்குத் தானே கூறிப் புலம்பியவாறு, கொன்றை மாலையைக் கடந்திட நினையாமல் அம்மாலையை வணங்கியவாறே அங்கேயே திகைத்து நின்று விடுகிறான் வீமன்.

இவ்வாறு வீமனையும் , அபிமன்யுவையும் இணைய வொட்டாமல் தடுத்து விட்ட சயத்திரதனின் கொன்றை மாலையைக் கொண்டாடிப் போற்றுகின்ற துரியோதனன், 'இதுவே நல்ல தருணம், அபிமன்யுவைத் தாக்கிக் கொன்று விடுங்கள்' என்பதாகக் கட்டளையிட்டு துரோணரையும், கர்ணனையும், மற்ற மற்ற வீரர்களையும் அவர்களுடன் நில்லாது தன் மகனான இலக்கண குமாரனையும் கூட அனுப்பி வைக்கிறான். பதினோராம் நாள் போரில் தன்னைச் சிறை பிடித்து அவமானப்படுத்திய அபிமன்யுவை வென்றிட இதுவே நல்ல நேரம் என்பதாக நினைத்து இலக்கண குமாரனும் தனக்குத் துணையாக ஆயிரம் அரசர்களையும் அழைத்துக் கொண்டு வந்து அபிமன்யுவை நாலாபுறங்களிலும் வளைத்துக் கொண்டு தாக்குகின்றான்.

அபிமன்யு அச்சம் என்பதே அறியாமல் முருகக் கடவுளைப் போன்றே தானும், தனி ஒருவனாக நின்று தன் ஆற்றலைக் காட்டிப் போர் புரிகின்றான். பம்பரம் போல் சுழன்று சுழன்று அபிமன்யு அம்புகளை ஏவ, அவனை எதிர்த்து வந்த மன்னர்கள் எல்லாம் மீண்டும் சிதைந்து ஓடுகின்றனர். அபிமன்யுவின் அம்புகள் இலக்கண குமாரனின் இரு தொடைகளிலும் பாய்ந்து, இரு தோள்களிலும் பாய்ந்து அவன் இரு கால்களையும், இரு கைகளையும் துண்டித்து விடுகின்றன. அபிமன்யு மேலும் சில அம்புகளை ஏவி, இலக்கண குமாரனின் தலையையும் அவனுடைய உடலிலிருந்து தனித்துத் தனியே விழ வைத்து விடுகிறான். இத்தனையும் துரியோதனன் காண, அவன் கண் முன்பாகவே நடந்து முடிந்து விடுகின்றது.

மன்னர் மன்னனாகிய துரியோதனனின் மகன் இலக்கண குமாரன் மடிந்து விடுகிறான். துரோணர் இருக்க, கர்ணன் இருக்க, துரியோதனனும் பார்த்திருக்கவே பார்த்தன் மகன் அபிமன்யு இந்த மாபெரும் சாதனையை நிகழ்த்திக் காட்டி விடுகிறான். ஓ வென்று கதறி அழும் துரியோதனன் ''என் மகனைக் கொன்ற அபிமன்யுவையும் குத்துங்கள், கொல்லுங்கள். இல்லாவிட்டால் எனக்கு இந்த அரசு வேண்டாம்; வாழ்வும் வேண்டாம், நானும் கூட சாகின்றேன்!'' என்று ஓலமிடுகின்றான்.

பக்தன் - சித்தன்

கடவுளைக் காண
முயல்பவன் பக்தன்.
கடவுளைக் கண்டு
தெளிந்தவன் சித்தன்.

- பேராசிரியர் ஸ்ரீ தெ. பொ. மீ.

**''மன்னவர் மைந்த ரோடு
என்மைந்தனைக் கொன்ற மைந்தன்
தன்னையும் இமைப்பிற் சென்று சயமுறச்
செருத்திலீரேற்
பின்னையிவ் வரசு வேண்டேன் பெருமித
வாழ்வு வேண்டேன்
என்னுயிர் தானும் வேண்டேன் என்றனன்
இராசராசன்''**

(பதின்மூன்றாம் போர்ச் சருக்கம், 92)

மகனை இழந்த சஞ்சலத்தில் சாகட்டும் துரியோதனனும் என்று துரோணரும், மற்றவர்களும் விட்டிருந்தால் இத்துடனே பாரதப் போரும் நிறைவு பெற்றுவிட்டிருக்கும். மாறாக துரோணரும் கர்ணனும் மற்ற மற்ற மன்னர்களும் துரியோதனனுக்கு ஆறுதல் கூறி அபிமன்யுவை நாங்கள் எப்படியும் கொல்கிறோம். கொன்றிடாவிட்டால் நாங்கள் இனி வில்லினை ஏந்தவே மாட்டோம்'' என்பதாகச் சத்தியம் செய்து கொடுத்து அனைவரும் அபிமன்யுவை நோக்கித் திரண்டு வருகிறார்கள்.

பெருவெள்ளம் பொங்கி வந்தாலும் இமயமலை நடுங்கிடுமா? அப்படியே அபிமன்யுவும் தன்னுடைய மனம் சிறிது கலங்கிடாதவனாய் மலை போல் நின்று எதிரிகளின் அம்புகளைத் தன்னுடைய அம்புகளால் விலக்கியும் ஆற்றல் மிக்க தன் அம்புகளால் எதிரிகளை வீழ்த்தியும் ''இப்படியும் ஒரு வீரனா!'' என்று தேவர்கள் எல்லாம் வாழ்த்தி வியக்க மேலும் மேலும் போர் புரிகின்றான்.

சகுனியின் மைந்தர்கள் மேலும் எழுவரை அபிமன்யு இப்போரில் கொல்லுகின்றான். துரியோதனன் சேனையில் இன்றைய ஒருநாளில் மட்டும் ஒரு கோடி மன்னர்கள் மடிகின்றனர் என்று கூறும் வில்லிபுத்தூரார்

**''சிலையழிந்தவர் அநேகர் தேரழிந்தவர்
அநேகர்
தலையழிந்தவர் அநேகர் தாள் அழிந்தவர்
அநேகர்
நிலையழிந்தவர் அநேகர் நெஞ்சழிந்தவர்
அநேகர்
துலையழிந்தவர் அநேகர் தோள்
அழிந்தவர் அநேகர்''**

(பதின்மன்றாம் போர்ச் சருக்கம், 98)

உருத்திராட்சம் அணிவதால் உண்டாகும் பலன்

உருத்திராட்சம் அணிவதால் நம் வேர்வை நீர் அதன் மேல் பட்டு, நம் நெஞ்சில் அந்நீர் பட்டு, அந்த நீர் நெஞ்சின் உள் பகுதிக்குள் சென்று நெஞ்சு வலி சம்பந்தமான நோய்களைக் குணமாக்குகிறது.

மேலும் உருத்திராட்சம் அணிந்து கொள் வதனால் வாத, பித்த, சிலேத்தும நாடிகள் சம நிலையில் வேலை செய்து எந்த நோயும் மனிதனைத் தாக்காதவண்ணம் காக்கின்றது. மேலும் வெறி உணர்வுகளைக் கட்டுப்படுத்தி உருத்திராட்சம் மனிதனைச் சாந்தப்படுத்துகின்றது.

என்று மேலும் மேலும் அடுக்கிக் கூறிக் கொண்டே போவதைக் காணுகின்றோம்.

கர்ணன் மூன்று முறை புறங்கொடுத்து அபிமன்யுவிடம் தோற்கிறான். அவன் அபிமன்யுவிடம் வந்து போர் புரிவதும், பின் புறங்கொடுத்து ஓடுவதுமாகப் பலருடைய கேலிக்கு ஆளாகிறான். கேலிக்கு ஆளானாலும் பரவாயில்லை, துரியோதனனின் கோபத்திற்கு ஆளாகிவிடக் கூடாது என்றே அஞ்சுகின்றனர் கௌரவ சேனா வீரர்கள், அதனால் போர் மரபுகளை எல்லாம் மறந்தவர்களாய் அபிமன்யு ஒருவனுடனே அத்தனை பேரும் திரண்டு போர் சேய்கின்ற அலங்கோலப் போரினையே இந்தப் பதின்மூன்றாம் நாள் போரில் நாம் காணுகின்றோம்.

ஒரு பக்கம் துரோணர் அபிமன்யுவுடன் போர்புரிந்து கொண்டிருக்க, கர்ணன், அசுவத்தாமன், சல்லியன், கிருதன், கிருதவன்மா, சயத்திரதன் முதலான எண்ணற்ற மன்னர்களும் அபிமன்யுவை நாலாபுறமும் சூழ்ந்து தாக்கிப் போர் புரிகின்றனர். இத்தகைய போரின் இறுதியில் தான் அபிமன்யுவின் தேரைக் கர்ணன் சிதைத்து அழித்து விடுகின்றான். எத்தனை முறை கர்ணனின் தேரை அழித்து அவனைத் தரையில் நிற்க வைத்தான் அபிமன்யு! அத்தகைய ஆற்றல் மிக்க அபிமன்யுவின் தேரையும் சிதைத்து அவனைத் தரையில் நிற்கச் செய்து விட்டான் அவனுடைய பெரிய தந்தையாகிய கர்ணன் என்று அந்த நிலையிலும் கூட அபிமன்யுவின் வீரத்திற்கே முதன்மைச் சிறப்புக் கொடுத்து வில்லிபுத்தூராழ்வார்,

''தன்னை அத் தனயன் செய்த தாழ்வெலாம் தனயன் தன்னைப்
பின்னை அத் தந்தை செய்து பின்னிடா தசைந்து நிற்ப
முன்னைய புரவித் தேரும் ஒத்தவெஞ் சிலையுமின்றி
மின்னை ஒத்திலங்கும் வாளோடும் அவனிமேல் விரைந்து பாய்ந்தான்''

(பதின்மூன்றாம் போர்ச் சருக்கம், 105)

என்று பாடுகிறார்.

அபிமன்யு தன்னுடைய தேரையும் வில்லையும் இழந்து, வாளுடன் தரையில் பாய்ந்து போர் செய்வதற்கு நிற்க, அவனுக்குத் தோற்று ஓடிய பகை மன்னர்கள் அத்தனைப் பேரும் ' இனி அபிமன்யுவால் நம்மை ஒன்றும் செய்ய முடியாது'' என்று துணிவோடு நெருங்கி வருகிறார்கள். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பது பழமொழி. அபிமன்யு தன் வலக்கையில் வாளையும், இடக்கையில் கேடயத்தையும் ஏந்திக் கொண்டு, மண்டலமாகச் சுற்றிச் சுற்றி வந்து அப்பொழுதும் அனைவரையும் தாக்கி வீரமுடன் போரிபுரிகின்றான். துரோணர், கர்ணன் முதலான பலர் விடும் அம்புகளை எல்லாம் தன்னுடைய வாளினாலேயே வெட்டி வீழ்த்தியவாறே துச்சாதனனின் மகன் துச்சனியின் தலையையும் கூட அதே வாளால் வெட்டி அபிமன்யு வீழ்த்திடும் போது அதைக் காணும் அதிர்ச்சியில் நடுங்கி மயங்கி விழுந்து விடுகிறான் துரியோதனன்.

துரோணருடைய தேரையும் மூன்று முறை தன்னுடைய வாளால் சிதைத்துச் சிரிக்கிறான் அபிமன்யு. நான்காம் முறையாக ஒரு மலை போன்ற தேரில் துரோணர் ஏறி வந்து அபிமன்யுவை எதிர்க்கிறார். அந்தத் தேரையும் சிதைத்து விட வாளைச் சுழற்றியவாறு அபிமன்யு விரைந்து வர, துரோணர் விடும் அம்புகள் பல இம்முறை இலக்கு தவறிடாமல் சீறிவந்து, வீர அபிமன்யுவின் வாள் பிடித்த வலக்கையினை அப்படியே துண்டித்து வீழ்த்தி விடுகின்றன.

மண்ணுலகை மட்டுமல்ல, விண்ணுலகையும் கூட வென்று பாண்டவர்களுக்குக் காணிக்கை ஆக்கிட வல்ல அந்தக் கையை - வீரக் கையை, அர்ச்சுனனின் நம்பிகைகையை, அபிமன்யுவின் வலது கையை துரோணர் வாளோடு வீழ்த்தி விடுகிறார். அப்பொழுதேனும் அஞ்சித் தளர்கிறானா நம் வீர அபிமன்யு?

''இக்கணமே சொர்க்கம் நேரினும் நேரட்டும். என்னை எதிர்ப்போரும் அவ்வாறே வீர சொர்க்கத்தைக் காணட்டும்'' என்பதாகத் துணிந்து தன்னுடைய இடது கையில் தேருருளை ஒன்றை ஏந்தி அதைச் சக்கராயுதம் போல் சுழற்றுகின்றான் அபிமன்யு.

''தன் மாதுலன் முதனாள் அரைதரு மந்திரம் ஒன்றால்
என் மாமணி யுருள் ஒன்றினை எரிச்சக்கரமாக்கிக்
கன்மாரி விலக்குங் கிரியென மேல்வரு கருதார்
வின்மாரி விலக்காவது கொடியாரையும் வீழ்த்தான்''

(பதின்மூன்றாம் போர்ச் சருக்கம், 115)

கண்ணன் கற்பித்திருந்த மந்திரத்தை ஓதி, அபிமன்யு தேர் உருளையைச் சக்கராயுதமாக்கிச் சுழற்ற பகைவர்கள் ஏவிடும் அம்புகள் எல்லாமும் கூட அந்தத் தேர் உருளையின் மீது பட்டுப் பயனின்றிச் சிதைகின்றன. அபிமன்யு அந்தத் தேருளையைக் கொண்டும் பலருடைய தலைகளை மோதி உருள வைக்கின்றான். தேரினை இழந்தும் கலங்கிடாமல், வலக் கையை வாளொடு இழந்தும் நடுங்கிடாமல், தன் கைக்குக் கிடைத்ததெல்லாம் கொண்டு அபிமன்யுவும் மோதி தன்னுடைய சேனையை அதம் செய்திடுவதைக் கண்டு மனம் புழுங்கிப் புழுங்கிச் சாகிறான் துரியோதனன். அவன் சயத்திரதனிடம் ''இனியும் காலங்கடத்திடாமல் சிவபெருமான் கொடுத்த கதாயுதத்தால் அபிமன்யுவின் தலை சிதறக் கொல்வாய்'' என்று கூற, சயத்திரதனும் கதாயுதத்தை ஏந்திக் கொண்டு அபிமன்யுவுடன் போர் புரிய வருகிறான். அதைக் காணும் அபிமன்யு தேருளையைக் கீழே வீசி, தானும் ஒரு கதாயுதத்தை இடக்கையில் ஏந்தியவனாய் சயத்திரதன் மேல் பாய்கின்றான்.

. அபிமன்யுவும், சயத்திரதனும் இரண்டு சிங்கங்கள் சீறி மோதுவதைப் போல கதாயுதம் கொண்டு மோதுகிறார்கள். அவர்கள் கதாயுதம் கொண்டு மோதும் அந்த ஓசையினைக் கேட்டு அட்ட திக்குக்கயங்களும் கூட அஞ்சி நடுங்குகின்றன. இருவரும் லாவகமாக ஒரு கதையுடன் மற்றொரு கதையை மோதிக் களமெங்கும் திரிந்து போர் புரிய, ஆதிசேடனும் கூட அந்த அதிர்ச்சியை தாங்கிட இயலாமல் நெளிகிறான். தன் ஒரு கையில் - அதுவும் இடதுகையில் ஏந்திய கதையைக் கொண்டே சயத்திரதனின் இரண்டு தோள்களும் எலும்புகளும் நொறுங்கி உடலும் நசுங்கிடுமாறு ஓங்கி ஓங்கி அடிக்கின்றான் அபிமன்யு. அபிமன்யுவிற்கு ஆற்ற மாட்டாமல் சயத்திரதன் தேரிலேற அவன் தேர்ப்பாகனையும் தேர்க்குதிரைகளையும் கதையால் மோதி வீழ்த்தி, சயத்திரதனின் தேரையும் கூட நொறுக்கி விடுகின்றான் அபிமன்யு.

பதின்மூன்றாம் நாள் காலை போர் தொடங்கியது முதலாக அபிமன்யு ஒருவனே எத்தகைய வீரப்போர் புரிந்திருக்கின்றான்.! எத்தனை மன்னர்களை, எத்தனை வீரர்களைக் கொன்றிருக்கிறான்! துரியோதனன் மகன் இலக்கண குமாரன், துச்சாதனன் மகன் துச்சனி, சகுனியின் ஏழெட்டு மைந்தர்கள் - அத்தனைப் பேரையும் கொன்றிருக்கிறான் அபிமன்யு!

அவன் ஒருவனுக்கு ஈடுகொடுக்க முடிந்ததா துரியோதனனின் கணக்கே இல்லாத சேனைகளால்? கர்ணன் தோற்றுத் தோற்று ஓடித் தேரினைப் பிளந்தான். துரோணர் பத்து முறைகளுக்கு மேல் தேரினை இழந்து அபிமன்யுவின் வலக்கையை வில் கொண்டு வீழ்த்தினார். கையினை இழந்தும், நம்பிக்கை இழந்துவிடாத அபிமன்யு தேருருளைக் கொண்டு போர் புரிந்தும், இப்பொழுது இடக்கையால் கதையை ஏந்திப் போர் புரிந்தும், சயத்திரதனின் எலும்புகளை நொறுக்கிக் கொண்டிருக்கிறான். அபிமன்யுவிற்கு துணை புரிய வந்த வீமனை சிவபெருமானின் கொன்றை மாலையை இட்டுத் தடுத்துவிட்ட சதிகாரன் ஆகிய சயத்திரதன் தன்கையில் பிடித்திருப்பது சிவபெருமான் கொடுத்த கதை, இல்லாவிட்டால் அபிமன்யுவால் எப்பொழுதோ முடிந்து விட்டிருக்கும் அவனுடைய கதை.

நாளெல்லாம் செய்த போரினால் மிகவும் இளைத்து விட்டிருக்கும் அபிமன்யுவை இனியும் உயிருடன் விட்டு வைத்திருந்தால் அவன் தன்னையும் கொன்று விடுவான் என்று அஞ்சி நடுங்கும் சயத்திரதன், சிவபெருமானைத் துதித்துப் பஞ்சாட்சர மந்திரத்தைச் செபித்து அபிமன்யு மேல் சிவபெருமானுடைய கதையை வீசி எறிகிறான். கூரிய முனையைக் கொண்ட அந்தக் கதையும், கருணையே இல்லாமல், கண்ணனின் மருமகன் ஆயிற்றே என்ற பரிவும்கூட காட்டாமல் காதகன் சயத்திரதன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு பாய்ந்து வந்து நம்முடைய கண்களில் எல்லாம் இரத்தத்தைப் பெருகச் செய்து அபிமன்யுவின் தலையைத் தனியே கொய்துபோய் மண்ணிலே வீழ்த்தி விடுகின்ற கொடுமையைப் புரிந்தே விடுகிறது.

தர்மம் காக்க இப்படித் தன் தலையைக் கொடுத்துப் பதின்மூன்றாம்நாள் போரை முடிக்கின்றான் நம் வீர அபிமன்யு.

(தொடரும்)

விநாயகரின் இருபுறமும் நாகர்கள்

இருப்பது ஏன்?
இடகலை (சூரியன்)
பிங்கலை (சந்திரன்)

இந்த இரண்டு நாடிகளும் சேர்ந்ததே குண்டலினி யோகம். பிரம்மச்சரியத்தை நாம் கடைப் பிடித்து வாழ்ந்தால் குண்டலினியோகம் மேல் ஓங்கும். அப்போது யோகசக்தி நமக்குக் கிடைக்கும். இதனால் நாம் பரம்பொருளைக் காணலாம். இதனை விளக்கும் வகையிலேயே விநாயகரின் இருபுறமும் நாகர்கள் அமைக்கப்பட்டுள்ளனர்.

திருவிளையாடல் புராணம்

இரா. அரங்கசாமி

விடை இலச்சினையிட்ட படலம்

காஞ்சிபுரத்தை,ஒரு சமயம் காடுவெட்டிய சோழன் என்ற அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் காடுகளாக இருந்த பெரிய வனங்களையெல்லாம் வெட்டிக் காஞ்சி நகரத்தை அமைத்ததால் ''காடுவெட்டிய சோழன்'' என்ற பெயரைப் பெற்றான். அவன் மிகச் சிறந்த சிவபக்தன். வேதங்களும், புராணங்களும் முடிவாகக் கூறும் மெய்ப்பொருள் சிவபெருமானே என்ற பேருண்மையை உணர்ந்தவன்.

மதுரையில் அங்கயற்கண்ணம்மையுடன் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக்கடவுளின் திருவடிகளைக் கண்டு தொழவேண்டும் என்ற விருப்பம் காடுவெட்டிய சோழனின் எண்ணத்தில் தோன்றியது. ஒரு நாள் அந்த நினைவாகவே அவன் சிவபெருமானைச் சிந்தித்துக் கொண்டே தூங்கிவிட்டான். அப்போது சிவபெருமான், ஒரு சித்தர் வடிவத்தில் சோழனுடைய கனவில் தோன்றி, ''சோழனே! கொஞ்சமும் அஞ்சாதே! நீ தனியனாக மாறு வேடம் பூண்டு இனிதே புறப்பட்டு மதுரைக்கு வருவாயாக! வந்து தரிசனம் செய்து கொண்டு திரும்பச் செல்வாயாக!'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

உடனே கண்விழித்த காடுவெட்டிய சோழன் மிகவும் வியப்படைந்தான். கனவில் இட்ட கட்டளையின்படி, தனது சேனைகளையும், அமைச்சர்களையும் அழைக்காமல் தான் மட்டுமே குதிரை மீதேறி மதுரை நகரம் நோக்கிச் சென்று வைகையாற்றின் கரையை அடைந்தான்.

சோழன் அங்கு வருவதற்கு முன்பாகவே, வையையாற்றில் பெருவெள்ளம் பெருகிக் கொந்தளித்தது. அந்தப் பெருவெள்ளத்தில் வேரோடு சாய்ந்த மரங்களும், அவற்றின் கிளைகளும் வேர்களும் வெள்ளத்தின் வேகத்தில் அடித்துக்கொண்டு மிதந்து வந்தன. வெள்ளத்தைக் கண்ட சோழன் மனங்கலங்கினான். சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்து வணங்குவதற்கு வைகையின் வெள்ளம் இடையூறாக இருப்பதை எண்ணி வருந்தினான்.

உடனே சிவபெருமான் அவன் முன்பு சித்தர் வடிவில் தோன்றினார். பள்ளத்தை நோக்கி ஓடி வருகின்ற வெள்ளத்தை வற்றிப் போகும்படி திரு நோக்கம் செய்தார் உடனே வைகை வெள்ளம் வற்றியது. சித்தர் தானே துணையாக வருவதாகக் கூறிச் சோழனை அழைத்துக் கொண்டு வைகையாற்றைக் கடந்து சென்றார்.

வடக்கு மதிலை அடுத்திருந்த போர் வீரர்கள் நிறைந்த

காவல்களையும், வீதிகளையும் கடந்து சென்று பொற்றாமரைக்குளத்தில் சோழனை நீராடச் செய்து தமது திருக்கோயிலினுள்ளே புகச்செய்து தம்மையும் அதன்பின் மீனாட்சி அம்மையையும் வணங்கவைத்து, சோழனை மகிழ்வித்தார். எண்ணியபடியே பெருமான் தனக்குத் தரிசனம் தந்தருளிய கருணையை எண்ணி எண்ணிச் சோழனும் பெருமகிழ்ச்சியடைந்தான்.

மதுரை மீனாட்சி அம்மன

பிறகு சித்தர், சோழனை நோக்கி, ''மன்னா! நீஇங்கு வந்துள்ள செய்தியைப் பாண்டியன் அறிந்தால் உனக்கு ஏதேனும் துன்பம் வரக்கூடும்'' என்று கூறிவிட்டு, சோழனை வடக்கு வாசல் வழியாக அழைத்துக் கொண்டு வையையாற்றின் வடகரைவரையிலும் சென்று அவன் நெற்றியில் விபூதியைப் பூசி, சோழனை அனுப்பிவிட்டு, திரும்பி வந்து தான் முன்பு திறந்த வடக்கு மதில் வாயிற்கதவை மூடி அதில் இடபமுத்திரையை இட்டு மறைந்தார்.

மறுநாள் பொழுது புலர்ந்தது. வாயில் திறப்பவர்கள் வடக்கு வாயிலின் கதவிலே இடபக்குறி பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டு, சந்தேகத்துடன் மற்ற மூன்று வாயிற் கதவுகளையும் பார்க்கச்சென்றனர். அவ்விடங்களில் எல்லாம் தான் முதல் நாள் வைத்த கயல் முத்திரைகள் மாறாமல் அப்படியே இருந்ததைக் கண்டு, நடந்தவற்றை அறியாது வடக்கு வாயிற்கதவில் மட்டும் இடபமுத்திரை இடப்பெற்றிருப்பதைப் பற்றி அரசனிடம் சென்று முறையிட்டனர்.

குலபூடணபாண்டியனும் அங்குச் சென்று இடபக்குறியைக் கண்டு ''இது என்ன அற்புதம்? இந்த மாயையைச் செய்யக் கூடியவர்கள் யார்?'' என்று திகைத்தவாறு ஊண்உறக்கமின்றி அளவற்ற கவலையுடன் வெறுந்தரையில் படுத்து உறங்கினான்.

அப்போது அவன் கனவில் சிவபெருமான் சித்தர் வடிவில் தோன்றி ''பாண்டியா! ஆத்திமாலையை அணிந்த சோழன், காடெல்லாம் வெட்டி, காஞ்சியை உருவாக்கியதுடன் எம்மிடத்திலே மாறாத அன்பு செலுத்தியவன். அவன் இங்கு வந்து வணங்கி வழிபடுவதற்குப் பெரிதும் விரும்பினான். இடையிலே வையையாற்றுப் பெருவெள்ளம் துன்புறுத்தியதைக் கண்டு கலங்கிய அவனை நாம்தான் சித்தர் வடிவிலே அவன்முன் தோன்றி அந்த வடக்கு முகவாயிலைத் திறந்து அவனை உள்ளே அழைத்துக் கொண்டு வந்து தரிசனம் அளித்துப் பாதுகாத்தோம்.

உங்கள் இருவருக்கும் இடையே வளர்ந்துள்ள பகையை நானறிந்ததால் அவனுக்கு உதவ இதைச் செய்தோம். பின் அவனை மீண்டும் அனுப்பி விட்டுத் தாழிட்டு நமது இடபக்குறியைப் பதிய வைத்தோம்'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

உடனே குலபூடணபாண்டியன், சோமசுந்தரக் கடவுளைத் தொழுது நடந்தவற்றை அமைச்சர்களிடம் அறிவித்து மகிழ்ந்திருந்தான்.

இத்தகைய குலபூடணபாண்டியன், தன் மகன் இராஜேந்திர பாண்டியனுக்கு முடிசூட்டிவிட்டு விண்ணரசாளப் பொன்னாடு புகுந்தான்.

(தொடரும்)

நூல்மதிப்புரை

நூல் பெயர் :	ஆழ்வார் பாடல்கள் பெற்ற வடநாட்டுத் திவ்ய சேத்திரங்கள் மற்றும் தீர்த்த ஸ்தானங்கள் வைபவம்
நூலாசிரியர்	: பா.வேங்கடாசாரி
பக்கங்கள்	: 223
விலை	: ரூ. 130.00
வெளியீடு:	ஸ்ரீ சேவா பாரதி நெல்சன் நேம்பர்ஸ், பிளான்D.39A, மாடிஎண்6 115நெல்சன் மாணிக்கம்சாலை, சென்னை - 600 029

உத்திரப்பிரதேசத்திலுள்ள திருஅயோத்தி, நைமிசாரண்யம், மதுரா, ஆயர்பாடி, உத்திராஞ்சல் மாநிலத்திலுள்ள பதரிகாட்சரமம், திருப்பிருதி, திருக்கண்டங்கடிநகர், குஜராத் மாநிலத்திலுள்ள துவாரகா. நேபாள் மாநிலத்திலுள்ள சாளக்கிராம் ஆகிய திவ்விய சேத்திரங்களின் மகிமையைத் தெளிவுபடுத்துகின்றது இவ்வருமையான நூல்.



சித்திரா பௌர்ணமியும் சித்திரகுப்தப் பூசையும்

-திருமதி மீனாட்சி கோகுலவாசன்

நம் பாரத தேசமானது புண்ணிய பூமி. பாவத்திற்கு அஞ்சியும், புண்ணியத்திற்கு அடிபணிந்தும் வாழும்தேசம். அறிந்தும் அறியாமலும் செய்த பாவத்தைப் போக்கிக் கொள்ள என்ன வழி என்று முனிவர்கள் தேடிக்கண்டு பிடித்துக் கொள்ளவும், இனி பாவங்கள் சேராவண்ணம் காத்துக் கொள்ளவும் வழிவகுத்துச் சென்றுள்ளார்கள்.

அப்படிப்பட்ட வழியே புராணங்களும், இதிகாசங்களும் ஆகும். அதன் மூலம் விரதங்களையும், பூஜைகளையும், வழிபாட்டு முறைகளையும் அறியமுடிகிறது.

அப்படிப்பட்ட வழியில் வந்ததுதான் சித்திர குப்த விரதம். 'நாரத ஸம்ஹிதை' என்ற நூல் இவ்விரத முறையை விவரிக்கிறது.

இவ்விரதத்தை தம்பதிகளாகவும் செய்யலாம்; பெண்கள்தனியாகவும் செய்யலாம்.

ஒரு நாள் கைலாயத்தில் சிவபெருமானும், பார்வதிதேவியும் ஆனந்தமயமாய் பேசிக்கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் கழித்து ஈசன், ஒரு 'பொன்' தகட்டை எடுத்து அதில் ஓர் அழகான சித்திரத்தை வரைந்தார். சித்திரத்தையே பார்த்துக் கொண்டிருந்த பார்வதியின் கண்கள் பிரகாசமடைந்து, உதடுகள் அர்த்தத்துடன் மலர்ந்தன. மகாதேவனும் சிரித்து விட்டு, அந்தப் பொன்னேட்டுச்சித்திரத்திற்கு உயிர் ஊட்டினார். அழகான அந்தச் சித்திரம் உயிர் பெற்று ஆணழகனாய் பார்வதி பரமேஸ்வரன் முன்னால் நின்றான். ஈசனும் அந்த ஆடவனுக்கு, ''சித்திரத்திலிருந்து வந்ததால், நீ 'சித்திரன்' என்று அழைக்கப்படுவாய்'', என்று பெயரையும் சூட்டிவிட்டார்.

பார்வதிதேவி ஈசனிடம், ''நாதா! இந்த சித்திரனுக்கு இந்த தேவலோகத்தில் வேலையா? அல்லது பூலோகத்திற்கு வேறு வேலையாக அனுப்பப் போகிறீர்களா?'' என்று கேட்டாள்.

அதற்கு ஹரன் ஒரு புன்னகையுடன் பார்வதியைப் பார்த்து, ''தேவி! ஒவ்வொரு வரவிற்கும் ஒரு செலவு இருக்கிறது. இந்த சித்திரனுக்கும் செலவு உண்டு. பூலோகத்தில் நடக்கும் வரவு-செலவு கணக்குகளை, இனி சித்திரன் தான் கவனித்துக் கொள்ளப்போகிறான்,'' என்று கூறினார்.

அதற்கு தேவியும், ''பூலோக வரவு செலவா? அப்படி என்றால்....? எதற்காக பூலோக வரவு செலவு நமக்குத் தேவை'', என்று குழப்பமாய்க் கேட்டாள்.

சர்வேஸ்வரனும், ''ஒவ்வொரு மனிதனும் செய்யும் நல்ல காரியங்கள், கெட்ட செயல்கள், நல்ல எண்ணங்கள், விரோத மனப்பான்மைகள் என்று எல்லாவற்றையும் அவ்வப்போது இவன் குறித்து ஒப்படைத்து விடுவான். அவரவர் செயலுக்கேற்ப தர்மராஜன் நரகமோ அல்லது சொர்க்கத்தையே அளிப்பான்'', என்று விளக்கினார்.

சர்வேஸ்வரனின் ஆணைப்படி அது முதல் சித்திரன், யமதர்மனிடம் கணக்கர் வேலையில் அமர்ந்து, ஓலையும் எழுத்தாணியுமாக தம் வேலையில் தர்மம் சற்றும் நழுவாதவராக செவ்வனே நடத்தி வருகிறார்.

கணக்கர் என்ற சொல்லுக்கு 'குப்தர்' என்ற அர்த்தமும் உண்டு. சித்திரத்திலிருந்து வந்தமையால் இந்த கணக்கருக்குச் 'சித்தரகுப்தர்' என்ற பெயர் வந்தது. பாசவலை வீசி, கடைசி காலத்தில் ஜீவராசிகளை இழுத்துச் செல்லும் யமதர்மராஜா. சற்றும் தர்மத்திலிருந்து நழுவாதவர். சிறந்த பண்பாளரான யமதர்மராஜனிடம், கணக்கராகப் பணியேற்றுப் பாவங்களையும் புண்ணியங்களையும் கணக்குச் சொல்லத் தொடங்கினார் சித்திரகுப்தர்.

உண்மையை மட்டும் சொல்ல வேண்டிய நிலை சித்திரகுப்தனுடையது; அதில் கொஞ்சம் கூட பொய் கலப்பே கிடையாது.

சித்திரகுப்தனுக்குக், காஞ்சி நகரத்தில் ஒரு கோயில் இருக்கிறது. சித்திரகுப்த ஸ்வாமி தனது தொழிலுக்கு ஏற்றவாறு இக்கோயிலில் சிலா வடிவில் ஒரு கையில் பனை ஓலைச் சுவடியும், இன்னொரு கையில் இரும்பு எழுத்தாணியுடனும் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். சித்திரகுப்த ஸ்வாமியின் தேவியின் பெயர் 'காணாம்பிணி' ஆகும்.

சித்திர குப்தனின் அதிதேவதை 'கேது' பகவான் ஆகும். கேது கிரஹத்தால் அவதியுறுவோர், 'சித்திர குப்தர்' கோயிலுக்குச் சென்று வழிபட்டு வந்தால் நிவாரணம் பெறலாம்.

எத்தனையோ கோடானுகோடி ஜீவராசிகளின் கணக்கைச் சரிவர பார்த்து வரும் இந்த தெய்வத்தை வழிபடுவது என்பது மிக மிக விசேஷமல்லவா....!

பதில்

(ஸ்ரீ ராம கிருஷ்ணர் மேடை மீதேறி ஒரு பிரசங்கமும் செய்யவில்லை, ஆத்மஞான வகுப்புகள் வைத்து நடத்தவில்லை. யாருக்கும் மந்திரோபதேசம் செய்யவில்லை, இருந்தாலும் இவரைச் சுற்றி எப்பொழுதும் ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருந்துள்ளது.

இந்தக் கூட்டத்தினருடன் இவர் எப்போழுதும் சம்பாஷணை செய்து கொண்டு இருந்துள்ளார். இவருடன் ஒரு முறை அல்லது இருமுறை சம்பாஷித்து விட்டுச் சென்றவர்கள் இதுகாறும் தங்களுக்குத் தெரியாமல் இருந்தன எல்லாம் இப்பொழுது தெரிந்து விட்டதாக உணர்ந்து கொண்டுள்ளார்கள்.

மேலும் மேலும் இவருடன் சம்பாஷிக்க வேண்டுமென்று ஆவல் கொண்டுள்ளார்கள். இவருடைய வாக்கிலிருந்து வரும் ஒவ்வொன்றையும் உபதேசமணியாக ஏற்றுக் கொண்டு, அவற்றைப் பக்தி சிரத்தையுடன் தங்கள் இருதய பொக்கிஷத்தில் வைத்துக் காப்பாற்ற வேண்டுமென்று விருப்பம் கொண்டுள்ளார்கள். ஏனென்றால் அவை வாழ்க்கையில் வழிகாட்டும் விளக்குகள் அல்லவா?''

''ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஓர் தீர்க்கதரிசி''

என்ற நூலில் வெ.சாமிநாதசர்மா எழுதியுள்ள கருத்தாகும் இது.

இத்தகைய தீர்க்கதரிசி ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாக்கிலிருந்து வாசகர்களின் வினாக்களுக்கு விடைகள் இங்குத் தரப்பட்டுள்ளன என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

★★★ இராஜ் குமார், வேளச்சேரி, சென்னை - 42

கேள்வி : கடவுளைக் காட்டுவீர்களா? கடவுளைப் பார்த்திருக்கிறீர்களா? (உண்மையில் சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ணரிடம் வினவிய வினா இது)

பதில் : காட்டுவேன், ஆம் கடவுளைப் பார்த்து இருக்கிறேன். இப்பொழுதும் பார்க்கிறேன். உன்னை இங்கே எப்படிப் பார்க்கிறேனோ, அப்படியே கடவுளை நான் பார்த்திருக்கிறேன்.

★★★ கமலா, தண்டையார்பேட்டை

கேள்வி : கடவுள் தொண்டாவது என்ன?

பதில் : கடவுளின் அம்சமாயிருக்கிற எல்லா ஜீவராசிகளுக்கும் தொண்டு செய்வதுதான் கடவுள் தொண்டு. இந்தத் தொண்டு செய்கிறவன் தான் கடவுளுக்கு உகந்தவன். கடவுள் நெறியில் செல்கிறவன்.

★★★ மு. இராமச்சந்திரன், புதுவை.

கேள்வி : யார் உண்மையில் குரு?

பதில் : கடவுளையும், மனிதனையும் ஒன்று சேர்த்து வைக்கிறவர் தான் உண்மையான குரு.

★★★ த. சத்தியநாராயணன், அயன்புரம்.

கேள்வி : இறைவனை அடைய இல்லறம் தடையா?

பதில் : நிச்சயமாக இல்லை. குடும்ப வாழ்க்கை ஒரு கோட்டை மாதிரி. கிருகஸ்தர்கள் கோட்டைக்குள்ளிருந்து சண்டை போடும் வீரர்கள், சந்நியாசிகள் திறந்த மைதானத்தி லிருந்து கொண்டு சண்டைபோடும் வீரர்கள். கடவுள் வாழ்க்கைக்குக் குடும்பவாழ்க்கை முரண்பட்ட தல்ல, 'நான் பந்தத்திற்கு உட்பட்டிருக்கிறேன்'' என்று பைத்தியக்காரன் தான் சொல்வான். மனம் பந்தமற்றிருக்கு மானால் நீயும் பந்தமற்றிருப்பாய். நான் காட்டிலே இருந்தாலும் சரி, நாட்டிலே இருந்தாலும் சரி. எப்பொழுதும் பந்தத்திற்கு உட்பட்டிருப்பதில்லை, நீங்களும் வேலை செய்து கொண்டிருக்கிறபோது, உங்கள் ஒருகை வேலை செய்து கொண்டிருக்கட்டும், மற்றொரு கை கடவுளின் பாதங்களைப் பிடித்துக் கொண்டு இருக்கட்டும்.

வேலை முடிந்த பிறகு, சும்மா இருக்கிற சமயத்தில் அந்தப் பாந்தாமனின் இரண்டு பாத கமலங்களையும் உங்கள் இருகைகளாலும் பற்றி உங்கள் இருதயத்திலே வைத்துக் கொள்ளுங்கள்.

★★★ சரவணகுமார், சேலம்.

கேள்வி : தத்தம் சமயமே உயர்வு என்று தர்க்கமிடும் மதவாதிகளுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

பதில் : தர்க்கவாதத்திற்கு அப்பாற்பட்டவர் கடவுள், உலகிலுள்ள அனைத்தையும் நான் கடவுளாகவே காண்கின்றேன். சிவன், காளி, அரி இவை எல்லாம் ஒரு பரம்பொருளின் வெவ்வேறு தோற்றங்கள்தான். அப்படியிருக்க தர்க்கவாதம் செய்வதில் என்ன பிரயோஜனம்?

மூதுரை காட்டும் முதுநெறிகள்

டாக்டர் பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை,
தலைமைச் செயலகம்

ஒரு நாடு புகழ் பெற வேண்டுமானால் அந்த நாட்டினுடைய கலாச்சாரமும் பண்பாடும் ஏற்றம் பெற்றதாக இருக்க வேண்டும். உதாரணமாக எகிப்திய நாகரிகம், சுமேரிய நாகரிகம், சிந்துசமவெளி நாகரிகம் போன்றவைகள் இன்றும் புகழப்படுவதற்குக் காரணம், அந்த நாடுகள் கொண்டிருந்த கலாச்சார மேன்மைதான்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே சமத்துவத்தைப் போதித்த புத்தர் பெருமான், கொல்லாமை கூடாது என்று உலகுக்குப் போதித்த வர்த்தமான மகாவீரர், இந்து மத தர்மத்தின் சாரங்களை அத்வைதம் என்ற வேதத்தை உலகு எல்லாம் அறியச் செய்த ஆதிசங்கரர், ஆண்டவன் முன்னால் அனைவரும் சமம் என்று உலகுக்கு உணர்த்திய இராமானுஜர் ஆகியோர் பிறந்தது இந்த மண்ணில் தான்.

இராமகிருஷ்ண பரமஹம்சர், இராமலிங்கர், விவேகானந்தர் போன்ற அறநெறியாளர்கள் எல்லாம் அவதரித்து இந்திய நாட்டில் அருள் நெறியைப் பரப்பியது யாவரும் அறிந்த உண்மை. இது போன்ற பெருமை கொண்ட மிகப்பெரிய இந்நாட்டின் அங்கமாக இருக்கக்கூடிய தமிழகத்தில் உலகத் திருமுறையை ஈந்த வள்ளுவர் பெருமான், காவியத் தொடர் வரிசையில் இமயமாய் உயர்ந்து நிற்கும் கம்பர், இளங்கோவடிகள் போன்ற ஏராளமான பெருந்தகைகள் வாழ்ந்து இந்த மண்ணின் சிந்தனைகளை வளப்படுத்தியுள்ளனர்.

இப்படி விஞ்ஞானத்திலும், ஆன்மீகத்திலும், அக வாழ்விலும், புற வாழ்விலும் தமிழ்நாடு பெருமை பெற்றதற்குக் காரணம் கவின் கலைகளோடு தமிழ்நாடு பெற்றிருந்த காவியச் செல்வங்களாகும். வாழ்க்கையினுடைய முக்கியத்துவத்தைப் போதித்த அதே தமிழிலக்கியங்கள் மனிதன் வாழ்வாங்கு வாழ வேண்டிய வாழ்க்கை முறைகளையும் கூறத் தவறவில்லை.

தனிமனித வாழ்க்கையில் திருக்குறள், நாலடியார், ஆசாரக்கோவை, அறநெறிச்சாரம், ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், நான்மணிக்கடிகை போன்ற நூல்கள் எல்லாம் அளவிடற்கரிய அரும்பணியை ஆற்றி யிருக்கின்றன.

இந்த நூல்களுக்கு எல்லாம் பல்வேறு உரைகள் எழுதப்பட்டு அந்தக் கருத்துக்கள் எல்லாம் மக்கள் மத்தியில் சென்று சேர்ந்து இன்றும் விஞ்ஞான ஆதிக்கம் தமிழ்ப் பண்பாட்டை வெகுவாகச் சிதைக்காமல் இருப்பதற்கு இந்த நீதி நூல்களின்கருத்துக்கள்மிகப் பெரிய கவசமாகும்.

இந்த வரிசையில், அவ்வைப் பெருமாட்டியார், ஆத்திச்சூடி, மூதுரை, நல்வழி போன்ற பாமரனும் எளிதில் படிக்கக்கூடிய நூல்களை யாத்து அவை அன்றாட மனித வாழ்க்கையில் மிகவும் பயனுள்ள பொக்கிஷமாக இருப்பது நம் அறிந்த ஒன்று.

ஆனால் உலகம் இன்று கலாச்சாரச் சீரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. ஆங்காங்கே பயங்கரவாதங்களும், தீவிரவாதங்களும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் மனிதர்கள் வாழ்வில் மனித நேயம் மறைந்து சமுதாயச் சீர்கேடுகள் ஏற்பட்டு அதன் காரணமாக மக்கள் மாக்களாக மாறி வருகின்றனர். மனிதர் நோக மனிதர் பார்க்கும் அவலச் சூழ்நிலை இன்றைய மனித வாழ்க்கையை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது.

குறுக்கு வழியில் பணத்தைத் தேடுதல், பெண்களை அடிமைப்படுத்துதல், பெண் குழந்தைகளைக் கருவிலேயே அழித்தல், பெண் சிசுக்களை கொல்லுதல், மனித நேயத்தை மாசு படுத்துதல் போன்ற இரக்கமற்ற கொடுஞ்செயல்கள் மக்களை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றன.

''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'' என்று வாட்டமுற்ற வடலூர் இராமலிங்க அடிகள் பிறந்த இப்புண்ணிய பூமியில் ஒரு மனிதன் இன்னொரு மனிதனை மதிக்காத சூழ்நிலையும், சுயநலத்திற்காக எதையும் செய்ய முற்படும் சூழ்நிலைகளும் அன்றாடம் அரங்கேறிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

சொத்துக்காக சகோதரர்களிடேயே சண்டை - அதன் காரணமாக நீதிமன்றங்களில் வழக்கு- கொலை வெறி - அதனால் வாழ்க்கையில் நிம்மதி இழக்கின்ற நிகழ்ச்சிகளை, ஒவ்வொரு நாளும்

செய்தித்தாட்கள் மூலமாகவும், வானொலி மூலமாகவும், தொலைக்காட்சிகளின் மூலமாகவும் அறிகிறோம். இவ்வாறு நடப்பதற்கெல்லாம் அடிப்படை காரணங்கள் என்னவென்று ஆராய்ந்து பார்த்தால் மக்களிடையே அறியாமை, கல்வியின்மை, அன்பின்மை, விட்டுக் கொடுக்கும் பாங்கின்மை போன்ற மனித வாழ்க்கை நெறிமுறைகள் மங்கியுள்ளமைதான்.

14 ஆண்டுகள் வனவாசம் சென்றாலும் எனது அண்ணன் தான் இந்த நாட்டை ஆள வேண்டும் என்று இராமபிரானின் பாதுகையை அரியாசனத்தில் வைத்து அந்த 14 ஆண்டுகளும் கோசல நாட்டை ஆண்ட பரதன் அண்ணன் தம்பி உறவுக்கு மிகப் பெரிய எடுத்துக்காட்டாக இராமாயணத்தில் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

தனது அருமை அண்ணன் காடேக வேண்டுமென்று தந்தை ஆணையிட்டதும், தானும் உடன் செல்வேன் என்று இலக்குமணன் இராமபிரானோடு கானகம் சென்றது அண்ணன் தம்பி பாசத்தின் மிகப்பெரிய உதாரணம். தரணியை விட்டு கானகம் சென்று ஐந்து அண்ணன் தம்பிகளும் அன்புக்கு இலக்கணமாகத் திரௌபதியோடு வாழ்ந்த பஞ்சபாண்டவர் பிறவிப் பாசத்தின் பிறைநிலா.

அண்ணன் செங்குட்டுவன் இருக்க தம்பி தான் பட்டமெய்துவான் என்ற நிமித்திகனின் வார்த்தைகளைக் கேட்ட இளங்கோ, அண்ணனே அரசாளட்டும் என்று உடனே துறவு பூண்டார். இச்சகோதரர்களின் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு நம்மை வியக்க வைக்கிறது.

ஆனால் இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் பணமே பிரதானம் என்னும் நோக்கத்தில் பெற்றோர்களுக்குக் கூட உணவளிக்க முடியாமல் - பாதுகாக்க இயலாமல் முதியோர் இல்லங்களில் அவர்களைச் சேர்த்து விடும் அவல நிலை இன்றுள்ளது. பத்து மாதம் சுமந்து பெற்ற பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் பாசத்திற்காக ஏங்கும் நிலையும், அவர்களின் இறுதி காலங்களில் பிள்ளைகள் ஆதரவு தராத அவல நிலைகளையும் இன்று காண்கின்றோம்.

முதியோர் இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள். சிறைச்சாலைகள், மனநலக் காப்பகங்கள் ஆகியவை எல்லாம் இன்று சமுதாயத்தில் ஏற்பட்டுள்ளன. ஒரு சாபக்கேடு. ஒரு சவால். மிகப்பெரிய வடு. பாசத்தைப் பறிக்கக்கூடிய பாசக் கயிறு. ஆனால் தங்களின் மகிழ்ச்சிக்காக அன்னையர் தினம் என்றும், காதலர் தினமென்றும், நண்பர்கள் தினம் என்றும் பெயரளவில் பெற்றோர், உற்றார் உறவினர்களை சந்தித்து அரை மணி நேரம் பேசக்கூடிய அந்நிய நாகரீகம் இன்று நம்மை ஆட்கொண்டிருக்கும் அற்ப வாழ்க்கையில் தான் இன்று நம் சமுதாயம் சீர்கெட்டுக் கொண்டிருக்கிறது.

நீதியையும், நியாயங்களையும், நெறி முறைகளையும், அனுபவரீதியான வாழ்கை முறைகளையும் போதிக்கக் கூடியகல்வி நிலையங்களோ வணிக நிறுவனங்களாக மாறக் கூடிய மனிதாபிமானமற்ற நிலையினை இன்று காண்கின்றோம்.

''இளமையில் கல்வி சிலையில் எழுத்து''

என்பார்கள். இளமையிலேயே நீதி நெறிமுறைகள் குழந்தைகளுக்கு புகட்டப் பட்டால்தான் அக்குழந்தைகள் எதிர்காலத்தில் ஏற்றம் பெற்ற குடிமக்களாக உலகத்தில் பரிமளிக்க வழி உண்டு. ஆனால் இன்றைய கல்வியமைப்போ பொருளை எப்படி ஈட்டுவது? வாழ்க்கையை எப்படி சொகுசாக வைத்துக் கொள்வது? எப்படி குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்பது? என்கின்ற வழிமுறைகளில் சென்று இளைய சமுதாயம் மனித சமுதாயத்தின் மதிப்பை மறந்து சீரழிந்துக் கொண்டிருக்கிறது என்கின்ற நிலைமை வருந்தத்தக்கது.

அவ்வப்போது உலகில் மனிதர்களைத் திருத்த ஆன்றோர்களும், சான்றோர்களும், அறிஞர்களும் அவதரித்திருந்தாலும், அவர்களுடைய நோக்கம் முழுமையாக நிறைவேறவில்லை என்றுதான் நாம் எண்ண வேண்டி இருக்கிறது.

''அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது!''

என்று மனிதப் பிறப்பை மேம்படுத்தி அவ்வைப் பெருமாட்டி பாடியுள்ளர். அவ்வாறு அவர் பாடியதற்குக் காரணம் மனிதர்களுக்குத்தான் ஆறறிவு அண்டு என்றும், பகுத்தறியும் ஆற்றலும அவர்களுக்கே உண்டு என்பதால்தான். அப்பெருமாட்டியின் அமுத மொழிக்கேற்ப மனித நேயம் மலர்ந்து மாட்சிமை மிக்க வாழ்க்கை வாழ வேண்டுமென்றால் அவற்றுக்கு அடிப்படையாக கல்வி முறை சீரமைக்கப்பட்டு ஒவ்வொருவரும் கல்வி கற்று நீதி நெறிப்படி நடந்தால் வருங்காலத்தில் அன்பு தழைக்கும், அறம் செழிக்கும், வளம் பெருகும், வாழ்க்கை மிளிரும். அப்பெருமாட்டி யாத்தளித்த மூதுரை, நல்வழி, ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், விநாயகரகவல் போன்றவை மனித சமுதாயத்தைச் சீர்திருத்தும் வல்லமை கொண்டவை. அவற்றை இனி மூதுரை நூல்வாயிலாக நாம் விரித்துக் காணலாம்.

(தொடரும்)

எம்மதமும் சம்மதம்

சென்ற காலத்தில் நிலவிய மதங்கள் அனைத்தையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். அவைகளுக்கு வணக்கம் செலுத்துகிறேன்.

அந்தந்த மதத்தினர் வழிபடுகின்ற முறையில் நான் கடவுளை வணங்குகின்றேன். நான் ஒரு முகம்மதியருடைய மசூதிக்குச் செல்வேன். கிறிஸ்துவருடைய ஆலயத்திற்குச் சென்று அங்கே சிலுவையின் முன்னால் முழந்தாளிட்டு வணங்குவேன்.

புத்தர் கோயிலுக்குச் சென்று புத்தரிடத்திலும், தர்மத்தினிடத்திலும் சரணமடைவேன்.

காட்டிலே சென்று எல்லோருடைய இருதயங்களையும் பிரகாசமயமாக்குகின்ற ஜோதி எதுவோ அந்த ஜோதியைக் காண முயன்று கொண்டிருக்கிற இந்துவுடன் தியானத்தில் ஆழ்ந்திருப்பேன்.

- சுவாமி விவேகானந்தர்

கங்கையினும் சிறந்தது காவிரி

தா.சந்திரசேகரன், இ.ஆ.ப
அரசுச் சிறப்புச் செயலாளர், தமிழ் வளர்ச்சி,
பண்பாடு மற்றும் அறநிலைத் துறை

சோழ வளநாடு சோறுடைத்து. அந்நாட்டின் ஒரு பகுதி குத்தாலம். அதற்குத் திருத்துருத்தி என்றும் ஒரு பெயர் உண்டு. நதியின் நடு இடம் துருத்தி எனப் பெறும்.

பார்வதி தேவியார், பரதமா முனிவர் மகளானார். காவிரி நடுவில் ஒரு தலம் வகுத்தார். வரத சிவத்தை அங்கு வழிபட்டார். அதன் பயனாக அவரை மணந்தார். இவ்வரலாற்றை, அத்தல புராணம் கூறுகின்றது.

நதியின் நடுவில் அமைந்த அப்பதி, இன்று அதன் தென் கரையில் இருக்கிறது. காலத் தத்துவம் காட்டும் எத்தனையோ அதிசயங்களில் இது ஒன்று.

இத்தல விருட்சம் உத்தாலம். அதனால் உத்தாலவனம் என்று உணரப் பெற்று, வர வர குத்தாலம் என்று மருவியது.

அத்தலத்தில் ஒரு அந்தணர். அவர் பெயர் உருத்திரசன்மர். அவர் அருங் கலை பல அறிந்தவர்.



அருள்மிகு தாயுமானசுவாமி அருள்மிகு மட்டுவார்குழலம்மை
மலைக்கோட்டை திருச்சிராப்பள்ளி

அன்பும் அருளும் அமைந்தவர். கனிந்த இல்லறம் கண்டவர். தெய்வ சிந்தனையில் தெளிந்தவர். சிவத்தை எப்போதும் சிந்திப்பார். சிவனடியார்களை வந்திப்பார். இது அவரது இயல்பு.

ஒவ்வொரு நாளும் குறைவிலாத் தவக் கோலத்தோடு கோயிலுக்குச் சென்று வழிபடுவார். அதன் பயனோ இது எனும்படி, குடும்பத்தில் செல்வம் பெருகிச் செழித்தது. அமைதி மனநிலை அமைந்தது. வாழ்க்கை இன்ப மயமாகி இருந்தது.

அவருக்கு வரவர வயது வளர்கிறது. தளர்ச்சி தலை காட்டுகிறது. உருத்திரசன்மர் அதை உணர்ந்தார். அஞ்சியது மனம்.

கர்ம பூமியில், கன்மத் தொகுதியானது உடல். காய வாழ்க்கை எவ்வளவு எச்சரிக்கையாயிருந்தாலும், ஒரு நாள் விழுந்து விடும் இந்த உடல். அன்று ஒப்பாரி வைப்பர் உறவினர், பின் அவரை மரப்பர். இது வையகத்து வழக்கம்.

வாழ்க்கையை விதி வகுத்தது. இன்பம் போல் தோன்றி, ஓயாத் துன்பம் தரும் இதனை வெறுத்து மறுத்தவரே வித்தகர்.

காசிக்குச் செல்வோம். கனக்கும் அழுக்கைக் கங்கையில் கழுவுவோம். உலகம் ஆளியார், உலகிற்கு உயிர் ஆனார்; உலகம் கடந்தார் எனும் பொருளில், அங்கிருக்கும் அமலரை, விஸ்வநாதர் என்று விநயம் காட்டிப் போற்றுகிறது வேதம். அவரை அங்கு ஆராதிப்பது அறம். அதை மறந்திருப்பது மறம். அங்கே இருந்து இறந்தவர்க்கு முக்தி. இது புனித அனுபவிகள் சொல்லும் பொன்மொழி. இப்படியெல்லாம் எண்ணியது, புண்ணியம் நண்ணிய அவர் புனித மனம்.

தன் கருத்தை, உறவினரிடம் உரைத்தார். உற்ற நண்பர்கள் இடத்திலும் ஓதினார். நந்தனார் போல், நாளை புறப்படப் போகிறேன். ஆம். புறப்படுவது நிச்சயம் என்று, குறிப்பாக ஒவ்வொரு நாளும் கூறிக் கொண்டே இருந்தார்.

எங்கள் கதி என்ன ஆவது? குடும்பம் அல்லோல கல்லோலம் ஆய்விடும். அவசரப்பட்டுப் புறப்படாதீர்கள் என்று, மனைவி மக்கள் மறுத்தனர். அறிவுரை அவர்க்குச் சொல்லுங்கள் என்று, ஊரில் உள்ள பெரியவர்களையும்ஊக்கினர்.

உருத்திர சன்மரே ! கற்கத் தக்கன கற்றிருக்கும் உமக்கா நாங்கள் சொல்வது? உத்தமர் நீர், புனித இவ்வூரைவிட்டுப் போகலாமா?

திருத்துருத்தி என்பது மட்டமா? புனித தேவி பூசித்து, மாதேவரை மணந்த மகிமைத் தலம் அல்லவா இது. காசியில் இருக்கும் கடவுள் இங்கு இல்லையா? அங்கும் தெய்வம். இங்கும் கடவுள். எங்குமுளன் இந்த இறைவன். அரும்பன்ன முலையம்மை சமேதராய் சொன்னவாறு அறிவார் என்னும் பெயருடன், இங்குமுளன் எம்பெருமான் என்று உரைத்தனர்.

அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். காசி அநாதி நித்திய க்ஷேத்திரம். அமரரும் யோகிகளும் அங்குதான் உளர். மதிக்கத் தக்கவள் மதுரை மீனாட்சி. கருதத்தக்கவள் காமாட்சி. இங்குள்ள அரும்பன்ன முலையாள், இளையாள், சொன்னவாறு அறிவாரேயன்றி, எதையும் செய்யார் இங்கிருக்கும் இறைவர்.

காசித் தேவி, விசால நோக்கினர். மரணம் அடைந்தவரை மடியில் கிடத்தி, விரிந்த தன் முந்தானையால் விசிறி, இளைப்பாற்றுவாள் அந்த எம்பெருமாட்டி. அந்தச் சமயம்பார்த்து, உயர்ந்த தாரக உபதேசம் செய்து. உயிர்க்கு விடுதலை தருகிறார் அங்கிருக்கும்விஸ்வநாதர். எங்கும் ஒரே தெய்வந்தான் இருக்கிறது. இருந்தாலும் ஸ்தான

விசேடம். மூர்த்தி விசேடம். இவைகளில் வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. விரிவாக இது குறித்துப் பேசுவது, விபரீதமாக முடியும்.

இத்திருத்துருத்தியுடன் காசியை இணைக்க லாமா? வீண் பேச்சு வேண்டா. என்னை மன்னித்து விட்டு விடுங்கள் என்றார் உருத்திரசன்மர்.

தாங்கள் அதிகம் பேசஅறிந்தவர்கள். உங்களோடு வாதிட எங்களால் ஆகுமா? என்று, உபதேசம் செய்ய வந்தவர் ஒதுங்கினர். எனினும், திருத்துருத்தியை, அரும்பன்ன முலையம்மையை, சொன்னவாறறியும் தெய்வத்தை மட்டமாக மதிக்கிறாரே என்ற மனவருத்தம் ஒவ்வொரு வருக்கும் இருந்தது.

ஒரு நாள் உருத்திரசன்மர், தம்மை மறுத்தாரை மறுத்து, புனித காசி நோக்கிப் புறப்பட்டார். யாத்திரை வாசிகள் புறப்படும்பொழுது, உள்ளூர்க் கோயிலில் உத்தரவு பெறுவது மரபு. அதையும் மறந்தார். போகிறார். போய்க் கொண்டே இருக்கிறார். இனிப் பிறவியில்லை என்று மகிழ்கிறது அவர் மனம்.

காவிரியைக் கடந்தார். காடு ஆறு பல கடந்தார். எதிரில் தெரிகிறது ஒரு பெரிய மலை. அம்மலையை அணுகினார்.

என்ன பயங்கரம்! பாம்பு ஒன்று, மலைபோல் எதிரில் படுத்துக் கிடக்கிறது. அதைப் பார்த்தார். பயந்தது மனம். தடைப்பட்டு நின்றார். பாம்பு அவரைப் பார்த்தது. அதன் கண்கள், நெருப்பைப் போல், கன கன என்று கனல்கிறது. அதை எப்படிக் கடப்பது?

கை தட்டினார். ஓசைகேட்டால் ஓடிவிடும் என்பது அவ் எண்ணம். எவ்வளவு ஓசைஎழுப்பியும், அது இருந்த இடம் விட்டுப் பெயரவில்லை.

சரி அது அப்படியே இருக்கட்டும் என்று, அதன் வால் புறமாக, ஓசைப்படாமல், மெல்ல அடிமேல் அடி வைத்து நடந்தார். பார்த்தது பாம்பு.புஸ்ஸ்ஸ் என்று படமெடுத்துச்சீறியது.

உளமதிர்ந்த உருத்திரசன்மர், ஒருபுறமாக ஒதுங்கி ஓடினார். விறுவிறு என பாம்பு, அவர் பக்கமாகவே விரைந்தது.

உடலாடக் குடலாட, வேறுபுறம் திரும்பி ஓடினார். எந்தப்புறம் ஓடினாலும், அந்தப்புறம், சினந்து விரைந்தது அந்த அரவு.

உருத்திரசன்மர், கருட மந்திரம் தெரிந்தவர். உக்ரமான அம்மந்திரத்தை உச்சரித்தார். அதே கணத்தில், விண்ணில் கருடன் விரைந்து வந்தது.

மாபெரும் கருடனைக் கண்ட மலைப்பாம்பு, வெப்பமான பெருமூச்சு விட்டது. அதனால், கருடன் சிறகு எரிந்து விழுந்தது. காட்டு மரமெல்லாம், பொரிந்து கரிந்தது. மான் முதலிய விலங்குகள் மயங்கின.

அந்தணர், பாம்பின் வலியை அறிந்தார். கடப்பது எப்படி என்று கலங்கினார். ஆற்றல் தரும் ஒரு மந்திரம், அவர்க்கு அனுபவ சாதகம். நியதியாக, அதை உச்சரிக்க நினைத்தார். அதற்குள், உக்கிரங் கொண்ட பாம்பு, அவரைச் சூழ்ந்து உயிர்த்தது. அச்சம் அதிகரித்தது. உடல் வியர்த்தது.

திருத்தொண்டர் திருக்குலம்

வேளாளர் பதின்மூவர்

1. இளையான்குடிமாறனார்
2. விறல்மிண்டர்
3. மானக்கஞ்சாறர்
4. அரிவாட்டாயர்
5. திருநாவுக்கரசர்
6. ஏயர்கோன் கலிக்காமர்
7. மூர்க்க நாயனார்
8. சாக்கிய நாயனார்
9. சத்தி நாயனார்
10. வாயிலார் நாயனார்
11. முனையடுவார் நாயனார்
12. செருத்துணை நாயனார்
13. கோட்புலி நாயனார்

அவர் திருமேனியை இறுக்கி அரவம் நெருக்கியது.

திருத்துருத்திப் பெருமானை, அவர் தினந்தோறும் தொழுதவர். அப்பழக்க வாசனை, உளத்தில் இன்று உதித்தது.

''திருத்துருத்தி யீசா ! குத்தாலக் கோவே! காசியில் இறுதியென்று கருதினேன். இடையில் பாம்பின் வாய்க்கு இரையாகிறேன். எண்ணத்தில் மண் விழுந்ததே !காமேசா ! சோமேசா'' என்று கதறினார்.

பாரமான மலைப்பாம்பு, வரவர உடலை நெருக்க, வலி தாங்க முடியாது வருந்தினார்.

''சொன்னவாறு அறிவாய்! துருத்தித் துறையே! அறிதற்கு அரியாய்! தேவர் நாயகா! மூவர் நாயகா ! மூவா முதலே! அபயம் சங்கரா!சம்புவே அபயம்! அபயம்!'' என்று அலறினார்.

அதே நேரத்தில் விரைக்க விரைக்க வியர்த்த மேனியனாய் ஒருவன் விரைந்தோடி வந்தான். நிலை குலையும் உருத்திரசன்மர் முன், நின்றான். அவன் நெற்றியில் நீறு. அங்கமெல்லாம் உருத்திராட்சம். தோளில் இரு சுரைக்குடுக்கை தொங்குகிறது. கையில் மகுடிக் குழல்.

''என்ன ஐயா இது ? என்னை இறுக்கி நெருக்கிக் கொண்டே இருக்கும் இப்பொல்லாத பாம்பு, இறுதியில் விழுங்கப் போகிறது. எமன் உம்மையும் அழைக்கிறானா என்ன? போ ஐயா ! ஓடிப் போய்விடும்!''

''யானையே விழுங்கினாலும், அதன் தோலை உரித்துவிட மாட்டேனா? என்னை யிது என்ன செய்யும்?'' மீசையை முறுக்கியபடியே சிரிக்கிறார் வந்தவர்.

''அப்படியா ! அம்மா ! அப்பா ! நெறு நெறு என்று உடல் நெறிகிறதே ! சொன்னாலும் கேட்க மாட்டீரா ? யார்ஐயாநீ!''

''நாம் இருப்பது திருத்துருத்தி ; வாளா இராமல் அவர் வற்புறுத்தி ஏவ, ஓடோடியும் வந்தேன்.''

''யார் அவர்? யாராயிருந்தாலும் சரி. வேகம் படும் இப்பாம்பிலிருந்து விடுதலை அளித்தால், கடவுளே நீர் என்று கருதுவேன்.''

எதிரில் இருந்தவர் சிரித்தார். ''நான் என்ன காசி விஸ்வேசனா? சாதாரண துருத்தியான் தானே! என்னமோ முயன்று பார்க்கிறேன்'' என்று, மகுடியை வாயில் வைத்தான். புன்னாகவராளியை வாசித்தான்.

உள்ளம் அள்ளும் இசைகேட்டு பாறைகள் பலவும் உருகின. அவ்வளவில், வேதியரைப் பாம்பு விட்டு விட்டது. அதன்பின், அகன்று படமெடுத்து ஆடியது. ஆடி ஆடி அலுத்தது. அந்தணர்க்கு இச்சம்பவம், அதிக அதிசயத்தை அளித்தது.

''ஐயா ! நீர் திருத்துருத்தி இறைவரே தான்'' என்று தொழுதார்.

சிறந்த பிடாரர், அப்போதும் சிரித்தார். எழுந்த சிரிப்பொலி, அக்காடு முழுதும் எதிரொலித்தது.

உருத்திரசன்மர், அவரை உற்று நோக்கினார். என்ன வியப்பு ! இடப்புறத்தில் மான், வலப்புறத்தில் மழு. கொன்றை முகிழ்ந்த சடை முடி. கம்பீரமாக அலை மோதுகிற கங்கை. அதனில் படகென உலவுகிற பிறை. இடப்புறத்தில உமையாள். விடைமேல் விமலன் விளங்குகிறான்.

அறிந்த அன்பர் மனம் அதிர்ந்தது. ''ஆ! திருத்துருத்தியீசா ! ஏழை மதியால் ஏமாந்தேன். உமது அருமை அறியாமல், மாதவர் உபதேசத்தையும் மறுத்தேன். அருளே மயமான அரும்பன்ன முலையம்மை, எளிய என்னைக் காக்க, ஆர்வம் காட்டி உம்மை அனுப்பி வைத்தாளா? என் பிழை பொறுத்தாய் ; எளிவந்து ஆண்டாய் ! வாழி பிரபோ உமது அருள்'' என்று வாழ்த்தினார்.

அதே நேரத்தில், எதிரில் இருந்த மலைப் பாம்பும் மறைந்தது. அது இருந்த இடத்தில், குண்டோதரர் எழுந்து குதித்தார். அவரைப் பார்த்த அன்பர் அஞ்சினார். இப்படியும் ஒரு திருவிளையாடலோ பெரும ! என்று அழுதார்; தொழுதார் ஆனந்தித்தார்.

''உருத்திர சன்மா ! காசி உயர்வு ; குத்தாலம் குறைவு ; இப்படி யெல்லாம் எண்ணாதே ! குத்தாலப் பெருமையை அறிவிக்கவே, இப்படி ஒரு அருள் நாடகம் நடத்தினோம்.''

''நிமல காசியை, ஒரு காலத்தில் நீங்கியும் இருந்தோம். நித்திய குத்தாலத்தை ஒரு நாளும் நீங்கிலம். அருளார்ந்த அத்தலம், நீவிரும்பிய கதியை அளிக்கும்.''

''கங்கையினும் சிறந்தது காவிரி. அந்நதியின் கீழ்ப்பாகத்தில், விசாலாட்சி சமேத விஸ்வநாத ரூபமாக, உனக்காக அங்கு வீற்றிருப்போம். அம் மூர்த்தியும் யாமும் வேறல்லம் ; வித்தக அந்நுட்பம், உனக்கு இனி விளங்கும். திருத்துருத்திக்கு இப்போதே திரும்பு ! அங்கு நம்மைச் சேவிப்போர், இறுதியில் முத்தியை எய்துவர்'.'

''சுவாமி ! வேறுபட நினைத்த பாவம் விலக, நெடும் பாம்பான குண்டோதரர், என் உடலை அதிகம் நெருக்கி விட்டார். நகர முடியாத நிலையில் இப்போது இருக்கின்றேனே!''

''அதோ பார் பொய்கை. அதில் மூழ்கு ; எல்லாம் சரியாகிவிடும்'' என்று அருளியபடியே, திருத்துருத்தியார் திருவுருக் கரந்தார்.

''அப்படியே பிரபு'' என்று, முன்னிருந்த பொய்கையில் மூழ்கினார். எழுந்தார் என்ன வியப்பு! குத்தாலக் காவிரித் துறையில், தாம் வந்திருப்பதை அறிந்து வியந்தார்.

அங்கு எழுந்தருளி இருந்த விசாலாட்சி சமேத விஸ்வநாதரைச் சேவித்தார். உள்ளம் குளிர்ந்தது. உணர்வு நெகிழ்ந்தது. குதூகலத்தோடு கும்பிட்டார். மெய்ம் மறந்து, ஆநந்தக் கூத்தும் ஆடினார்.

குத்தாலத்து அன்பர்கள், விவரம் அறிந்தனர். எதிர்கொண்டு வந்தனர். உருத்திரசன்மரைப் பலவகையாக உபசரித்தனர்.

அவர்களுடன் உருத்திரசன்மர், காளிக்கு ஓம் என்று அருளிய காளீசர், ஒரு அன்பனை வருந்த வைத்த காசநோய் தீர்த்த வருணீசர், அன்பன் சோழன் வழிபட்ட அக்கினீசர் முதலிய மூர்த்திகட்கும் விழா நடத்தி, வாழ்க்கை இறுதியில் எம்பெருமான் திருவருள் நிழலின் இன்பம் கண்டார்.

திருத்தொண்டர் திருக்குலம்

வேதியர் பன்னிருவர்

1. குங்குலியக் கலயர்
2. முருகனார்
3. உருத்திரப் பசுபதியார்
4. சண்டேசுவரர்
5. அப்பூதியடிகள்
6. திருநீல நக்கர்
7. நமிநந்தியடிகள்
8. திருஞான சம்பந்தர்
9. சோமாசி மாறர்
10. சிறப்புலி நாயனார்
11. கணநாத நாயனார்
12. பூசலார் நாயனார்

குறுநில மன்னர் ஐவர்

1. மெய்ப்பொருள் நாயனார்
2. கூற்றுவ நாயனார்
3. நரசிங்க முனையரையர்
4. ஐயடிகள் காடவர்கோன்
5. கழற்சிங்க நாயனார்

இடையர் இருவர்

1. திருமூல நாயனார்
2. ஆனாய நாயனார்

மாமாத்திரர் ஒருவர்

1. சிறுத்தொண்ட நாயனார்

தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - சட்டைமுனி

"செந்தமிழ் வாரிதி" முனைவர் இரா. செல்வக்கணபதி

தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை பலவகைப் படும். திருமூல நாயனாரை முதல்வராகக் கொண்டு விரிந்த பரம்பரை குறிக்கத்தக்க ஒன்றாகும். திருமூலர் மரபு பற்றிய பல அரிய பதிவுகள் திருமந்திரத்திலேயே காணக் கிடக்கின்றன. கயிலை மாமலையில் திருநந்தி தேவரிடம் உபதேசம் பெற்ற மாணாக்கர் எண்மர். அவர்களுள் ஒருவர் திருமூலர். இதனைத் திருமந்திரம்

"நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோடு எண்மரும் ஆமே"

எனப்பதிவு செய்து நிற்கிறது.

திருநந்திதேவர் வழி ஒரு பரம்பரை சிறந்ததைப் போலத் திருமூலரை முதல்வராகக் கொண்டு ஒரு சீடர் பரம்பரை விரிந்தது. அவர்கள் எழுவராவர்.

1. மாலாங்கன்
2. இந்திரன்
3. சோமன்
4. பிரமன்
5. உருத்திரன்
6. தறிபோன்ற உருவத்துடன் யோகத்தில் இருக்கும் காலாக்கினி (காலாங்கி)
7. கஞ்சமலையன்

இதனைத் திருமந்திரம்

"மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்சமலையனோடு
இந்த எழுவரும் என்வழியாமே"

எனப் பதிவு செய்கிறது. இதனுள் ஆறாவதாகக் குறிக்கப்பட்டவர் காலாங்கிநாதர் என்பவர். இவரைக் காலாக்கினி என்றும் குறிப்பர். திருமூலர் தரும் அடைமொழிகளால், நடப்பட்ட கட்டுத்தறி போல ஆடாது அசையாது யோகநிட்டையில் இருந்தவர் காலாங்கி நாதர் என்பது தெரிய வருகிறது. காலாங்கி என்பது ஊழித்தீ என்ற பொருள் தருவது. காலாங்கி நாதரின் தலை மாணாக்கரே பழனியில் சமாதி ஆகியுள்ள போகர்.

போகர் ஒரு பெரிய சித்தர் கணத் தலைவராகக் கருதப்படுகிறார். ஆதிகாலத்தில் சிவபெருமான் அருளிச் செய்த எழுநூறாயிரம் சூத்திரங்களைப் போகர் ஏழு காண்டத்துள் அடக்கித் தம் மாணாக்கர்களுக்கு அறிவுறுத்தினார். இவர் மாணாக்கருள் முதன்மை பெற்ற ஒருவர் புலிப்பாணி.

ஏனைய போகரின் மாணாக்கர் பலருள்ளும் குறிக்கத்தக்க ஒருவர் சட்டை முனி என்பார். பதினெண் சித்தர்களில் இவரும் ஒருவராகக் குறிக்கப்படுகிறார். பாம்பின் மேல் தோன்றும் ஒருவகைத் தோலைச் சட்டை எனக் குறிப்பர். ஆடவர்கள் அணியும் உடை வகைகளுள் ஒன்று சட்டை. சிலப்பதிகாரம் இதனை மெய்ப்புகுபை என்று குறிக்கிறது. சட்டை என்பது பிற்கால வழக்கு.

சட்டைமுனி என்ற பெயர்க்காரணம் விளங்க வில்லை. சீர்காழி கட்டுமலை உச்சியில் அடியார் கோலத்தில் நிற்கும் இறைவனுக்குச் சட்டைநாதர் என்பது பெயர். யானைத்தோலை உரித்துப் போர்த்தியவர் என்ற கருத்தில் இப்பெயர் அமைந்தது.

சட்டைமுனி வரலாறு குறித்து விரிவான செய்திகள் கிடைத்தில. ஒரு சிலர் இவர் அகத்தியர் காலத்திலேயே வாழ்ந்திருந்த மருத்துவர் என்கின்றனர். சித்தர் நூல்கள் பலவும் இவரைப் போகரின் மாணவராகவே குறிக்கின்றன. இவர் சேணியர் மரபினர் என்ற குறிப்பும் உள்ளது. இவர் உரோம முனிவரோடு மாறு கொண்டிருந்தார் என்பது அந்த வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது.

இவர் செய்த நூல்களைச் சட்டைமுனி ஞானம் 200, சட்டைமுனி 1200, திரிகாண்டம், சரக்கு வைப்பு, நவரத்தின வைப்பு, சடாட்சரக்கோவை, கல்பம் நூறு, ஞானம் நூறு, வாத நிகண்டு என்பன

அறிய வந்துள்ளன. இவை பலவும் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

சட்டைமுனி ஞானம் என்ற இவரது நூலில், 200 என்று குறிக்கப்பட்டிருந்தாலும், இன்று 12 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. எண்சீர் ஆசிரிய விருத்தங்களாகக் கொண்டால் 6 பாடல்களாக இவை அடங்கும். கிடைத்துள்ள இப்பாடல்கள் பூசைவிதிகள் சிலவற்றைக் கூறுகின்றன.

பூசைசெய்யும் முறைகள் பலவுண்டு. சிவலிங்கத்தையோ, தீபத்தையோ, முருகன் முதலிய திருமேனிகளையோ முன்வைத்துப் பூசிக்கும் முறை நாம் அறிந்தது. சட்டைமுனி வேறு முன் வைத்துப் பூசிக்கப்படுவன சிலவற்றை முதலாகக் குறிக்கிறார். அடுத்துச் சித்தர்கள் பூசைஏற்கும் முறை இன்னது என்பதையும் முன் வைக்கிறார். பூசையில்

1. சுவடிகளை வைத்துப் பூசித்தல்

2. தீபம் ஏற்றிவைத்துப் பூசித்தல்

3. பெண்களையே 'வாலை' என முன் அமர்வித்துப் பூசித்தல்

4. சக்கரங்கள் எழுதப்பெற்ற யந்திரங்களை முன்வைத்துப் பூசித்தல்

5. மகாமேருவை முன் வைத்துப் பூசித்தல்

என்பன பலவகை. சித்தர்களோ மேரு போல நாற்பத்து முக்கோணம் அமைந்த மகாமேருவை முன் வைத்துப் பூசிக்கும் நெறியினர் என்கிறார் இவர். மேருவின் அமைப்பு, மேரு பூசையின் பயன், பூசிப்பார் தகுதி முதலியவற்றை விளக்கும் சட்டைமுனி மேரு பூசைசெய்வார் பெறும் ஆற்றல் எவை என்பதையும் விளக்குகிறார்.

மேரு வான் வடிவத்தை நினைப்பிக்கும் ஒரு குறி. மேரு பூசைசெய்து நிரம்பப் பெற்ற சித்தர்கள், சிவனருள் நினைந்து உபதேசித்தால் மாணாக்கர் களுக்கு, வாதசித்தி, கவனசித்தி என்பன ஒரு சேர அமையும்.

''வரனென்ற மேருமைத்தான் பூசை செய்தோர்
வாய்திறந்தே உபதேசம் சொன்னா ராகில்
கோனென்ற வாத சித்தி கவனசித்தி
கொள்ளைமாட்டான் அவன் சீடன் கூறினானே''

மேலும், இப்பாடல் பகுதியில் வாலைக்கு உரிய மூன்றெழுத்து, திரிபுரைக்கு உரிய எட்டெழுத்து, புவனைக்கு உரிய எழுத்து, யாமளைக்கு உரிய ஆறெழுத்து, ஐவகை தீட்சை, வாசியோகம் என்பன பற்றிய குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன.

மேற்குறித்த உமையம்மை குறித்த நாமமும் எழுத்தும் அறிந்து, தீட்சாகிரமத்தால் பூசனை செய்வார்க்கு

'காயசித்தி விக்கினங்கள் இல்லை இல்லை' என்று சட்டை முனி உறுதி செய்கிறார்.

சட்டை முனியின் இந்த ஞானப் பகுதியில் வேறு சில குறிப்புகளும் காணப்படுகின்றன. தியங்கினால், கொர்ச்சித்து, மிலேச்சர், மாய்கை, எப்போ முதலான உலக வழக்குச் சொற்களும் காணப்படுகின்றன. இவை பலவும் கி.பி. 15ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டன. இத்தகு பாடல்கள் சித்தர் கருத்துக்குப் பின்வந்தோர் தந்த பாடல் வடிவங்களாகவே கொள்ளத்தக்கன. பழனிமலைக் கோயில், சேரமான் பெருமாள் நாயனரால் கட்டப்பட்டக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. எனவே, கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவராக இவர்காலம் அமைதல் கூடும்.

பிறவாமைக்கு வழி

கவிஞர் ஈரோடு ஆற்றலரசு

அறிந்தாரே சிலருண்டு அறியாதார் பலருண்டு
அப்பனை அறிந்தாரோடி? - சீத்தம்மா
அப்பனை அறிந்தாரோடி ?

தெரியாதார் பலருண்டு தெரிந்தாரே சிலருண்டு
தெய்வத்தைக் கண்டாரோடி - சீத்தம்மா
தெய்வத்தைக் கண்டாரோடி?

பொய்யூரில் வாழ்வோர்க்கு மெய்யூரின் வழிகாண
பண்போடு நினைத்தாரோடி - சீத்தம்மா
பண்போடு நினைத்தாரோடி ?

பொய்யான மேனிக்குப் பட்டாடை அலங்காரம்
பொலிவெல்லாம் ஏதுக்கடி - சீத்தம்மா
பொலிவெல்லாம் ஏதுக்கடி ?

மெய்யான ஜோதியை கண்டிடும் பேர்கட்கு
மறைவேதம் ஏதுக்கடி - சீத்தம்மா
மறைவேதம் ஏதுக்கடி ?

அன்றாட வாழ்க்கையில் பசி நீக்க வழிதேடி
அலைவாரோ அறியாரடி - சீத்தம்மா
நிலையாமை அறிந்தாரோடி ?

பரமனின் தாள் காணப் பண்போடு துதிப்போர்க்கு
பாரினில் துயரேதடி - சீத்தம்மா
ஊரினில் குறையேதடி ?

நிலையான பேரொளியை நினைவினில் வைத்தாரே
இறவாமை கொள்வாரடி - சீத்தம்மா
பிறவாமை பெறுவாரடி ?

''இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்'' என்ற இராமபிரான்

திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

''வந்து எனைக் கரம் பற்றிய வைகல்வாய்

இந்த இப்பிறவிக்கு இரு மாதரையும்

சிந்தையாலும் தொடேனென்ற செவ்வரம்

தந்த வார்த்தை திருச்செவிச் சாற்றுவாய்''

என்பது சூடாமணிப் படலத்தில் வரும் பாடல் ஆகும்.

இந்த - இந்த மண்ணுலகில், இப்பிறவி - இங்கு ராமாவதாரம் என்பதே பொருள்.

இந்த இப்பிறவிக்கு - எனும் வாக்கியத்தின் பொருள் - திருமால் மண்ணுலகில் வந்து எடுத்த பிறவிகளுள் இராமாவதாரத்தைக் குறிக்கின்றது.

திருமணமான புதிதில் கணவன் மனைவியின் அழகில் கட்டுண்டு, இப்பிறவியில் உனையன்றி வேறு பிற மாதர்களை நினைக்கவும் மாட்டேன் என்று கூறுவது இயல்பே. இதில் வியப்பொன்றும் இல்லை. இதைக் குற்றமாகவும் எடுத்துக் கொள்ள முடியாது.

குற்றம் குறைகள் நிறைந்த மனிதன் இவ்வாறு கூறுதல் இயல்பே..

இங்கே இராமபிரான் சீதை இடத்தில் இவ்விதம் கூறியதாகப் பொருள் கொள்ளலாமா?

இராமர், தம்மையும் ஒரு மானிடனாகக் கருதி இவ்விதம் கூறியருப்பாரா? அதுவும் தெய்வப் பிறவியாகிய சீதாப்பிராட்டியிடம் இப்படிக் கூறி இருப்பாரா?

தெய்வப்பிறவிகளை மானிடர்கள் தகுதிக்குப் பொருத்தி, தாழ்வாக கருதுவதாகவோ, பேசு வதாகவோ பொருள் கொள்வது சிறப்பாகாது.

மேற் கூறிய பாடலில், தெய்வப் பிறவிகள் பேசுவதாகவே பொருள் கொண்டு பார்த்தலே அவசியம். பொதுவாக, மூல தெய்வங்கள் மூன்று சக்திகளையுடையவர்கள் என நூல்கள் கூறுகின்றன. அதாவது, இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி இம்மூன்றும் மூல தெய்வங்களுக்கு அமைந்திருப்பதை ஆன்றோர்கள் வகுத்துள்ளனர்.

சிவன் - மூன்று சக்திகளையுடையவராக கூறப்படுகிறது - அதாவது கங்கை, பார்வதி, பராசக்தி (காளி)

விநாயகர் - சித்தி, புத்தி, வல்லபை என 3 சக்திகளைக் கொண்டவர் என கூறப்படுகிறது.

முருகன் - வள்ளி, தெய்வயானை, வேல் என 3 சக்திகளைப் பெற்றுள்ளதை யாவரும் அறிவர்.

மகாவிஷ்ணு - சீதேவி, பூதேவி, நீலாதேவி எனும் 3 சக்திகள் பெற்றவராவார்.

பிரம்மா - காயத்ரி, சாவித்திரி, சரஸ்வதி என 3 சக்திகளைக் கொண்டவராவார்.

இராமாயணத்தில் இராமர், மகாவிஷ்ணுவின் மறு அவதாரம் அல்லவா! இராமனாக அவதரித்த இப்பிறவியில், தனக்குரிய மூன்று சக்திகளுள், சீதேவியாகிய சீதையை மட்டும் மணந்தவராவார்.

ஏனைய இரு சக்திகளாகிய பூதேவி, நீலாதேவி எனும் இருவரையும் மனத்தாலும் தொடேன் என இராமர், சீதையிடம் திருமணத்தன்று உறுதி அளித்த தாகவே இப்பாடலுக்கு நாம் பொருள் கொள்ள வேண்டும்.

சீதையும் இதனையே அனுமன் வாயிலாக இராமபிரானுக்கு நினைவுப் படுத்தச் சொன்னதாகக் கருதுதல் வேண்டும்.

எனவே இப்பிறவி எனும் சொல், இப்போதுள்ள இராமாவதாரத்தைக் குறிக்கும்.

இருமாதராகிய, பூமாதேவி, நீலாதேவி எனும் இருவரையும் தொடேனென்றது, இராமாவதாரம் முடியும் வரை மனத்தாலும் அவ்விருவரையும் நினைக்க மாட்டேன் என்று இராமபிரான் உரைத்த உறுதியையே நமக்குக் காட்டுகின்றது.

தேரின் நிழலைப் பொற்பாதங்களால் அழுத்திய கண்ணன் தேரழுந்தூர் - ஆமருவியப்பன்

ஏ.கிருஷ்ணன்





உலகத்தயே காக்கும் எம்பெருமாள் வைகுண்டவாசன் அதர்மத்தை அழித்து தர்மத்தையும் பக்தியையும் நிலைநாட்ட எடுத்த அவதாரங்கள் எத்தனையோ விதமாகும் எனக் கூறப்படுகிறது. அதில் கண்ணன் மாடுகளை மேய்ப்பவனாக ஆரண்யத்தில் நடத்திய அற்புதங்கள் குறிப்பிடலாம். பக்திமார்க்கத்தையும் அகம்பாவத்தையும் ஒடுக்கிய ஒரு அவதாரமாகும் எம்பெருமாள் கண்ணன்.

பெருமாளின் 108 திருப்பதிகளில் ஒரு திருத்தலம் தேரழுந்தூர் என்ற தலமாகும். 1300 ஆண்டுகள் பழமையான மிக்க இத்தலம் வரலாற்றுச் சிறப்புடையது என்பது காணலாம். மணவாள மாமுனிகள் மங்களாசாஸனம் செய்த பெருமாள் என்பதும். திருமங்கையாழ்வார் தாயாரையும் சேர்த்து மங்களா சாஸனம் செய்தார் என்பதும் இத்தல விசேஷமாகும்.

இத்தலத்திற்கு திருவழுந்தூர், தேரழுந்தூர், கிருஷ்ணாரண்யம் என்ற பல பெயர்கள் உள்ளன. மூலவர் தேவாதிராஜன் 13அடி உயரத்தில் சாளக்கிராமத்தால் நின்ற திருக்கோலத்தில் கிழக்கே நோக்கி சேவை சாதிக்கிறார். இடது கையில் ஊன்றிய கதையும், வலது திருகை அபயஹஸ்தமாகவும் மேல் இடது கையில் சங்கும், வலது திருக்கையில் சக்கரமும் காட்சியளிப்பது காணலாம்.

உத்ஸவர் உபயநாச்சியாருடன் ஆமருவியப்பன் அருகில் பசுகன்று எல்லையற்ற அழகுடன் காணலாம். ஆமருவியப்பன் என்றால் பசுக்களை மேய்ப்பவன் என்பது பொருள் ஆகும். மேலும் பார்வதிதேவி சாபத்தினால் பசுரூபத்தில் அருள் பாலிப்பதும், மார்க்கண்டேயர், அவர் அருகில் பக்த பிரகலாதனையும் காணலாம். மேலும் உபரிசிரவசு, அகஸ்தியர் போன்றவர்களையும் பார்க்கலாம். கோபுரத்தின் உட்புறம் கம்பனும், அவர் மனைவியும் சிலைவடிவில் உள்ளனர். இங்குத் தீர்த்தம் தர்சனபுஷ்கரணி எனகூறப்படுகிறது.

ஒரு முறை தேவேந்திரன் கருடாழ்வாரிடம் ஒரு விமானத்தையும், வைரமுடியையும் கொடுத்து 108 திருப்பதிகளில் எந்தப் பெருமாளுக்கு எது உகந்ததோ அதைக் கொடுத்து வரக் கூறினார். வைரமுடியை திருநாராயணபுரத்திலும் (மைசூர்), விமானத்தைத் தேரழுந்தூர் ஆமருவியப்பனுக்கும் கொடுத்தார். இதனால் இங்குள்ள விமானம் கருடவிமானம் ஆனது. அத்துடன் கருடன் பெருமாளின் அருகிலேயே அமரும் பாக்கியம் பெற்றார் என்பது விசேஷம்.

எல்லா பெருமாள் திருக்கோயில்களிலும் பெருமாள் எதிரில் கருடன் சன்னதி இருக்கும். இவ்விடம் பெருமாள் அருகிலேயே இருப்பது காணலாம். மேலும், நாச்சியார் திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர், தேரழுந்தூர் ஆகிய மூன்று திருக்கோயில்களில் மட்டும் தான் கருடாழ்வார் பெருமாளின் அருகில் இருப்பது காணலாம் என்பது விசேஷமாகும்.

மேலும் 18 பெருமாள் திருக்கோயில்களின் கருடாழ்வார்கள் ஒரே சமயம் இத்தலத்தில் ஒன்றாகக் கூடிச் சேவை சாதிப்பது காணலாம்.

முன்னொரு காலத்தில் தர்மசீலரும் விஷ்ணு பக்தருமான உபரிசிரவசு என்ற மாமன்னன் பெருமாளை அடைய வேண்டி மிக பெரிய யாகம் செய்தார். அந்த யாகத்திற்கு ப்பிரும்மா, தேவேந்திரன், அகஸ்தியர் முதலான பலரும் வருகை தந்தனர். ரிஷிகள் மிக சிறப்பாக வேள்வி நிகழ்த்தும் போது பக்தியோடு நின்ற உபரிசிரவசுவுக்கு தீயின் நடுவே ஸ்ரீமந்நாராயணன் தெரிகிறார். ''இதோ கோவிந்தா, கோவிந்தா'' என்று குரல் எழுப்புகிறார். இதை அறிந்த மற்ற ரிஷிகள் ''மன்னா தவம் செய்யும் எங்களால் கூட காண்பதற்கரிய மஹாவிஷ்ணுவை நீர் எப்படி காண முடியும் என்று கூறி மன்னரின் அசரீரி யாகத்தினால் தவத்தினால் கர்மங்களினால், விரதத்தினால் என்னை ஆழ்ந்த உண்மையான நம்பிக்கையோடு பக்தி செய்தால் தான் நான் காட்சிக்கு எளியவன் ஆவேன் என்றும் அதுபோல் உண்மையான பக்தியுடைய உபரிசிரவசு என்னை தரிசித்தான் என்று ஒலித்தது. தேவர்களும், ரிஷிகளும், மன்னனைப் போற்றினார்கள்.

உடனே தேவேந்திரன் விஷ்ணுஸ்தலங்களை

தரிசனம் செய்யவும், பெருமாளுக்குத் தொண்டு செய்வதற்கும் வானில் செல்கின்ற தேரினை உபரிசிரவசுக்கு அளித்தார். அவன் வானவீதி வழியே தேரைச் செலுத்தும் ஆற்றல் மிக்கவன். அதன் நிழல் விழும் (தேரின் நிழல்) இடங்களைத் தனக்கு அடிமையும், அதன் செயல் இழக்கும் சக்தி கொள்பவன் என்ற ஆணவத்துடன் சென்றான்.

அப்பொழுது சிவபெருமான் (வேதபுரிசுவரர்) பார்வதியுடன் சொக்கட்டான் ஆட நடுநிலையாளராக கண்ணனை அழைத்தார். ஆட்டத்தின் முடிவில் பார்வதி எனக்கே வெற்றி என்றதும் கோபம் கொண்ட சிவபிரான் பார்வதியைப் பசுவாக மாறும்படி செய்தார். ஆகையால் பசு காவேரி கரையோரம் உள்ள காட்டில் மற்ற பசுக்களுடன் மேய்ந்து கொண்டிருந்தது. ஆகையால் கண்ணன் தன் தங்கையாகிய பார்வதியைக் காக்கும் நிலையிலும் உபரிசிரவசுவினுடைய கர்வத்தை அடக்க வேண்டும் என்ற இரு நிலையில் காவேரி ஆரண்யத்தில் ஆனிரை மேய்க்கும் இடையராக (ஆமருவியப்பனாக) தோன்றினான்.

உபரசிரவசு மன்னன் காவேரியில் உள்ள காட்டில் தன் தேரைச் செலுத்தி வானவீதி வலம் வரும் பொழுது கீழே பசுக் கூட்டங்களுடன் நிற்பவன் யார் என்றுணராது மேற்சென்றான்.

அவன் ஆணவத்தை அடக்கக் கருதிய கண்ணன் தேரின் நிழலைத் தன் பொற்பாதவிரல்களால் அழுத்த அத்தேர் பூமியில் அழுந்தியது. உடனே மன்னன் இதையறிந்து கண்ணனின் திருவடி மலர்களில் தன் தவறை உணர்ந்து பணிந்தான். ஆகையால் தான் இத்தலம் தேரழுந்தூர் என்ற பெயர் பெற்றது என்பது விசேஷம்.

உடனே எம்பெருமான் ''மன்னனே! நீசெய்த பிழைக்குப் பரிகாரமாக எமக்கு அன்று கடைந்த வெண்ணெய் நிரப்பிய ஆயிரம் குடங்கள் காணிக்கையாக வேண்டும்'' என்று கேட்டார். அப்போழுது மன்னன் தன் செருக்கால் அதை ஏற்றுக் கொண்டான். குறிப்பிட்ட நாளில் 999 குடங்களைப் பெற்றுவிட்டான். ஒரே ஒரு குடம் வெண்ணெய் கிடைக்கவில்லை அப்போதாவது தன் இயலாமையை கண்ணனிடம் தெரிவித்து அவன் அருள் பெற்று இருக்கலாம். ஒரு குடம் தானே என்று நினைத்து வெற்றுக் குடமொன்றை மூடி வைத்தான். ஒவ்வொரு குடமாக பார்க்கவா போகிறான் என்ற எண்ணத்தில் வெண்ணை குடங்களின் நடுவே அதை வைத்து விட்டான். எம்பெருமாள் இதையெல்லாம் அறியாதவனா? ஒவ்வொரு குடத்தினையும் திறந்து பார்த்தபோது ஒவ்வொரு குடமும் வெற்றுக் குடமாய் இருந்தது. அப்பொழுதுதான் வெண்ணெய்க்காக வரவில்லை தன்னையே திருத்திப் பணிகொள்ள வந்தான் என்பதையும் மன்னன் உணர்ந்தான்.

தன் தவறை உணர்ந்து பெருமாளின் திருவடியில் சரணம் அடைந்தான். உடனே பெருமாள் ஆமருவியப்பன் நான்கு கரங்களுடன் பசுவும் கன்றும் சூழ மன்னனுக்கு சேவை தந்தருளினான்.

கிருஷ்ணன் மேய்த்த காடானதால் இவ்விடம்



கிருஷ்ணாரண்யம் எனக் கூறப்படுகிறது. இக்கோயிலின் எதிரே அருள்மிகு வேதபுரிசுவரர் திருக்கோயில் உள்ளதைக் காணலாம்.

திருவிழாக்கள்

வைகாசி மாதம் பிரம்மோற்சவம் நவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, கோகுலாஷ்டமி முதலிய திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

மயிலாடுதுறையிலிருந்து கும்பகோணம் செல்லும் வழியில் 10 கி.மீ. தூரத்தில் உள்ளது பஸ்வசதியும் உள்ளது.

நீங்களும் இத்தகைய அற்புத திவ்விய திருக்கோயிலைத் தரிசித்து கண்ணன் அருள் பெறுங்கள்.

ஸ்ரீரங்கம் தரிசித்தால் எமனை ஏமாற்றலாம்



ஸ்ரீரங்க மகத்துவம் என்ற நூலில் ஸ்ரீரங்கத் தலத்தின் பெருமை இவ்வாறு கூறப்பட்டுள்ளது. எமன் நாரதரிடம் பின்வருமாறு கூறி வருந்துகின்றானாம்.

''பூலோகத்தில் பிறந்திருக்கப்பட்ட சகல மனிதர்களும் ஸ்ரீரங்கத்திற்குப் போக வேண்டுமென்று நினைத்த மாத்திரத்திலேயே அவர்கள் செய்த பாபங்கள் எல்லாம் பஞ்சாய் பறந்து போய், நம்முடைய லோகத்திற்கு வராமல் புண்ணிய லோகத்தை அடைகிறபடியால் இன்னமும் நம்முடைய ஆக்கினை எங்கே செல்லப் போகின்றது! நம்முடைய அதிகாரத்தை யாரிடத்தில் செலுத்தப் போகின்றோம்''.

இவ்வாறாக எமனே வருத்தப்படுவதாகக் கூறப்பட்டிருப்பதால் ஸ்ரீரங்கம் தரிசித்தால் எமனை ஏமாற்றலாம் என்பது தெளிவு.

கேசவன் என்ற திருநாம மகிமை

கேசி என்பவன் ஒரு கந்தர்வன். மகா விஷ்ணுவின் பரமபக்தன். தினமும் ''சித்ர சரோவரம்'' என்ற இடத்தில் மலரும் தாமரை மலர்களைப் பறித்து வந்து மகாவிஷ்ணுவைப் பூஜிப்பது இவன் வழக்கம்.

பார்வதிதேவி ''த்ரைமாஸிக விரதம்'' என்ற விரதம் அனுட்டித்தபோது அதற்காகத் தினமும் 1008 தாமரை மலர்கள் தேவைப்பட்டன.

தாமரை மலர்கள் மிகவும் அதிகம்பூப்பது ''சித்ரசரோவரம்'' என்ற இடத்தில்தான்.

பார்வதிதேவியின் பூஜைக்குத் தாமரை மலர்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வேண்டும் என்பதால் ''சித்ர சரோவரத்தில் வேறு யாரும் தாமரை மலர்களைப் பறிக்கக்கூடாது. அப்படி மீறிப் பறிப்பவர் அரக்கர் ஆவர்'' என்று ஆணை பிறப்பித்தார் சிவபெருமான்.

இது தெரியாத கேசி என்ற கந்தர்வன் வழக்கம் போல் தாமரை மலர்களைப் பறித்திட அவனைக் காவலர்கள் பிடித்துப் போய் சிவபெருமானிடம் ஒப்படைத்தார்கள்.

கையில் தாமரை மலர்களோடு பிடிபட்ட அக்கந்தர்வன் ''சுவாமி! தங்கள் ஆணை அறியாமல் இக்குற்றம் புரிந்து விட்டேன். விஷ்ணு பூஜைக்காகப் பறித்த இம்மலர்கள் வீணாக வேண்டா. ஹரியும் ஹரனும் ஒன்றே! என் பூஜையை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று தாமரை மலர்களைக் கொண்டு சிவபெருமானை வழிபட்டான்.

மகிழ்ச்சியோடு அக்கந்தர்வனின் பூஜையை ஏற்றுக் கொண்ட சிவபெருமான் ''யாம் விதித்தபடி அரக்கனாகப் பிறப்பாய், ஸ்ரீகிருஷ்ணரால் கொல்லப் பட்டுப் பெருமை பெறுவாய்'' என்று வரமும் அளித்தார்.



அக்கந்தர்வன் கேசி என்ற அரக்கனாய்ப் பிறந்தபோது, கிருஷ்ணனைக் கொல்ல அந்த அரக்கனை ஆயர்பாடிக்கு அனுப்பி வைத்தான் கம்சன்.

அந்தக் கேசியும் மிகப் பெரிய குதிரை வடிவம் எடுத்துக் கொண்டு கோகுலம் வந்தான்.

கிருஷ்ணரும் தன்னைக் கொல்ல வந்த அக்குதிரையின் பின்கால்கள் இரண்டையும் பிடித்துச்சுழற்றி ஆகாயத்தில் விட்டு எறிந்தார்.

கேசி என்ற அந்த அரக்கன் மடிந்து விழுந்த போது தேவர்கள் பூமாரி பொழிந்தனர். இறந்த கேசி திவ்ய உருவம் கொண்டு மேலுலகம் சென்றான்.

இந்தக் கேசியின் பெயரால் கிருஷ்ணருக்கு உண்டான நாமமே ''கேசவன்'' என்பதாகும்.

திருமாலின் பன்னிரு துவாதசநாமங்களில் முதலாவது திருநாமம் என்ற பெருமையைக் கொண்டு விளங்குகின்றது. இந்தக் ''கேசவன்'' எனும் திருநாமம்.

ஓம் கேசவாய நம!

சுற்றுலாப் பொருட்காட்சியில் இடம் பெற்ற நம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அரங்கத்திற்குப் பரிசு.

சென்னையில் தீவுத்திடலில் சிறப்புற நடைபெற்ற சுற்றுலாப் பொருட்காட்சியில் இடம் பெற்றிருந்த நம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அரங்கத்திற்கு மூன்றாம் பரிசு வழங்கப்பட்டது. பரிசாக வழங்கப்பட்ட சுழற்கேடயத்தை நம் இந்து சமய அறநிலையத் துறையின் **இணை ஆணையாளர் திருமிகு மு.க.பாலசுப்பிரமணியன் பி.ஏ.,பி.எல்** அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். சென்னை **உதவி ஆணையர் திருமிகு க.பழநியப்பன் பிஎஸ்.சி.,பிஎல்.** அவர்கள் உடன் உள்ளார்கள்.

திருக்கல்யாணத் திருவிழா தத்துவம்

மனிதர்கள் ஆணும் பெண்ணும் மணந்து கொள்வது கல்யாணமாகும். இறைவனும் இறைவியும் புரிந்து கொள்ளும் கலியாணம் திருக்கலியாணம் எனப்படும். இறைவன் எடுக்குந் திருமேனிகள் போகி. யோகி. வேகி என மூவகைப்படும். போகியாயிருந்து உயிர்களுக்குப் போகத்தைப் புரிகின்றான். யோகியாயிருந்து யோக முத்தியை அருளுகின்றான். வேகியா (கோரவடிவா)யிருந்து உயிர்களின் வினையை வீட்டுகின்றான். இதனைச்சிவஞானசித்தியார்,

''போகியா யிருந்து உயிர்க்குப் போகத்தை புரிதல் ஓரார்
யோகியாய் யோகமுத்தி உதவுதல் அதுவும் ஓரார்
வேகியானாற் போற்செய்த வினையினை வீட்டல் ஓரார்
ஊகியா மூடரெல்லாம் உம்பரில் ஒருவன் என்பர்''

எனக்கூறுகின்றது.

எறும்பு முதல் யானை ஈறாக உள்ள உயிர் வர்க்கங்கள் அனைத்தும் போகந்துய்ந்து இனவிருத்தி செய்து வருவதை நாம் அறிகிறோம். மனிதர்களும் போகந்துய்ந்து மக்கட்பேறு பெற்று வாழ்ந்து வருகின்றனர்.

தேவர்கள் தேவமாதர்களோடு காட்சியால் மாத்திரம் போகந்துய்க்கிறார்களேயன்றி மனிதர்களைப்போல உடலுறு புணர்ச்சியால் இன்பந்துய்க்கவில்லை. இதனை **''கடவுளர் புணர்ச்சி யென்னக் காட்சியில் இன்பந்துய்த்து''** எனும் கந்தபுராணப் பாடலால் அறியலாம்.

தேவர்கள் புணர்ச்சியே இத்தகையதாயின் தேவாதி தேவனாகிய இறைவனது திருக்கல்யாணம் எத்தகையது என்பதை இயம்புவதற்கு இயலுமோ? உலகிலுள்ள எண்பத்து நான்கு இலட்சம் ஜீவ பேதங்களுக்கும் உடம்பினை அளித்து அவை போகித்து சந்ததி விருத்தி செய்யச் செய்கிறான். சிவதத்துவத்திலிருந்து சத்திதத்துவம் தோன்றியும் சத்திதத்துவத்திலிருந்து சாதாக்கியம் தோன்றியும், இருவரும் புணர்ந்து உலகுயிர் அனைத்தும் ஈன்றாலும் சிவபிரான் பிரமசாரியாகும். சக்தி கன்னியாவாள். பரமஞானிகள் இதன் உண்மையைத் தெரிந்து கொள்வார்கள். இதனைச் சிவஞானசித்தியரில்,

''சிவம் சக்தி தன்னியீன்றும் சத்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்து இருவரும் புணர்ந்து இங்கு உலகுயிர்எல்லாம் ஈன்றும்
பவன் பிரமசாரி யாகும் பான்மொழி கன்னி யாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கு இத்தன்மைதான் தெரியுமன்றே''

எனக்கூறியிருக்கிறது.

நமது தாய் தந்தையார் திருமணம் செய்து கொண்டு போகியாய் வாழாமற் போனால் மக்களாகிய நாம் எவ்வாறு பிறந்திருக்கக் கூடும்? நமது பாட்டனும் பாட்டியும் அவ்வாறே வாழாமற் போனால் நமது பெற்றோர் எவ்வாறு பிறந்திருப்பர்? பல தலைமுறைகளுக்கு முற்பட்ட மூதாதையர்கள் முதற் கொண்டு வழிவழியாக போகியராய் வாழ்ந்ததனால் அன்றே நாமும் போகியாய் வாழ முடிந்தது.

இறைவன் போகவடிவில் வாழாமற் போனால் உலகத்து உயிர்கள் அனைத்தும் போகியாய் வாழ இயலாது. ஆதலின், இறைவன் திருக்கலியாணம் புரிவது நம் பொருட்டேயாகும். நமது பெற்றோர்களது திருமணத்தை நம்மால் பார்க்க முடியாது. ஆயினும் அவர்களது சஷ்டியப்தபூர்த்தி விழாவில் சந்ததிகள் அனைவரும் அந்தத் திருமணத்தை கண்டுகளிக்கின்றனர். அதுபோல, இறைவனது திருமணத்தையும் நாம் கண்டதில்லை.

ஆயினும், ஆண்டுக்கு ஒரு முறை ஆலயங்களில் இறைவனுக்குத் திருக்கலியாணம் நடத்தி ஆர்வத்தோடு கண்டு களிக்கின்றோம். சஷ்டியப்த பூர்த்தி விழாவை சில சற்புத்திரர்கள் நடத்திக் களிப்பர். பெற்றோர்களுடைய ஆசியைப் பெற்றுக் கொள்வர். அதைப்போல அடியார்கள்

இறைவனது திருக்கலியாணத்தைச் சிறப்புற நடத்தி அவரது அனுக்கிரகத்தைப் பெற்று மகிழ்கின்றனர்.

இறைவனோ நித்தியகலியாண சுந்தரர். இறைவியோ நித்திய கலியாணசுந்தரி. நமக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாளாகும். ஆதலின், ஆண்டுக்கு ஒரு முறை ஆலயங்களில் கலியாணம் நடத்துகிறோம். தேவி மனிதப்பெண் போன்றவள் அல்லள்; இறைவனிடமிருந்து என்றும் நீங்காது கலந்துறைகின்றாள்.

தீயும் சூடும் போலவும், மணியும் ஒளியும் போலவும், பாலும் சுவையும் போலவும் அவள் பரமனோடு உறைகின்றாள். அர்த்தநாரீசுவர வடிவத்தில் இறைவனது ஒரு பகுதி உடம்பைத் தனக்காகவே பெற்றுக் கொண்ட பெருமாட்டியாவாள். அவளது திருமணத்தை நமது திருமணம் போல் நினைத்தல் கூடாது. நமது தாயோ நமது சகோதரர்களாகிய சிலரைப் பெற்றாள்.

ஆனால், பராசக்தியோ உலகன்னையாகி உயிர்வர்க்கங்கள் அனைத்தையும் ஈன்றாள். பராசக்தியோ தட்சன் மகளாய் தாட்சாயணி எனும் நாமத்தோடும், பர்வதராஜன் மகளாய் பார்வதி எனும் பெயரோடும் , மலயத்துவசபாண்டியன் மகளாய்தடாதகைப் பிராட்டியெனும் பெயரோடும் தோன்றித் தவமாற்றி அப்பரமனையே பதியாக அடைந்தாள்.

அம்மையாற்றிய அருந்தவத்துக்கு இறைவன் மகிழ்ந்து காட்சி கொடுத்து அவளைத் திருமணம் புரிந்து கொண்டமையை இத்திருக்கலியாணத் திருவிழா நினைவுறுத்துகிறது. தற்போதும் கன்னியாகுமரியில் பகவதியம்மை, கடுந்தவம் புரிவதைக் கண்கூடாகவும், பாரதியாரின்,

''நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று
நித்தம் தவம் செய்யும் குமரி''

எனும் வாக்கினாலும் அறியலாம்.

உலகில் உள்ள ஆணோ, பெண்ணோ யாவராயினும் தவமாற்றுவராயின் இறைவன் அவர்கள்முன் தோன்றி காட்சி கொடுத்து அருள் புரிவாள் என்பதே இத்திருக்கலியாண விழாவின் தத்துவமாகும். சலனமின்றி அசைவற்று விளங்கும் சந்திரன், அலையால் அலையும் நீரில் அசைவதாகத் தோன்றுவதைப் போல இறைவனது சிற்சில விளையாடல்கள் நமது கண்ணுக்கு நமது அறிவுக்கு தக்கவாறு மாறுபாடாகத் தோன்றும். பரமசிவன் புரிந்து கொண்ட பார்வதி திருமணம், மீனாட்சி திருமணம் போலவே, அருள்மிகு நாராயணர் புரிந்து கொண்ட ஆண்டாள் கலியாணமும், அருள்மிகு சுப்பிரமணியர் புரிந்து கொண்ட வள்ளியம்மை, தெய்வானை கலியாணங்களும் திருக்கலியாணம் என்பதில் அடங்கும்.

காலை முதல் இரவு வரை இறைவனையும் இறைவியையும் பிரித்து வைத்து வணங்கி,

இறுதியில் அவர்களைச் சேர்த்து வைத்துப் பூசித்துப் பள்ளியறையில் வழிபாடாற்றுகின்றனர். இவ்வழிபாடு, அருளையன்றி சிவமும், சிவத்தை அன்றி அருளும் இல்லை என்பதனை உணர்த்துகின்றது. பள்ளியறையில் 'பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகையிருந்த' கோலத்தை வழிபடின்,

''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை''

இதை உணர்த்துவதே மீனாட்சித் திருக்கல்யாணத் தத்துவமாகும்.

அருள்மிகு மீனாட்சி சுந்தரரேசுவரர் திருக்கல்யாண வைபவம் 9.5.06 அன்று காலை 8.26 மணிக்குமேல் 8.50 மணிக்குள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இத்திருமண வைபவத்தைக் கண்ணுற்றுப் பேரின்பப் பெருவாழ்வு பெறுகிறார்கள். அவர்கள் திருக்கல்யாண வைபவத்தில் கலந்து கொண்டு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மொய் எழுதுவதும், திருக்கல்யாண விருந்து உண்பதும் காணக் கண்கோடி வேண்டும் அற்புத நிகழ்ச்சியாகும்.

திருத்தொண்டர் திருக்குலம்

பிற மரபினர்

குயவர் - திருநீலகண்ட நாயனார்
பாணர் - திருநீலகண்ட யாழ்ப்பாணர்
பரதவர் - அதிபத்த நாயனார்
வேடர் - கண்ணப்ப நாயனார்
சான்றார்- ஏனாதிநாத நாயனார்
சாலியார்- நேசநாயனார்
செக்கார்- கலிய நாயனார்
ஏகாலியர்- திருக்குறிப்புத் தொண்டர்
ஊர்ப்புலமை ஆன்ற தொழில் தாயத்தர்
ஒப்பிலவர் - திருநாளைப் போவார்.

அழகர் ஆற்றில் இறங்கும் திருவிழா

ஸ்ரீ கள்ளழகர் நித்தியோற்சவப் பெருமாள், அவருக்குப் பிரதி தினமும் ஏதாவது ஒரு உற்சவம் நடந்து கொண்டே இருக்கும். நித்யோற்சவம் அன்றி சில விசேஷ நாட்களில் சிறப்பான திருவிழாக்களும் அவருக்கு நடைபெறுகின்றன. இப்படி நித்திய நைமித்திக வைபவங்களுக்கு உரியவராக ஸ்ரீ அழகர் விளங்குகிறார்.

மிகப்பழைய காலம் தொட்டே ஸ்ரீ அழகருக்கு நடந்து வந்து விழாக்கள் இன்னின்னவை என்றும் அவைகளுக்காக கொடுக்கப்பட்ட மானியங்கள், நிபந்தங்கள் அல்லது கட்டளைகள் இன்னின்னவை என்றும், இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்களால் நாம் அறியலாம். இக்கட்டளைகளை ஏற்படுத்தியவர்கள் இன்னார் என்றும் அவற்றால் நாம் அறிகிறோம்.

சித்திரா பௌர்ணமித் திருவிழா

ஸ்ரீ கள்ளழகருக்குரிய திருவிழாக்களில் மிகவும் முக்கியமானது சித்ரா பௌர்ணமித் திருநாள்தான். மதுரை ஸ்ரீ மீனாட்சிக் கோயிலில் தொடங்கும் சித்திரைத் திருவிழாவும் இவ்விழாவும் ஒரேசமயத்தில் நடக்கின்றன.

திருமலை நாயக்கர் காலத்திற்கு முன்பு இந்த இரண்டு உற்சவங்களும வெவ்வேறு மாதங்களில் நடந்தன. அப்போழுது அழகரின் சைத்ரோற்சவம் சித்திரை மாதத்திலும், மீனாட்சி கோயில் உற்சவம் மாசி மாதத்திலும் நடந்தன. இதனால் தான் மாசி மாதத்தில் நடக்கும் இத்திருவிழாவில் மீனாட்சி சுந்தரேசுவரர்களுடைய ரதம் செல்லும் வீதிகளுக்கும் மாசி வீதிகள் என்று பெயர் ஏற்பட்டது.

திருமலைநாயக்கர் காலத்திற்கு முன்பு ஸ்ரீஅழகர் சித்திரை மாதத்தில் அலங்காநல்லூர், தேனூர் முதலிய ஊர்கள் வழியாக வந்து வைகை ஆற்றில் இறங்கி, வண்டியூரில் தங்கியிருந்து, மீண்டும் அழகர் மலையை அடைவது வழக்கம். திருமலை நாயக்கர் இந்த இரண்டு விழாக்களையும் ஒன்றாகச் சேர்த்தால் அது மிகவும் சிறப்பாக இருக்கும் என்று கருதி அப்படியே செய்தார். அவருடைய ஏற்பாட்டின் படியே இப்பொழுதும் நடந்து வருகிறது.

இப்பொழுது கள்ளழகர் வைகையாற்றில் இறங்கி வண்டியூர் சென்று, தன் மலைக்குத் திரும்பி வருவதைப் பற்றி ஒரு கதை வழங்குகிறது. இக்கதைக்கு சாஸ்திர, புராண ஆதாரம் ஒன்றும் இல்லை. ஆகையால் பொதுவாக சைவ, வைஷ்ணவ மதங்களை ஐக்கியப்படுத்தும் ஒரு முயற்சியாகவே இதைக் கொள்ள வேண்டும்.

தன் தங்கை ஸ்ரீ மீனாட்சிக்கும் ஸ்ரீ சுந்தரேசுவரருக்கும் கல்யாணம் நடக்கபோகும் செய்தியைக் கேள்விப்பட்டு ஸ்ரீ அழகர், கள்ளழகர் திருக்கோலத்துடன் அந்த வைபவத்தைப் பார்க்க 24கி.மீ தூரத்திலுள்ள தன் இருப்பிடத்தை விட்டுச் சகல கோலாகலங்களுடன் மதுரையை நோக்கி வருகிறார் என்பது இக்கதை.

பல்லக்கில் கள்ளர் திருக்கோலத்துடன் வழியில் பல மண்டபங்களில் தங்குவார், இந்தச் சேவையைப் பார்ப்பதற்கும் அழகரை எதிர்கொள்வதற்கும் மதுரை மக்கள் திரண்டு வரும் காட்சிகள் **''ஸ்ரீ கள்ளழகர் எதிர்சேவை''** என்று சொல்லப்படும்.

இரவில் அம்பலக்காரர் மண்டபத்தில் பிரம்மாண்டமான வாண வேடிக்கைகள், கூத்துக்கள், கொட்டு மேளங்கள் முதலியவை நடக்கும். மறுநாள் விடியற்காலை தல்லாகுளம் பெருமாள் கோயிலிருந்து (சித்ரா பௌர்ணமியன்று) அழகர் குதிரை வாகனத்தில் புறப்பட்டு வைகையை நோக்கிச் செல்வார். புறப்படும் முன்பு ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து சூடிக் கொடுத்த நாச்சியாராகிய ஸ்ரீ ஆண்டாளின் மாலையைச் சாற்றிக் கொள்கிறார். இது தவறாமல் வருடந்தோறும் நடந்து வருவது விசேஷம்.

ஸ்ரீ அழகர் ஆற்றுக்குச் செல்லும பொழுது முதலில் வெட்டிவேர் சப்பரத்திலும், பிறகு மைசூர் மண்டபத்திலிருந்து ஆயிரம் பொன் சப்பரத்திலும் எழுந்து அருளும் காட்சியே கண்கொள்ளாக் காட்சியாகும். ஆற்றில் எழுந்தருளியதும் மதுரை ஸ்ரீ வீரராகவப் பெருமாள் அவரை எதிர்கொண்டு அழைக்கிறார். இந்த வைபவம் அழகர் ஆற்றில் இறங்குதல் என்று சொல்லப்படும்.



பெரிய புராணம் 108 வாரத் தொடர்ச் சொற்பொழிவு நிறைவுவிழா

சென்னை நுங்கம்பாக்கம் அருள்மிகு அசுத்தீசுரர் திருக்கோயில் பெரிய புராணம் 108 வாரம் தொடர்ச் சொற்பெழிவு நிறைவுவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

108 வாரமும் பெரிய புராணத் தொடச்சி சொற்பொழிவிற்குச் சிறப்புற ஏற்பாடுகளைச் செய்திருந்த, திருக்கோயில் செயல் அலுவலர் திருமிகு தெ.ப.ஏகாம்பரம் அவர்களை நம் ஆணையாளர் திருமிகு த.பிச்சாண்டி, இ.ஆ.ப அவர்கள் பொன்னாடை அணிவித்துச்சிறப்பித்தார்கள்.

இதைக் காண இலட்சக்கணக்கான மக்கள் திரண்டு வருவதும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

மதுரையில் இவ்விழாவே மிகப் பெரிய திருவிழா. வெயில், மழை என்று பாராமல் ஜனங்கள் பகலும் இரவும் ஒரு சிறிய இடத்தையும்விடாமல் நிறைத்துக் கொண்டு ஆற்றிலும் அதன் கரைகளிலும் மண்டபங்களிலும் கூடியிருப்பார்கள். பின்பு வைகையாற்றின் வழியாகவே நேராக வண்டியூருக்கும் போகிறார். அங்கு அன்றிரவு தங்கி இளைப்பாறிச் சைத்யோபசாரம் செய்து கொண்டு, மறுநாள் காலை சேஷவாகனத்தில் எழுந்தருளி தேனூர் மண்டபத்தை அடைகிறார். அங்கு தங்கக் கருட வாகனத்தில் காட்சி நல்கி மண்டூக மகரிஷிக்கு மோக்ஷமளிக்கிறார்.

பிறகு அன்றிரவு ராமராயர் மண்டபத்திற்கு எழுந்தருளித் தசாவதார சேவை சாதிக்கிறார். மறுநாள் காலை அழகர் மோகனாவதார சேவையருளி ஆனந்தராயர் பல்லக்கில் ராஜாங்க சேவையுடன் புறப்பட்டு மைசூர் மண்டபத்தில் கள்ளழகர் திருக்கோலத்துடன் புஷ்பப் பல்லக்கு சேவை நடக்கும். மறுநாள் காலையில் ஸ்ரீ அழகர் அப்பன் திருப்பதிக்குச் சென்று திருமலையை அடைவார். மறுநாள் அவருக்கு அங்கு சாத்துமுறை நடக்கும்.

இந்த அழகர் திருவிழா மொத்தம் ஒன்பது நாட்கள். அழகர் மதுரைசக்குப் புறப்படும் முன்பே திருமலையில் அவருக்குத் திருவிழாக்கள் தொடங்கி விடும். அந்தத் திருவிழாவின் 4-ஆம் நாள் மதுரைக்குப் புறப்பட்டு ஒன்பதாம் நாள் மீண்டும் தம்மலைக்குத் திரும்பி விடுவார். அழகர் வைகையாற்றில் தங்கியிருக்கும் படியான மூன்று நாட்களில் இரவும் பகலும் அங்கு சேரும் ஜனக் கூட்டம் கணக்கிட முடியாதது. அங்கே அழகர் அருளுகின்ற பலவிதமான சேவைகளைக் கண்டுகளிக்கவே மக்கள் கூட்டம் திருண்டிருக்கும அப்போது இரவில் வாண வேடிக்கைகளும் விளையாட்டுகளும் ஆரவாரங்களும் அளவின்றி நடக்கும். இவற்றை யெல்லாம் காண, பல மைல் தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்து மக்கள் மாட்டு வண்டிகளில் வந்து, மூன்று, நான்கு நாட்கள் குடும்பத்துடன் தங்கிக் கண்டுக்களித்துச் செல்வர்.

தொண்டர் சீர்பரவுவார்

பெரிய புராணம் பாடிப் பெரும்புகழ் கொண்ட சேக்கிழார் பெருமானையும், பெரிய புராணச் சுவடிகளையும் தம் பட்டத்து யானைமேல் ஏற்றித் தில்லைத் திருநகரின் மாடவீதிகளை வலம் வரச் செய்து, தானும் உடன் ஏறிச் சேக்கிழார் அமர்ந்திருக்கத் தான் நின்று இருந்து தன் இரு கரங்களாலும் கவரி வீசிச் சிறப்பித்தான் அநபாயச் சோழன் என்பதை நமக்கு வரலாறு காட்டுகின்றது.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } திருமிகு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., ஆணையர்.
: தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929

அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்

திருஅண்ணாமலை - 606 601. தமிழ்நாடு. இந்தியா.
WeBsite : www.arunachaleswarar. com
e-mail : dc@arunachaleswarar. com
அலுவலகம் : 252438

விய ஆண்டு 2006 - 2007 பௌர்ணமி கிரிவலம் வரும் நாட்கள்

மாதம்	ஆரம்பம்	முடிவு	கிரிவலம் வரும் நாள்
மே 2006	12.05.06, வெள்ளி பகல் 12.12	13.05.06 சனி பகல் 12.40	12.05.06 வெள்ளி
ஜூன் 2006	10.06.06 சனி இரவு 12.39	11.06.06 ஞாயிறு இரவு 12.06	11.06.06 ஞாயிறு
ஜூலை 2006	10.07.06 திங்கள் காலை 10.54	11.07.06 செவ்வாய் காலை 9.31	10.07.06 திங்கள்
ஆகஸ்ட் 2006	08.08.06 செவ்வாய் இரவு 7.33	09.08.06 புதன் மாலை 5.33	08.08.06 செவ்வாய் செவ்வாய்
செப்டம்பர் 2006	06.09.06 புதன் இரவு 3.37	07.09.06 வியாழன் இரவு 1.15	07.09.06 வியாழன்
அக்டோபர் 2006	06.10.06 வெள்ளி காலை 11.50	07.10.06 சனி காலை 9.26	06.10.06 வெள்ளி
நவம்பர் 2006	04.11.06 சனி இரவு 9.05	05.11.06 ஞாயிறு மாலை 6.59	04.11.06 சனி
டிசம்பர் 2006	04.12.06 திங்கள் காலை 7.59	05.12.06 செவ்வாய் காலை 6.28	04.12.06 திங்கள்
ஜனவரி 2007	02.01.07 செவ்வாய் இரவு 8.52	03.01.07 புதன் இரவு 8.15	02.01.07 செவ்வாய்
பிப்ரவரி 2007	01.02.07 வியாழன் காலை 11.39	02.02.07 வெள்ளி பகல் 12.05	01.02.07 வியாழன்
மார்ச் 2007	03.03.07 சனி அதிகாலை 3.56	04.03.07 ஞாயிறு காலை 5.20	03.03.07 சனி
ஏப்ரல் 2007	01.04.07 ஞாயிறு இரவு 9.05	02.04.07 திங்கள் இரவு 11.02	01.04.07 ஞாயிறு

01. பௌர்ணமி நாட்களில் பொது தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

02. சிறப்புத் தரிசனக் கட்டணம் நபர் ஒருவருக்கு ரூ.20/- (வழி கிழக்கு ராஜகோபுரம்)

03. விரைவு சிறப்புத் தரிசனக் கட்டணம் நபர் ஒருவருக்கு ரூ.50/- (வழி அம்மணி அம்மன் கோபுரம்)

04. சேவார்த்திகள் காணிக்கையாகச் செலுத்த விரும்பும் தானியங்கள் மற்றும் காய்கறிகள் மட்டும் ஸ்ரீசம்பந்த விநாயகர் சன்னதியருகே வைக்கப்பட்டுள்ள காணிக்கை அண்டாக்களில் சேர்ப்பிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதர காணிக்கைகள் வழக்கம் போல் உண்டியலில் செலுத்தவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

05. கிழக்கு ராஜகோபுரத்தின் உட்புறம், சேவார்த்திகள் பிரார்த்தனையினை முன்னிட்டு, ஸ்ரீகம்பத்திளையனார் சந்நிதியருகில், திருக்கோயிலின் மூலம் நெய்தீப விற்பனை நிலையம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆர்.பாஷ்யம்
ஏ.ஜி.இளங்கோவன்

சி.ஜெயராமன்
துணை ஆணையர்/செயல் அலுவலர்

எஸ்.சிவாஜி
திருமதி ஏ.மீரா
அறங்காவலர்கள்

ஏ.சி.முத்தையா
அறங்காவலர்குழுத் தலைவர்



பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

திருச்செந்தூர்

2006 ஆம் ஆண்டு வைகாசி விசாகத் திருவிழா - அழைப்பிதழ்

31.5.2006 முதல் *9.6.2006* முடிய	-	வைகாசி வசந்த உற்சவம் - நாள்தோறும் அருள்மிகு ஜெயந்திநாதர் வசந்த மண்டபத்தில் எழுந்தருளிப் பக்தர்களுக்குக் காட்சி கொடுத்து மாலை தங்கத் தேரில் பவனி வருதல்.
9.6.2006	-	வைகாசி விசாகம். வைகாசி விசாகத்தன்று இரவு அருள்மிகு ஜெயந்திநாதர் வசந்த மண்டபத்தில் எழுந்தருளிப் பராசரமுனி குமாரர்களுக்குச்சாப விமோசனம் அளித்தல்

பக்தர்களுக்குச் செய்யப்பட்டுள்ள வசதிகள்

1. பக்தர்கள் தரிசனம் செய்வதற்குத் தரிசன வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
2. விசாக தினத்தன்று சண்முகப் பெருமானுக்குச்சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடைபெறும்.
3. கார்த்திகையன்று அருள்மிகு ஜெயந்திநாதர் சிறப்பு அபிஷேகம், மாலை திருவிளக்குப் பூஜை, இரவு தங்கரதப் புறப்பாடு நடைபெறும்.
4. சித்திரை முதல் நாள் மற்றும் ஐப்பசி முதல் நாள் அருள்மிகு சண்முகப் பெருமானுக்கு அன்னாபிஷேகம், சிறப்பு வழிபாடு நடைபெறும்.
5. இத்திருக்கோயிலில் பன்னீர் இலை விபூதி பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
6. இத்திருக்கோயிலில் அனைவருக்கும் நல்ல சந்தனம் வழங்கப்பட்டு வருகிறது.
7. ஒவ்வொரு தமிழ் மாதக் கடைசி வெள்ளியன்று *1000* நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.
8. மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் (நன்கொடையாளர் பங்களிப்புடன் கூடிய) அன்னதானத் திட்டத்தின் கீழ் தினசரி 500 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.
9. திருக்கோவிலில் ஞாயிறுதோறும் மாணவர்களுக்கு ஆன்மீக ஒழுக்கநெறி பயிற்சி வகுப்பு, திருக்குறள் பயிற்சி வகுப்பு நடத்தப்படுகின்றது.

வைகாசி விசாகத்திருவிழாவில் பக்தர்கள் கலந்து கொண்டு செந்திலாண்டவர் அருள் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

இரா.முத்துசாமி பி.எஸ்.சி.,பிஎல்.
இணை ஆணையாளர்/செயல் அலுவலர்

டாக்டர் திரு பா.சிவந்தி ஆதித்தனார்
அறங்காவலர் குழுத் தலைவர்.

அறங்காவலர்கள்

மு.இராமச்சந்திரன்

கே.ஆர்.பி. மணிமொழியன்

வி. அண்ணாமலைசுப்பிரமணியன்

ரா.தேவசேனா.